
ஸ்ரீ ராம ஜெயம்

# வைகுந்த திலகம்



ஸ்ரீ சீதா ராம
பரத, லக்ஷ்மண சத்துருக்க ஆஞ்சனேய
சுவாமிகள் திருவடிகளுக்கு சமர்ப்பணம்

260
வைகுந்
பட/PR

அரி
ஓம் நமோ
ஸ்ரீராமஜெயம்
ஸ்ரீமதே ராமாநுஜாய நமக

ஓம்
லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுந மத்யமாம்
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம்.

ஓம்
குருர் ப்ரம்மா குருர் விஷ்ணு
குருர் தேவோ மகேஸ்வரக
குரு சாக்ஷாத் பரப்ரம்மா
தஸ்மை ஸ்ரீ குரவே நமக.

ஓம்
ப்ரஹலாத நாரத பராசர புண்டரீக
வ்யாச ஸாம்பரீச ஸுக ஸெளநக பீஷ்ம தால்பயாந்
ருக்மாங்கத அர்ஜுன வசிஷ்ட விபீஷணா தீந்
புண்யாநிமாந் பரம பாகவதாந் ஸ்மராமி

*— காப்பு —*

ஓம்
பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு - பல கோடி நூறாயிரம்
மல்லாண்ட திணிதோள் மணிவண்ணா - உன் சேவடி செவ்வித் திருக்காப்பு.

*— ஆழ்வார்கள் காப்பு —*


ஓம்
பொய்கை பூதன் பேயார் பொன்மகிழைக்கோன் மாறன்
செய்ய மதுரகவி சேரர் பிரான் - வையகமென்
பட்டர்பிரான் கோதை தொண்டர் பாதப்பொடி பாணன்
கட்டவிழ்த்தார் வாட்கலியன் காப்பு.

*— ஆழ்வார்கள் வாழ்த்து —*

ஓம்
போதமிகும் பொய்கையார் பூதத்தார் வாழியே
புகழ் பேயார் மழிசையர் கோன் புத்தூரான் வாழியே
நாதமுனி தொழும் குருகை நாவீறன் வாழியே
நற்பாணன் கொல்லிநகர் நாதனார் வாழியே
ஆதரிக்கும் தொண்டரடிப்பொடி தாள்கள் வாழியே
அருட்கலியன் மதுரகவி ஆண்டாளும் வாழியே
ஏதமற்ற நாலாயிரப் பனுவல்களும் வாழியே
இவருதித்த நாள்மாதம் எழிற்பதியும் வாழியே.

ஓம்
ஈழத்து ஆழ்வார் ஸ்ரீ ஆயர்பாடி மயில்வாகனம் சுவாமிகளும் வாழி வாழி வாழியே.

ஓம் ஸ்ரீ ராம ஜெயம்



**ஆயர்பாடி ஆழ்வார் ஸ்ரீ . வே. த. மயில்வாகனம் சுவாமிகள்**

# Hindu Samaya Abhivritti Sabha

## இந்து சமய அபிவிருத்தி சபை

**-SWAMI TANTRADEVA -**

FOUNDER PRESIDENT-HINDU SAMAYA ABHIVRITTI SABHA.

**PLEASE PERMIT ME TO EXPRESS**

Condolence on the passing away of SRIMAD AYARPADI SWAMIGAL. In the present day world where only a few, even among the Hindus, are reading and benefiting from SRIMAD - BHAGAVATHAM. AYARPADI SWAMIGAL set an example for others to follow. The teachings of the SRIMAD - BHAGAVATAM are all the more relevant today of the many who worship at VAISHNAVA SHRINES for personal favours. There are only a fraction as blessed as good devotees who listen to lectures on BHAGAVATAM, GITA and UPANISHADS by learned scholars in Vaishnava Philosophy. There are 9 aspects.

| | | |
|---|---|---|
| **SHRAVANA** | - | HEARING STORIES OF VISHNU |
| **KEERTANA** | - | SINGING PRAISES OF THE LORD |
| **SMARANA** | - | REMEMBERING THE LORD |
| **VANDANA** | - | WORSHIPPING |
| **PADASEVANA** | - | |
| **DASYA** | - | SERVICE TO THE LORD |
| **PUJANA** | - | PERFORMING PUJA TO THE LORD'S DIVINE IMAGES |
| **SAKHI JANA** | - | CONSIDERING ONE SELF AS KRISHNA'S FRIEND |
| **AND SAKHI JANA** | - | DEDICATING ONE'S WHOLE LIFE TO THE LORD. |

Most people now are not spiritually advanced. Hence, they need introduction to the first step in Bhakthi - **SHRAVANA**

Ayarpadi Swamigal's lectures were very useful for all devotees, especially the beginners who need a mature interpretation of Krishna Leela. Swamigal's following of Atma Nivedana is an example to all. May his soul rest in VAIKUNTAM.

**OM NAMO NARAYANA!**

SWAMI TANTRADEVA
Trincomalee,
Sri Lanka

ஹரே கிருஷ்ணா

# ஆயர்பாடி ஐயா

– ஸ்ரீமதி. நந்தராணி தேவி –

சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகம், 188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13.

**களைவாய் துயரம் களையா தொழிவாய்**
**களைகண் மற்றிலேன்**
**வளைவாய் நேமிப் படையாய்!**
**குடந்தைக் கிடந்த மாமாயா**
**தளராவுடலம் என்ன தாவி**
**சரிந்து போம் போது**
**இளையாதுனதாள் ஒருங்கப் பிடித்துப்**
**போத இசை நீயே**

அன்றொரு நாள் பதினொரு வருடங்களுக்கு முன்னர் ஸ்ரீரங்கத்திவ்விய தேசத்தில் திருவாய்மொழியைப் புரட்டியபோது - மேற்காணும் பாசுரம் வந்தது. அதைப்படித்தபோது ஆயர்பாடி ஐயா படிப்பது போன்றதொரு உணர்வு - அப்பொழுது அவர் தெல்லிப்பளை ஆயர்பாடி ஆச்சிரமத்தில் இருக்கின்றார். அது எப்படி? இவ்வளவு தொலைவில் இருக்கும் அவர் பாடக் கேட்பது போன்ற உணர்வு ஆம்! அவர் நெக்கு உருகி திருப்பாசுரங்களைப் பாடிக்காட்டி எமக்கு இந்த திருப்பாசுரத்தின் சுவையைக் காட்டியவர். எங்கள் தந்தை அவரை எப்படி மறப்போம்? அவர் ஆயிரத்தில் ஒருவர் இல்லை. பல்லாயிரத்தில் ஒருவர்.

**மனுஷ்யாணாம் சகஸ்ரேசு கச்சித் யததி சித்தயே**
**யததாம் அபி சித்தானாம் கச்சித் மாம் வேத்தி தத்வத:**

*ஆயிரமாயிரம் மனிதர்களில் எவனோ ஒருவன்தான் பக்குவநிலையை நாடுகின்றான். அப்படிப் பக்குவமடைந்தவர்களிலும் எவனோ ஒருவன்தான் அரிதாக என்னை அறிகின்றான்.*

*(ப.கீ.7 – 3)*

**பஹூனாம் ஜன்மனாம் அந்தே ஞானவான் மாம் பிரபத்யதே**
**வாசுதேவ: ஸர்வமிதி ஸ மகாத்மா சுதுர்லப:**

*பல பிறவிகளில் முயற்சித்த பின்னர்தான் ஒருவன் என்னைப்பற்றி அறிந்து என்னிடம் சரணடைகின்றான். வாசுதேவனாகிய நான்தான் காரணங்கள் எல்லாவற்றிற்கும் காரணன் என்பதை அறிந்து எல்லாமாக நினைப்பவன்தான் மஹாத்மா. அப்படிப்பட்ட மஹாத்மா மிக அரிதாகவே உருவாகின்றான்.*

*(ப.கீ.7 – 19)*

**ய இதம் ப்ரமம் குஹ்யம் மத்பக்தேசு அபிதாஸ்யதி**
**பக்திம் மயி பராம் கிறுத்வா மாமேவ ஐஷ்யதி அசம்சய:**

*'பக்திஞானம் எனும் பரமரகசியத்தை பக்தர்களுக்கு எடுத்துச் சொல்பவன் எவனோ அவன் தூய பக்திசேவையைப் பெறுகின்றான் என்பது நிச்சயம். அவன் முடிவில் என்னை வந்தடைகிறான்'*

*(ப.கீ.18 – 68)*

ஆதி பரமபுருஷர் பகவான் கிருஷ்ணர் கூறிய வார்த்தைகளையும் ஆயர்பாடி ஐயாவின் வாழ்வையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அவர் பல்லாயிரத்தில் ஒருவரே. பகவானிடம் சென்றிருப்பார். அதுமட்டுமல்ல எங்களையும் ஆன்மீகப் பாதையில் வழி நடத்துகின்றார். எங்கள் நினைவில் என்றென்றும் வாழ்கின்றார்.

**நானேது முன் மாய மொன்றறியேன்**
**நமன்றமர் பற்றி நலிந்திட்டு இந்த**
**ஊனே புகேயென்று மோதும் போதங்**
**கேதும் நானுன்னை நினைக்க மாட்டேன்**
**வானேய் வானவர் தங்களீசா**
**மதுரைப் பிறந்த மாமாயனே**
**என் ஆனாய் நீ என்னைக் காக்கவேண்டும்**
**அரங்கத் தரவணைப் பள்ளியானே!**

ஆயர்பாடி ஐயா பகவானின் அடியவர்களைப் பார்த்துவிட்டால் அடையும் பூரிப்பை எப்படி எடுத்து விளக்குவது ஆனந்தக்கண்ணீர் பொழிய உடல்நடுங்க அவர்களை உபசரிப்பதால் கண்டவர்கள் மனம் மாறி பகவானின் பக்தர்களாக மாறுகின்றநிலையை உருவாக்கி விடுவார் ஐயா.

தன்னை நாடி வந்தவர்கள் எவரோ அவர்கள் அனைவருக்கும் பகவத் நாமத்தையும் மகிமையையும் கூறி 'இப்போது நாங்கள் பேசும் விடயம் பெரியவிடயம் கிடைக்கமுடியாத விடயம்' என்று முக்கியத்துவத்தை வலியுறுத்தி அவர்களை பகவானிடமே இழுத்துச்செல்வார். எங்களுக்குத் தெரிந்தவரை அவர் பகவத் விடயத்தைத் தவிர வேறெதுவும் பேசியதாகத் தெரியவில்லை. அவருடன் கொஞ்சநேரம் இருந்தாலும் அந்நேரத்தில் பகவத் சுவையை ஏற்படுத்திவிடுவார். அச்சுவை மாறாத சுவை என்றும் இன்பந் தரும் சுவை.

உலகிற்கு இன்பமளிக்கும் ராம நாமத்தையும், விடுதலையளிக்கும் நாராயண நாமத்தையுமே தன் வாழ்வின் மூச்சாகக் கொண்ட ஆயர்பாடி ஐயா அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக என்றென்றும் எங்கள் எல்லோர் இதயத்திலும் வாழ்கின்றார்.

**பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு**
**பலகோடி நூறாயிரம்**
**மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா**
**உன்சேவடி செவ்வி திருக்காப்பு**
**அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி**
**ஆயிரம் பல்லாண்டு**
**வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற**
**மங்கையும் பல்லாண்டு**
**வாடிவார் சோதி வலத்துறையும் சுடர்**
**ஆழியும் பல்லாண்டு**
**படைபோர் புக்கு முழங்கும் அப்**
**பாஞ்ஜசன்னியமும் பல்லாண்டே.**

**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**
**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**

***ஸ்ரீமதி. நந்தராணி தேவி***

ஓம் ஸ்ரீராமஜெயம்

# பிறவிப் பெருங்கடல் நீந்தியவர்

— *வி.சத்தியநாராயணக்குருக்கள்* —

**ஸ்ரீ விஷ்ணு கோவில், தெஹிவளை.**

**"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்**
**இறைவன் அடி சேராதார்"** — *திருக்குறள்*

பிறப்பு என்பது பெருங்கடல். இறைவன் அதைக் கடக்க உதவும் ஒரு தெப்பம். அவர் பாதங்களைப் பற்றியவர்கள் அக்கடலை எளிதாகக் கடப்பர். அவ்வாறே குறள்வழி நின்று அமரர் ஆயர்பாடி ஐயா அவர்கள் கண்ணன் பாதகமலங்களிடத்துச் சென்றடைந்து விட்டார். புண்ணியங்கள் இரு பிரிவு என ஆகமங்கள் கூறுகின்றன. ஆன்மாக்களை நோக்கிச் செய்யப்படும் நல்லசெயல்கள் ஒரு பிரிவு. கோயில்களில் இறை அடியார்களுக்காக செய்யப்படும் புண்ணியம் மறுபிரிவு. இவை பதி புண்ணியங்கள். பதி புண்ணியம் செய்யும் பேறு எல்லோர்க்கும் கிடைப்பதில்லை. 'ஆயர்பாடி' ஐயா அவர்கள் பதி புண்ணியம் செய்யப் பிறவி எடுத்தவர். இப்பிறவியிலேயே இப்புண்ணியத்தையும் செய்து பேறுபெற்ற ஓர் ராமபக்தன். ஆயர்பாடி ஐயா அவர்கள் எமது ஆலயம் வரும்போதே ராமா! ராமா! என்று அழைத்தவண்ணமே வருவார்கள். அவர் தம் வாழ்நாளில் நடமாடும் தெய்வமாகத் திகழ்ந்தவர். அந்தணர் முதல் அடியார்கள் வரை தானதருமங்கள் செய்வதில் ஆயர்பாடி ஐயா அவர்கள் தனக்கு எனத் தனிச்சிறப்பைக் கொண்டவர். இன்று அவரைப் பிரிந்து வருந்தும் அவரது பாரியார், பிள்ளைகளுக்கு ஆறுதல் கூறுவதோடு அவரது ஆத்மா சாந்தியடைய வெங்கடாஜலபதியைப் பிரார்த்தித்து இந்நினைவு மலரை அமரரைக் கவர்ந்த கண்ணனுக்குக் காணிக்கையாக்குவோம்.

துயரத்துடன்,

***வி.சத்தியநாராயணக்குருக்கள்***

*கீதையும் சகஸ்ரநாமமும் பாராயணம் செய்யவேண்டும். மனதை நல்லவர்களின் இணக்கத்தில் சேர்ப்பிக்கவேண்டும். பொருளை ஏழை ஜனங்களுக்குத் தானம் செய்யவேண்டும்.*

*- பஜகோவிந்தம் -*

ஹரே கிருஷ்ணா

# வைகுந்த திலகம்

*— கந்தையா தியாகராஜா —*

**தலைவர், சுவிற்சலாந்து கிருஷ்ணபக்தி கழகம்**

மனிதனாகப் பிறந்த எவருமே மரணிப்பது நிச்சயம். ஆனால் ஒரு மனிதன் தன் வாழ்நாளில் எப்படி வாழ்கிறான் என்பதுதான் முக்கியமானது. ஏனெனில் எமது வாழ்க்கை முறைக்கேற்பவே எமக்கு அடுத்தபிறவி கிடைக்கிறது. இது ஒரு விஞ்ஞானம். ஆனால் எம்மில் ஒருசிலர் ஜடவாழ்க்கையில் ஆழ்ந்த பற்றுக்கொண்டு செயற்படுகின்றனர். கிருஷ்ண உணர்வை மறந்து விடுகின்றனர்.

ஆனால் ஆயர்பாடி ஆழ்வார் ஸ்ரீ.வே.த.மயில்வாகனம் அவர்கள் இளமைப் பிராயத்தில் இருந்தே கிருஷ்ண உணர்வில் ஊறியவர். அல்லும் பகலும் ராமநாமத்தை ஜெபித்தவர். தன் இல்லத்திற்கு வரும் அன்பர்களுக்கும் கிருஷ்ண உணர்வை, ராமநாமத்தின் மகிமையை ஊட்டியவர். ஆச்சிரமம் ஒன்று கட்டி 'ஆழ்வார்கள் ஆச்சிரமம்' என்று பெயர் சூட்டினார்கள். பகவானிடம் ஆழ்ந்த பக்திகொண்ட பன்னிரு ஆழ்வார்களுடைய திருப்பாசுரம் ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் பாராயணம் செய்யப்படும். ஞாயிற்றுக்கிழமைகளில் ராமநாம சங்கீர்த்தனமும், பிரசாத விநியோகமும் அவரது ஆச்சிரமத்தில் விசேடமாக நடைபெறும். ஸ்ரீ ராமநவமி, ஸ்ரீ கிருஷ்ணஜயந்தி உற்சவங்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படும். ஆச்சிரமத்தை விட்டு இடம்பெயர்ந்த காலத்திலும்கூட, பகவத் சேவையை தனது இல்லத்தில் விடாமல் தொடர்ந்தார். இச்செய்கையானது அவரைத் தேடிவரும் மக்களிடையே கிருஷ்ண உணர்வை ஊட்டியது.

**வேதேஷு யக்ஞேஷு தபஸு சைவ**
**தானே ஷு யத் புண்ய பலம் ப்ரதிஷ்டம்**
**அத்யேதி தத் ஸர்வ மிதம் விதித்வா**
**யோகீ பரம் ஸ்தான முபைதி சாத்யம்** **(ப.கீ 8.28)**

'பக்திமயத் தொண்டின் பாதையை ஏற்பவன், வேதக்கல்வி பயிலல், யாகங்கள் செய்தல். தானம் கொடுத்தல், தவம் செய்தல், கர்மஞானப் பாதைகளை மேற்கொள்ளல் இவற்றால் அடையப்படும் விளைவுகளை இழப்பதில்லை. இறுதியில் அவன் பரந்தாமத்தை (உயர்ந்த இடத்தை) அடைகிறான்.' கிருஷ்ணபக்தியில் உள்ளவன் பக்தித் தொண்டில் ஈடுபடுவதாலேயே பல படிகளையும் கடந்து பகவானின் பாதகமலங்களை அடைமுடியும்.

எனவே ஆயர்பாடி ஐயா அவர்கள் தன் வாழ்நாளை பகவத் சேவையில் ஈடுபடுத்திக்கொண்டதன் மூலம் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டார். பகவத்சேவையை விட உன்னதமான செயல் இவ்வுலகில் எதுவுமில்லை.

புத்தாடை புனைந்து இப்புவியில் பாவவினை நீங்க ஹரிநாமம் பாடி ஆன்மீக தீபம் ஏற்றிவிட நேரம் கருதி மீண்டும் ஒருநாள் அன்னார் திரும்பவும் உதயமாவார். அன்னாரின் ஹரிநாம சேவை தொடர்ந்துகொண்டே இருக்கும்.

**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**
**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**

*கந்தையா தியாகராஜா*

ஓம் ஸ்ரீராமஜெயம்

# ‘சொல்லிச் சென்ற புனிதர்’

***— சட்டத்தரணி. கந்தையா நீலகண்டன் —***

பொதுச்செயலாளர், அகில இலங்கை இந்துமாமன்றம்.

இந்த உலகில் ஆறறிவுடன் பிறக்கும் மனிதன் ‘தான் - தன்குடும்பம்’ என்ற சுயநலனுடன் வாழ்க்கையை அனுபவித்துக் மகிழ விரும்புகிறான். அவன் சாதாரண மனிதன் - தெய்வத்தன்மை அற்றவன்.

ஆனால் மனிதர்களில் மாணிக்கங்கள் மற்றவர் நலனே தன்னலன் என்று பொதுநல நோக்குடன் வாழுகின்ற சிறப்பு ஒருசிலருக்குத்தான் கிடைக்கின்றது. அதற்கும் அருள் வேண்டும்.

அருளுடன் அன்பு பாராட்டி மற்றவர்களை வாழவைக்கும் தெய்வமாக உயர்ந்து நின்ற ஆயர்பாடி ஐயா இன்று எங்களுடன் இல்லை என்பது மிகவும் மனவேதனை. ஆனால் போகப்போகிறேன் என்று எங்களுக்கெல்லாம் சொல்லிவிட்டு வைகுண்டம் சென்றடைந்துவிட்ட அந்த புனித ஆத்மா என்றும் உங்கள் உள்ளங்களில் வாழ்வார்.

அவர் காட்டிய வழியில் வாழ்வதே அந்தப் பேருத்தமருக்கு நாங்கள் செய்யக்கூடிய பேரஞ்சலியாகும்.

***சட்டத்தரணி. கந்தையா நீலகண்டன்***

*குருவின் திருவடித் தாமரைகளில் திடமான பக்தி உடையவனாகிப் பிறவித்தளையினின்றும் விரைவில் விடுபடுவாயாக. இங்ஙனம் இந்திரியங்களுடன்கூட மனதையும் அடங்கி உன்னுடைய இருதயத்தில் உறையும் தெய்வத்தைக் காண்பாய்.*

*- பஜகோவிந்தம் -*

ஸ்ரீராமஜெயம்

# பூரணமடைந்த ஒரு சகாப்தம்

*– ஆயர்பாடி மயில்வாகனம் கோபாலகிருஷ்ணா –*

## தோற்றம்

சகலவளங்களும் நிறைந்த இலங்காபுரியின் வடபால் திகழும் யாழ்ப்பாண மாவட்டத்தில் சோழ இளவரசி மாருதப்புரவிகவல்லியின் குறைதீர்த்த அருள்மிகு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் அயலில், இந்தியாவிலிருந்து சங்குகள் பதித்த தோணியில் வந்து சங்குவத்தையில் இறங்கிய ஸ்ரீ தவண்டைக் குருக்கள் ஆச்சாரிய பரம்பரையில் வந்தவர்கள் வேலுப்பிள்ளை தம்பு-மாணிக்கம் தம்பதிகள். திரண்ட சொத்திற்கு அதிபதிகள். நீண்டகாலம் குழந்தைப்பேறில்லாது ஹரிஹரபுத்திரன் ஐயனாரை வேண்டி தவம் செய்ததன் பயனாக 1909ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி சௌமிய வருடம் ஆவணிமாதம் 01ம் தேதி திங்கட்கிழமை இரவு 1 மணி 45 நிமிடமளவில் ஒரு ஆண்குழந்தை பிறந்தது. குழந்தைக்கு மயில்வாகனம் எனப் பெயரிட்டு ஆசையுடன் வளர்த்து வந்தனர் பெற்றோர்.

## குழந்தைப்பருவம்

குழந்தை இயல்பாகவே சுறுசுறுப்பு, விடாமுயற்சி, புத்திக்கூர்மை, ஆளுமை, கருணை கூடியவனாகத் திகழ்ந்தான். தனது கல்வியைத் தெல்லிப்பளை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கற்று வந்தான். ஊழ்வினைப்பயன் காரணமாகப் பெற்றோரின் திரண்டசொத்தும் கரைந்துபோயிற்று. குடும்பப்பாரம் சிறுவனின் தோள்களில் விழுந்தது. சிறிதும் சளைக்காது பொருளீட்டி தனது கடமைகளைச் செவ்வனே செய்துவந்தான். மற்றவர்களை ஈடுபடுத்திச் செய்யும் வேலையில் தலைமைதாங்கி சிறப்பாகத் தொழில் இயற்றிவந்தான். இவற்றில் இளவாலை கன்னியர்மடத்துத் தாயார் பிலோமினா இளைஞனின் சாதுரியத்தை மெச்சியதுடன் தனது கிறிஸ்தவமதத்திற்கு மாறும்படி கேட்டபோது பணிவுடன் மறுத்த இளைஞனின் மதப்பற்று அம்மையாரை மெய்சிலிர்க்க வைத்தது. அத்துடன் ஜோதிடக்கலையைப் பயின்றுவந்தான். கிராமியக் கூத்துக்கலையில் ஈடுபட்டு குறத்திவேடம், கள்வன் வேடம், விதூஷகன் வேடம் ஏற்று நடித்து தனக்கென ஓரிடத்தை ரசிகர்களிடம் பெற்றுக்கொண்டான்.

## தொழில்

தொழில் விருத்தியாகி, கட்டட ஒப்பந்தக்காரராக பொது வேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் இவற்றில் சேவை செய்து வரலானான். இவற்றில் ஏறக்குறைய 40 நீர்ப்பாசனக் குளங்களை புனரமைத்து அவற்றினால் இன்றும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தமது ஜீவனோபாயத்தைப் பெறுவது அவரின்

சமூகசேவைக்கு சான்று பகர்கின்றது. அனேகமாக எல்லாக் குளங்களும் சனசஞ்சாரமற்ற காட்டினூடாகப் பலமைல்கள் கடந்து சென்று செய்த வேலைக-ளாகவே அமைந்தன. அவற்றைக் காலநீடிப்பு பெறாமல், குற்றம் குறையின்றி நேரத்துடன் செய்துமுடித்தமை கவனிக்கற்பாலது. எந்தவேலையை எடுத்தாலும் ஊண்உறக்கமின்றி அதனை ஒப்பேற்றிய பின்னரே ஓய்வு எடுப்பது அன்னாரின் சிறப்பு அம்சமாகும்.

### இல்லறவாழ்வு

திருமணப்பருவம் வந்ததும் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த இளையதம்பி - மாரிமுத்து தம்பதிகளின் புதல்வி இலட்சுமியைத் திருமணம் செய்து 4 ஆண்கள், 4 பெண்களாக எட்டுப் பிள்ளைகளைப் பெற்று வளர்த்தார். பிள்ளைகளைத் தன்னால் இயன்றவரை கல்வியில் முன்னேற்றியும், ஆன்மீகவாழ்வின் பெருமைகளை எடுத்துக்கூறி நல்வழிப்படுத்தியும் வந்தார்.

ஒப்பந்தவேலையை ஓரளவில் கைவிட்டுத் தான் இளமையில் கற்ற சோதிடக் கலையை கைக்கொண்டு ஆயிரக்கணக்கான மக்களுக்கு துன்பம் நீக்கி நல்வழிகாட்டி சேவை செய்தார். இலங்கையில் முதன்முதலாக 'ஆயர்பாடி சோதிட நிலையம்' ஒன்றை ஸ்தாபித்து ஜோதிட பலாபலன் வெளியீடுகளையும் வெளியீடுசெய்து ஜோதிட உலகின் முன்னோடியானார்.

### சத்சங்கமும் ஆன்மீகவாழ்வும்

ஒரு தடவை வண்ணார்பண்ணை ஸ்ரீ வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் பூஜையின் பின்னர் ஓதுவார் நாலாயிரத் திவ்விய பிரபந்தம் பாராயணம் செய்த போது அதனால் கவரப்பட்டு இப்பாடல்கள் எங்கே இருக்கின்றன என்று விசாரித்த போது அக்காலம் தர்மகர்த்தாவாக இருந்த ஸ்ரீ.சி.பொ.செல்லையா அவர்கள் தன்னிடமிருந்த நாலாயிர திவ்விய பிரபந்தம் பிரதியை கொடுக்க அன்புடன் பெற்று அன்றிலிருந்து ஸ்ரீ நாராயணமூர்த்தி மேல் மாறாத பக்தியும் அன்பும் கொண்டு பூஜித்து வரலானார். அடியார்கள், பாகவதர்களைக் கண்டால் அன்பு மேலிட, கண்ணீர்சொரிய வணங்கி உபசரிப்பதும், அவர்களிடம் பகவானின் பக்தலீலைகளைப் பேசி மகிழ்வதாலும் பக்திப் பயிர் வளர்ந்தது. இலங்கையில் உள்ள புனித ஆலயங்களுக்குச் சென்று தரிசிப்பதுடன் அடியவர்களுக்கு அமுது படைப்பதும், அவர்களுடன் பகவானுடைய லீலைகளைக் கதைப்பதிலும் ஆனந்தம் அடைந்தார்.

### குரு உபதேசமும் ஆன்மீகப் பணியும்

முன்செய்த தவப்பயன் காரணமாக அவருக்குக் கொழும்புத்துறை தவத்திரு சிவயோக சுவாமிகளின் உபதேசம் கிடைத்தது. ஆன்ம ஈடேற்றத்திற்கான பயிற்சிகளைச் செய்ததுடன் தான் பெற்ற இனிய அனுபவங்களை மக்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டி ஆயிரத்திற்கு மேற்பட்ட சைவ, வைணவப்

பிரசங்கங்களை நாட்டின் பல பாகங்களிலும், நகரங்களிலும், பட்டிதொட்டிகளிலும் நிகழ்த்தி வந்தார். 1963ல் மேற்கொண்ட தென்னிந்திய யாத்திரையின்போது புனிதமான ஆலயங்களையும் பூஜ்யர்களையும் தரிசித்து ஆசிபெற்று தன்னை மேம்படுத்திக் கொண்டார்.

**இல்லறச்சிறப்பும் தவநிலையும்**

குடும்பம் விருத்தியடைந்து, மருமக்கள் வந்துசேர்ந்து பேரப்பிள்ளைகளும் உண்டாயினர். எல்லோருக்கும் சிறப்பாக உண்மை வைணவர்களாக வாழவேண்டிய அவசியத்தினை எடுத்துக்கூறி நல்வழிகாட்டி வந்தார். இல்லறஞானியாகப் பற்றற்று, பகவான் ஸ்மரணையுடன், இறைவனின் நினைவாகவே வாழ்ந்து வந்தார். பிள்ளைகளில் மூவர் வெளிநாடு சென்று வசித்து வரலாயினர். ஆயர்பாடி ஆழ்வார்கள் ஆச்சிரமம், ஸ்ரீராம பக்திக்கழகம் இவற்றை ஸ்தாபித்து தெல்லிப்பளையில் தமதில்லத்தில் ஒரு கோடியே 20 இலட்சம் ராமநாமங்கள் எழுதிவித்து அதனைப் பரப்பி அதன்மேல் ஸ்ரீராமபிரானைப் பிரதிஷ்டை செய்து பூஜை வழிபாடு செய்து வரலானார். யார் வந்தாலும் உபசரித்து, தங்கிச் செல்லும்படி அன்புடன் வேண்டினார்.

**துறவு வாழ்க்கையும் தீர்க்கதரிசனமும்**

1990ம் ஆண்டு தனது துணைவியாருடன் கொழும்பு வந்து யாருடனும் தங்காமல் தனியே தங்கியிருந்து தனது துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். தனது இறைவணக்கத்தையும், சாதனையையும் மேற்கொண்டதுடன் வரும் அன்பர்களுக்கு நல் உபதேசமும் செய்துவந்தார். தனது விடுதலைப்பேற்றிற்கான காலத்தினை முன்கூட்டியே அறிந்துகொண்டு அதற்குத் தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும் தயார்படுத்திவந்தார். 89 குறைவான எண் ஆனால் 90 பூர்த்தியான எண் ஆகவே வெகுதானிய வருடம் தனது 90வது வயது ஆரம்பித்ததும் விடுதலை கிடைக்கும் என்று முன்கூட்டியே அறிவித்ததுடன் அதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தார். 1998-08-20ம் திகதி வியாழன் அதிகாலை 5.30 மணியளவில் கபாலம் திறந்து ஆன்ம பேரொளி பாயவும் சமாதிநிலை எய்தி எமது கடமைப்படி வைத்தியசாலை கொண்டுசென்று அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளித்த போதும் அவர் ஏற்கனவே கூறியிருந்தபடி பக்கத்தில் உறவினர் யாரும் இல்லாத வேளையில், நண்பர் ஒருவர் அருகிலிருந்து 'ராம ராம' என்று நாமம் ஜெபிக்க, ஆன்மா மெதுவாகக் கழன்று வைகுந்தம் சென்றார். கடும் உழைப்பும், ஆன்மீக சாதனையும், கருணைமிக்க வள்ளலாகவும் திகழ்ந்த ஒரு சகாப்தம் பூரணம் எய்தியது. பூதவுடல் அழிந்தாலும் நீங்கள் எந்நேரம் எங்கிருந்து அழைத்தாலும் உடன் வந்து என்னவென்று கேட்பேன் என்று கூறிய குருநாதன் எந்நேரமும் எங்களை வழிநடத்திச் செல்வார் என்பதில் ஐயமில்லை.

**ஆயர்பாடி மயில்வாகனம் கோபாலகிருஷ்ணா.**

ஓம் ஸ்ரீராமஜெயம்

# ஆத்மீக பிதா

***— ஆயர்பாடி மயில்வாகனம் ஸ்ரீகிருஷ்ணா —***

எங்கள் பிதா மற்றைய எல்லாப் பிதாக்களையும் விட வித்தியாசமானவர். ஆம்! நடை, உடை, பாவனை மட்டுமல்ல அவரின் தோற்றமும் பார்ப்பவரைக் கைகூப்ப வைக்கும் தன்மையது. 5 அடி 09 அங்குல உயரமும், கிட்டத்தட்ட 150 கிலோகிராம் நிறையும் கொண்டிருந்தார். அவர் எங்கு நின்றிருந்தாலும் பளிச்சென்று தெரிவதுடன் அவர் இருக்குமிடம் பொலிவாகவும், கலகலப்பாகவும் காணப்படும். ஒலிபெருக்கி இல்லாமலே கணீரென்று ஒலிக்கும் குரல்வளம், தெளிவான சொல்லுறுதி, கேட்போரைக் கவர்ந்திழுக்கும் தன்மையது. அத்தகைய சிறப்புக்களால் ஆரம்பத்தில் சிறந்த மேடைக்கலைஞனாகத் திகழ்ந்ததாகவும் சொல்லக் கேட்டதுண்டு. அவரே தான் குறத்தியாக வேடமிட்டு நடித்ததை ''குண்டுடுக்கி குடுகுடுக்கி குடுவை கையில் ஏந்தி, குனிந்து நின்று பழம் பொறுக்கும் குறத்தியடி நாங்கள்'' என்று மிக உற்சாகமாக இருக்கும் நேரத்தில் எமக்குப் பாடி ஆடிக்காட்டியது இப்பவும் என் கண்முன்னே நிற்கிறது. அதுமட்டுமல்ல கீரிமலைக்கேணியில் சாகசங்களும் செய்வார். ஒருநாள் எம்மைக் கேணி வாய்க்காலில் குளிக்கும்படி அம்மாவுடன் விட்டுவிட்டு தான் கேணியினுள் குளிக்கப்போய்விட்டார். சிறிது நேரத்தில் கேணியைச் சுற்றி சனக்கூட்டம் வேடிக்கை பார்ப்பது தெரிந்தது. நாமும் சென்று பார்த்தபோது, ஐயா கைகள் இரண்டையும் தலைக்குப் பின்புறம் அணையாகக் கட்டியபடி மரக்கடைபோல் மிதந்துகொண்டிருந்தார். உடலில் அசைவேயில்லை. அவரது பேழை வயிறு மட்டும் பெரிதாகத் தெரிந்தது. நாம் பயந்து அழுதுவிட்டோம். எமது அழுகுரல் கேட்டுக் கண்விழித்த அவர் தான் நீரின்மேல் தியானம் செய்யும்போது நிறைவான ஆத்மசுகம் தெரிகிறது எனக்கூறியது எமக்கு அப்போது சரியாக விளங்கவில்லை.

எனக்கு உலக விடயங்கள் புரியத் தொடங்கியபோது அவரை முற்றுமுழுதான ஆன்மீகவாதியாகவே கண்டேன். எமது வீட்டில் தனியான சுவாமி அறை இருக்கும். அதில் மேசையிலே 4′ x 3′ அளவான ஒரு பெரிய கீதா சொரூப படமும் அதன் முன்னால் களிமண்ணினால் செய்யப்பட்ட 2′ உயரமான அழகான ஒரு கிருஷ்ணா சிலை, அவர் கையில் சுத்த வெள்ளியினாலான ஒரு புல்லாங்குழல், அக்கிருஷ்ணாவுக்கு முன்னால் ஒரு வேலைப்பாடமைந்த பித்தளைத் தட்டினுள் 1′ x 3/4′ அளவிலமைந்த சிவப்புநிற மாணிக்கத்தினாலான ஒரு பிள்ளையார், வெள்ளியினாலான சக்கரம், அழகாக மெருகூட்டப்பட்ட சங்கு போன்றவை காணப்பட்டன. அதே அறையினுள் ஐயா பலமணிநேரம் ஜெபம்செய்து பிரார்த்தனை செய்ததாக அம்மா கூறுவார். நாம் மிகச்சிறுவயதில் அப்பொருட்களின் அழகை வேடிக்கை பார்ப்பதுண்டு.

எமது ஐயா மகாவிஷ்ணுவையே முழுமுதற் கடவுளாக வணங்கினாலும் ஸ்ரீராமரையே அவர் இருபத்துநாலு மணிநேரமும் தியானித்தவண்ணம் வாழ்ந்தார். அதற்கு அவர் சிறுவயதிலேயே ஸ்ரீமத் கம்பராமாயணத்தை ஆழ்ந்து படித்து, அதில் ஊறியதே காரணமாகும். அம்மாவின் கூற்றுப்படி திருமணத்திற்கு முன்பே, அவர் விஷ்ணு வழிபாட்டினைக்

கைக்கொண்டு வந்துள்ளார். ஆயினும் அதற்கு முன் சிறுவயதிலிருந்தே தீவிர முருக பக்தராக இருந்துள்ளார். அவரது பரம்பரையே மாவை கந்தனுக்கு சேவை செய்துவந்த விலாட சங்கிலி தவண்டை குருக்கள் ஆச்சாரியார் வழிவந்தவர்கள் ஆதலால் முருகபக்தி இயல்பானதே. எமது ஐயா எதிலும் அதி தீவிர ஈடுபாட்டுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுபவர் ஆதலால் முருகபக்தியிலும் சிறந்து விளங்கினார். அவரது பாட்டனார் முருகப்பா என்பார் சிறந்த முருகபக்தர் என்றும் தனக்குப் பலவழிகளாலும் சிறுவயதிலேயே ஆத்மீகத்தினை ஊட்டினார் என்றும் அடிக்கடி கூறுவார். ஐயாவின் இளமைக்கால முருகபக்தி காரணமாக திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, கந்தரலங்காரம், கந்தரனுபூதி போன்றவை முழுமையாக மனப்பாடம் செய்திருந்தார். இவற்றிலிருந்து சில செய்யுள்களை தமது கதாப்பிரசங்கங்களின்போது எடுகோள்களாக எடுத்துக் கூறியதை நான் கேட்டிருக்கின்றேன். அது மட்டுமல்லாமல் தனது 89வது வயதிலும் அவற்றினை வரி பிசகாது பாடியதைக் கண்டு அவரது ஞாபகசக்தியின் ஆழத்தை வியந்திருக்கின்றேன். அவை மட்டுமல்ல தாயுமானவர் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள், சித்தர் பாடல்கள் போன்றவற்றையும் சிறுவயதிலேயே மனப்பாடம் செய்திருந்தார். இவை மட்டுமல்லாது விநாயகர் அகவல், கந்தசஷ்டி கவசம், தேவாரம், திருவாசகம் ஆகியவை எல்லாம் சிறுவயதிலேயே கற்றுத் தெளிந்தவை.

நான் ஒருமுறை அவரிடம் ‘இவ்வளவு தூரம் ஆழமாக முருகபக்தி செய்த நீங்கள் எவ்வாறு ராம பக்தரானீர்கள்?’ என்று கேட்டதற்கு அவர் கூறிய பதில் என்னை வியக்க வைத்தது. முருகபக்கி காரணமாக திருப்புகழில் ஊன்றியவேளை அதில் எல்லா செய்யுட்களிலும் திருமுருகனின் நெடிய மாமனாரைப் புகழ்ந்து, மகிமைகளை உரைத்து மருகோனே என முருகனை விழிப்பதால் மாமனாரின் பெருமையை உணர்ந்து பக்திகொண்டதாகக் கூறினார். அத்துடன் அண்மைக் காலத்தில் அவர் ‘‘ஒருவன் எந்த தெய்வத்தை வணங்கினாலும் இறுதியில் கிருஷ்ணபக்திக்கே வந்துசேர வேண்டும்’’ எனக் கூறிவந்தது பொருள் பொதிந்தது.

ஐயா கம்பராமாயணத்தை கதாபிரசங்கம் செய்வதற்காக மட்டுமே மனனம் செய்திருந்தால சில தெரிவுசெய்யப்பட்ட பாடல்களை மட்டுமே பயின்றிருப்பார். ஆனால் ஸ்ரீராமாயண கதாப்பிரசங்கத்தினை ஓர் பக்திச் சேவையாகவே செய்துவந்ததால், கம்பராமாயணத்தின் எல்லாச் செய்யுட்களுமே அவருக்கு மனப்பாடம் ஆயின. அதுமட்டுமல்ல, ‘வில்லிபாரதம்’, ‘நாலாயிர திவ்விய பிரபந்தம்’ ஆகியனவும் மனப்பாடம் ஆகியிருந்தன. இவற்றுடன் ‘பகவத் கீதை’, ‘ஸ்ரீமத் பாகவதம்’, ‘பக்தவிஜயம்’, ஆகிய அரும் நூல்களையும் கற்றுத் தெளிந்திருந்தார். அவரின் பக்தித் தொண்டின் வெற்றிக்கு அவரது அபார ஞாபகசக்தி, கதைசொல்லும் ஆற்றல், சிரத்தை, தவம் என்பன முக்கிய காரணங்களாகும். அவரது ஞாபகசக்தியினைக் குறிப்பிடும்போது ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டேயாகவேண்டும். ஒருநாள் தெல்லிப்பளையிலுள்ள ஆயர்பாடி ஆழ்வார்கள் ஆச்சிரமத்தில் காலைப் பூஜை முடித்து வெளியிலுள்ள வாங்கில் அமர்ந்திருக்கிறார். ஒரு அன்பர் ஜாதகம் பார்க்கவேண்டுமென கோருகின்றார். ஐயாவிற்கோ அப்பொழுது கண்பார்வை தெரியாது. (பின்னர் சத்திரசிகிச்சை

மூலம் கண்பார்வை தெரியவந்தது.) நான் சென்றால் கூட யார்? என்று கேட்பார். நான் ஸ்ரீ வந்துள்ளேன் எனப் பதிலளித்தால்தான் தெரியும். அவ்வாறான நிலையில் எவ்வாறு ஜாதகம் பார்க்கப் போகிறார் என எண்ணியவண்ணம் அவதானித்துக் கொண்டிருக்கிறேன். ஜாதகத்தை வாங்கினார். ருக்மணி! வா! என என் தங்கை ஒருவரை அழைத்து இதனைப் படி என்கிறார். தங்கையும், கடகலக்கினம், 3ல் சூரியன், 4ல் சந்திரனும் சுக்கிரனும் எனப் பன்னிரெண்டு வீட்டிலும் ஒன்பது கிரகங்களும் எவ்வாறு உள்ளன என்பதை வாசிக்கிறார். ஒருமுறைதான் படித்தார் ஆனால் அத்தனையும் ஒரு கம்பியூட்டரில் பதிந்தது போல மனதில் பதிந்து அதனைத் திரையில் பார்ப்பதுபோல் மனதில் பார்த்துக் கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் அவரது ஜாதகத்தை அலசி ஆராய்ந்து அவர் சொல்லச் சொல்ல தங்கை பலன் எழுதிக் கொடுத்ததைப் பார்த்து வியந்திருக்கிறேன். சோதிடத்துறையில் அவருக்கு என்னென்ன நூல்களில் பரிச்சயம் இருந்தது என்பதை நான் கூறுவதைவிட அவரது சோதிட வாரிசான ராமண்ணா கூறுவதே பொருந்தும் என்பதால் அதை அவரிடமே விட்டுவிடுகிறேன்.

ஐயா அவர்கள் 1944ற்குப் பின் தன்னை முழுமையாகவே விஷ்ணு பக்தியில் ஈடுபடுத்திக் கொண்டார். அதன் பின் பிறந்த பிள்ளைகள் அனைவருக்கும் கிருஷ்ணாவின் நாமத்தையே இட்டார் அதுமட்டுமல்லாமல் பேரப்பிள்ளைகட்கும் அவ்வழி பெயரிட்டதுவும் ஓர் சிறப்பு.

எனக்கு உலகம்தெரிந்த நாள்முதலாய் ஐயா முழுமையான ஆன்மீகவாதியாகவே காணப்பட்டார். அதற்கேற்பவே அவர் தொழிலும் அமைந்தது. சோதிடம் பார்க்க வந்தவர்களையெல்லாம் ஆத்மீக வழியில் இழுத்து ராமபக்தர்களாகவே மாற்றிய பணி சாதாரணமானதொன்றல்ல. இதற்கு சான்று பகர்வது அவர் எழுதிவந்த 'ஸ்ரீராமஜெயம்' லிகித ஜெப கொப்பிகளே ஆகும்.

**நன்மையும் செல்வமும் எந்நாளும் நல்குமே**
**தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே**
**சென்மமும் மரணமும் இன்றி தீருமே**
**இம்மையே ராம என்ற இரண்டு எழுத்தினால்.**

என்று எழுதி முதல் வரியினைத் தானே தொடக்கிக் கொடுப்பார். கொப்பிகள் மலைபோல் சேர்ந்தன. ஒரு நாள், எழுதிச் சேர்க்கப்பட்ட லிகித ஜெபங்களை கணக்கெடுக்கும்படி எமக்குக் கட்டளையிட்டார். பத்து, பனிரெண்டு நாட்கள் தொடர் கணக்கெடுப்பின் பின்னர் மொத்த எண்ணிக்கை 99 இலட்சத்தினைத் தாண்டி இருந்தது. அதனை ஒரு கோடி ஆக்க விரும்பி மிகுதியைத் தானே எழுதத் தொடங்கினார். அப்போது நாம் பிள்ளைகள் அனைவரும் சேர்ந்து எழுதி ஒரு கோடி பூர்த்தியானதும் இவை வீட்டில் வைத்திருக்கக்கூடியதொன்றல்ல என்பதால் இதற்கென தனியான இடம் வேண்டுமென விரும்பி 1984இல் புதிய ஆயர்பாடி ஆழ்வார்கள் ஆச்சிரமத்தை அமைத்து அன்றிலிருந்து 1991ல் இடம்பெயரும் வரைக்கும் அவ்வாச்சிரமத்திலேயே வசிக்கலானார். கணவனின் குடிலே தன் அரண்மனை என வாழ்ந்து வந்த அம்மாவும் ஆச்சிரமத்திலேயே குடிபுகுந்தார்.

ஐயா திருமணம் செய்து பிள்ளைகுட்டிகளைப் பெற்று இல்லறத்திலே வாழ்ந்தாலும் அவரது வாழ்க்கை மற்றவர்களைப்போல் அல்லாது வித்தியாசமானதாகவே இருந்தது அவரது பொழுதுபோக்கும் ராமநாமம்தான். ஆத்மீக வாழ்க்கைமுறையினைக் கடைப்பிடித்ததால் உற்றார், உறவினர், அயலவர், நண்பர்களின் சுப மற்றும் அசுப கிரியைகளில் அவரால் கலந்துகொள்ள முடியாத நிலையில் அம்மாவுடன் எங்களையும் அனுப்பி வைப்பார். அதனால் சிலர் ஆரம்பத்தில் மனஸ்தாபப் பட்டதுண்டு. ஆனால் பின் அவரின் ஆன்மீக நிலையை நன்கு உணர்ந்து ஏற்றுக்கொண்டார்கள். அவர் ஏதாவது சபைசந்தியில் உணவு அருந்தினார் என்றால் அது இறைவனுக்குச் செய்யப்பட்ட பிரசாதமாகவே இருக்கும். யாராவது அன்பு மிகுதியால் விருந்துக்கு அழைத்தால் நீங்கள் ஒரு பூஜை வையுங்கள் நான் வந்து பூஜைசெய்து உணவு அருந்துகிறேன் எனக் கூறி, அவ்வாறே பூஜை செய்து ஆசீர்வதித்து போஜனம் செய்து வந்திருக்கின்றார். 1993 ஏப்பிரலிற்குப் பின் கடந்த ஐந்து வருடங்களில் ஐயாவும் அம்மாவுமாக இரண்டேயிரண்டு நாட்கள்தான் எனது வீட்டில் பிரசாதம் ஏற்றிருக்கின்றார்கள். அதுவும் அங்கு நடந்த ராம பூஜையின்போதேதான்.

எங்கெல்லாம் விஷ்ணு பக்தர்கள் காணப்படுகிறார்களோ, யாரெல்லாம் ராமநாமத்தை ஜெபிக்கின்றார்களோ அவர்களை எல்லாம் தேடி, நாடி உறவுகொள்வார். அவர்களை எமது வீட்டுக்கு அழைத்து உபசரித்து மகிழ்வார். நாமெல்லாம் அறியாப் பருவத்தில் சிறு பிள்ளைகளாக இருந்த காலத்தில் இத்தகைய அடியார்கள் எமது இல்லம் ஏகினால் முதலில் எம்மையெல்லாம் அப்பெரியோர்களின் பாதங்களில் விழுந்து நமஸ்கரிக்கச் செய்வார். அவர்களும் எமது நெற்றியில் திருநாமம் இட்டு ஆசிர்வதிப்பார்கள். இவ்வாறு 60களில் அவர் பழகியவர்களில் தெல்லிப்பளை பாண்டுரங்கன் சுவாமி, இணுவில் தியாகராஜா சுவாமி, காங்கேசன்துறை ஜோதி சுவாமி, கோப்பாய் சுவாமி போன்றோருடன் சிறந்த பக்தர்களான பெருமாள் கோவில் தியாகராஜா, பொன்னாலை நாராயணதாசன், மட்டுவில் ஸ்ரீராமஜெயம் நாகலிங்கம், கந்தர்மடம் வ.சி.சி.கு.பிரம்மானந்தா, வட்டுக்கோட்டை கோகுலம் பாலசுப்பிரமணியக் குருக்கள், ஆத்மஜோதி முத்தையா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். 50களில் இருந்து ஐயாவுடன் சேர்ந்து ஆத்மீகத் தொண்டாற்றிய ஒரே ஒரு உறவினர் தம்பிராஜா மாமா ஆவர். ஆரம்பத்தில் சைக்கிளில் வண்ணார்பண்ணை பெருமாள் கோயிலுக்கு இருவரும் சென்று வழிபட்டார்கள். வாகனவசதி பெற்றபின் ஞாயிற்றுக் கிழமைகளில் தத்தமது குடும்பத்தாருடன் வல்லிபுரக்கோயிலுக்குச் சென்று பொங்கிப் படைத்து திருவாய்மொழி பாராயணம் செய்வதுடன் இடைக்கிடை அங்குள்ள மடங்களில் அன்னதானமும் செய்துவந்தது இப்போதும் எனக்கு ஞாபகம் வருகின்றது. அதுமட்டுமின்றி எமது வீட்டில் நடக்கும் பூஜைகளிலும் தம்பிராஜா மாமா தவறாது கலந்து கொள்வதுடன் தனது வீட்டிலும் அடிக்கடி பூஜைகளை ஒழுங்குசெய்து நாமாவளி பஜனை, பிரார்த்தனை-களையும் செய்விப்பார். அவ்வாறான பூஜைகளிலெல்லாம் குறைந்தது 50 அடியார்கள் கலந்துகொண்டு பிரசாதம் உண்டு செல்வார்கள். அத்துடன் ஐயாவின் ராமாயணக் கதாப்பிரசங்கங்கள் எங்கெல்லாம் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் அதிகமாக அமரர் தம்பிராசா மாமாவும் கலந்துகொள்வார். 1962இல் ஐயாவின் சொந்த ஊரான மாவிட்டபுரத்தில் காளி அம்பாள் கோயிலில் 15 நாட்கள் ராமாயண கதாப்பிரசங்கத்தை திரு.ந.சிவகுரு ஓவசியருடன் சேர்ந்து நடாத்தி வைத்தார். சில காரணங்களுக்காகத் தனது சொந்த

ஊருக்குச் செல்லாதிருந்த ஐயா முதன்முதலாகக் கதாப்பிரசங்கம் செய்யப்போன முதல்நாள் அவரை மாலை மரியாதைகளுடன், மேளதாளத்துடன் தெல்லிப்பளை சந்தியிலிருந்து அழைத்துச் சென்றதை மறக்கமுடியாது என அம்மாவும் அக்காவும் கூறுவார்கள்.

திருப்பாசுரங்கள் மூலம் தென்னிந்தியாவிலுள்ள விஷ்ணு தலங்களை அறிந்திருந்த ஐயா அத்தலங்களுக்கு 1963 ல் சென்று தரிசிக்க விரும்பியபோது ஐயாவுடன் தானும் கூட தல யாத்திரை சென்று வந்தவர் அமரர் தம்பிராசா மாமா. போகும்போது தலைமன்னாரி-லிருந்து கப்பலில் ராமேஸ்வரம் சென்று வரும்போது விமானத்தில் திருச்சியிலிருந்து பலாலி வந்து இறங்கினார்கள். ஸ்ரீரங்கம், திருப்பதி ஆகிய சேத்திரங்களுக்கு சென்று வந்ததால் அவரது ஆத்மீக வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டதாகக் கூறுவார். இதுவே அவர் செய்த முதலும் கடைசியுமான இந்திய தல யாத்திரையாகும். ஐயா ஸ்ரீரங்கத்தில் பித்தனைப்போல் திருவாய் மொழியினை பாடி அரற்றியபோது ஸ்ரீரங்கத்தின் பிரதமகுருவாகிய ஸ்ரீரங்கராஜ பட்டர் இவரது பக்திநிலையைக் கண்டு மனமுருகி அரங்கநாதருக்கு முன்னிருந்த இரும்புச் சங்கிலியை விலக்கி இவரை உள்ளே அழைத்து நீ வேண்டிய மட்டும் வேண்டுதல் செய் என்று கூறியது மட்டுமல்லாமல் இவரைத் தன் இல்லம் அழைத்து தங்கவைத்து உபசரணை செய்து திரு அரங்கநாதருக்கு சூடிய பஞ்சரட்ண மாலையையும் அளித்ததாக அடிக்கடி கூறுவார். இதனை 22 வருடங்களுக்கு பின் நானும் பெரியண்ணாவும் 1985ல் ஸ்ரீரங்கத்திற்குப் போனபோது உணர்ந்துகொண்டோம். ஏனெனில் நாம் போகும்போது ஐயா, ஸ்ரீரங்கராஜ பட்டருக்கு ஒரு கடிதம் கொடுத்திருந்தார். அதனை நாம் மேலைச் சித்திர வீதியிலுள்ள அவரது வீட்டில் சென்று கையளித்தோம். அப்போது ஸ்ரீரங்கராஜபட்டர் சுகவீனமுற்று படுக்கையிலிருந்தார். கடிதத்தைக் கண்டதும் விரைந்து எழுந்து படித்து ஆனந்தமடைந்தார். அத்துடன் தனது மூத்த மகனான திரு.நரசிம்ம பட்டரை அழைத்து திருஅரங்கன் அடியாரின் பிள்ளைகள் இவர்களை கோயிலுக்கு அழைத்துச்சென்று ஆவனசெய் என்று கூறியதுடன் எம்மை தம் இல்லத்திலேயே தங்க வைத்து போசனம் அளித்து உபசரித்ததை மறக்கமுடியாது. அப்போதே நாம் ஐயாவுக்குப் பிள்ளைகளாக பிறந்ததையிட்டு மகிழ்ந்தோம். திரு. ரங்கராஜபட்டர் ஸ்ரீஜீயர் சுவாமிகளை ஐயாவுக்கு அறிமுகம் செய்து வைத்தபோது தனக்கு உபதேசம் செய்தருள வேண்டுமென ஐயா வேண்ட, ஜீயரும் காவிரிக் கரைக்கு வா எனக் குதிரை வண்டியில் அழைத்துச்சென்று அரங்கன் நாமத்தை என்றும் பாடு என்று ஆசிர்வதித்ததாக அடிக்கடி கூறுவார்.

1950களில் ஐயா ஆத்மீகத் தாகத்தில் அலைந்தபோது கொழும்புத்துறை சிவயோக சுவாமிகளிடமும் சென்று வருவதுண்டு. அப்போது அவர் தம்மை ஏசி கலைத்ததாகவும், இருந்தாலும் அவரின் ஆத்மீக ஞானத்தின் காரணமாக தான் மீண்டும் மீண்டும் அவரின் கருணை வேண்டி சென்றதாயும் கூறுவார். ஒருநாள் ஐயா தெல்லிப்பளையிலிருந்து காரில் யாழ்ப்பாணம் செல்லும்போது 8ம் கட்டையடியில் துர்க்கை அம்மன் கோயிலுக்கும் முன்னால் தவத்திரு யோகர்சுவாமிகள் வேகமாக யாழ்ப்பாணம் நோக்கி நடந்து செல்வதைக்கண்டு இந்த மகானைத் தனது காரில் ஏற்றிச் செல்லக் கிடைக்காதா என ஏங்கியவராய் சிறிதுதூரம் முன்னே காரை நிறுத்திவிட்டு பின்னோக்கி நடந்துவந்து, திரு. யோகர் சுவாமிகளின் அருகில் கைகட்டி வாய்புதைத்து நடந்து வந்ததாயும் யாரும் யோகர்

சுவாமிகளிடம் ஏதும் இலகுவில் கேட்கமுடியாது எனவும் தப்பித் தவறி ஏதும் கேட்டாலும் சிலவேளைகளில் கண்டபடி ஏச்சுவாங்கவேண்டிவரும் என்பதையும் அறிந்திருப்பதால் ஏதும் பேசாமல் அவர் முகத்தையே பார்த்தவண்ணம் நடந்து வந்ததாயும், இருவரும் காரினை அண்மித்ததும் யோகர் சுவாமிகள் தானாகவே காரின் கதவினைத் திறந்து முன் சீற்றில் ஏறி உட்கார்ந்துகொண்டு எங்கேயடா போகிறாய்? எனக் கேட்க, தானும் சுவாமிகளை எங்கே போக வேண்டும் எனக் கேட்கப் பயந்து யாழ்ப்பாணம் என விடையளிக்க, சரி காரை எடு என அவர் கட்டளையிட, தான் காரை ஸ்ராட் பண்ணியதும் இங்கிருந்து யாழ்ப்பாணம் போகும் வரைக்கும் எத்தனை நாமமடா சொல்வாய்? எனக் கேட்க, தான் பதில்சொல்லத் தெரியாமல் தயங்க; எத்தனையென்றாலும் பரவாயில்லையடா நான் சொல்லுகிறேன் சொல்லடா என அவர் கட்டளையிட, தனக்கு எந்த நாமத்தை சொல்லித்தரப் போகிறாரோ எனப் பயந்து கொண்டிருக்க சுவாமிகள் தனது வலது கையைத் தான் அமர்ந்திருந்த சாரதியின் ஆசனத்தின்மேல் வைத்தபடி ஸ்ரீராமநாமத்தைச் சொல்லிக் கொடுத்தபோது தான் மெய்சிலித்தபடி பின்னால் சொல்ல, இடைவிடாது சொல்லியபடி வந்து யாழ்ப்பாணம் சிவன்கோயிலடியில் காரை நிறுத்தச்சொல்லி இறங்கி நின்றதாகவும், அப்போது சுவாமிகள் நீ இப்போ என்னடா செய்திருக்கிறாய்? என்று கேட்க, தான் பதில்சொல்லத் தவித்தபோது அதற்குப் பதிலாகத் தானே நல்லது செய்திருக்கிறாய் என பதிலளித்து நல்லது செய்தால் என்னடா கிடைக்கும் எனக் கேட்க, அதற்கும் தான் பதில்சொல்லத் தயங்கியபோது நல்லது கிடைக்கும் எனப் பதிலளித்து சென்றதாகவும் அதன்பின் தான் மேலும் தீவிரமாக ராமநாமஜெபம் செய்து வந்ததாகவும் அடிக்கடி கூறுவார். இதனைத் தான் வைகுந்தம் ஏகுவதற்கு இரண்டு கிழமைகட்கு முன்பும் எனக்கும். திரு. கந்தசாமி அண்ணருக்கும் கொஞ்சமும் வேறுபாடு இல்லாமல் கூறியிருந்தார். தவத்திரு யோகர் சுவாமிகளின் சந்திப்பும் தனது வாழ்வில் ஒரு திருப்பம் எனக் கூறுவார்.

நாம் சிறுபிள்ளைகளாக இருக்கும்போது மாலை 6.00 மணியளவில் நாம் அனைவரும் எமது வீட்டுக்கூடத்தில் பாய்போட்டு அமர்ந்து ஐயா சொல்லித்தரும் பாசுரங்களைப் பின்னால் சொல்ல வேண்டும். கடினமான சொற்றொடரைக் கொண்ட பாசுரங்கள் தாளத்துடன் பொருட் சிதைவில்லாமல் படிப்பது கடினம். அதிலும் நாம் சிறுவர்களாக இருந்த காலத்தில் அவர் சொல்லித்தரும் வரியில் அரைவாசியினை மறந்துவிடுவோம். அப்படியிருந்தும் விடாது சிறுசிறு தொடராகப் பிரித்து எமக்குத் தெரிய இலகுபடுத்திச் சொல்லுவார்.

யாழ்ப்பாணத்தில் மூன்று முக்கிய விஷ்ணு தலங்கள் உள்ளன. ஒருநாள் காலையில் நாலாயிர திவ்விய பிரபந்தங்களை ஒரு பட்டுத்துணியால் சுற்றி எடுத்துக்கொண்டு தாளக்கட்டையுடன் எமது ஒஸ்ரின் 8 (CE 81145) காரில் எங்களையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டு, கீரிமலையில் தீர்த்தமாடி அங்குள்ள விநாயகரையும் கீரிமலைப் பெருமாளையும் வழிபட்டு கடற்கரைப் பாதையூடாக பொன்னாலை வரதராஜ பெருமாள் கோவிலுக்குச் சென்று, திருப்பாசுரங்களை ஓதினோம். ஒவ்வொரு பாசுரத்திலும் காப்புடன் பதினொரு செய்யுள்கள் உள்ளன. குறைந்தது 4 அல்லது 5 பாசுரங்களை ஓதியிருப்போம். பின் அங்கிருந்து மானிப்பாய் ஊடாக வண்ணார்பண்ணை பெருமாள் கோயிலுக்குச் சென்று வழிபட்டு அங்கும் திருப்பாசுரங்களை ஓதி, பின் அங்கிருந்து நேராக வல்லிபுரக்கோயிலுக்குச்

சென்றோம். அங்கு செல்லும்போது இருட்டிவிட்டது. சாதாரணநாளாக இருந்தபடியால் கோயிலையும் பூட்டிவிட்டார்கள். வெளி மண்டபத்திலிருந்து திருப்பாசுரங்களைப் பாராயணம் செய்துவிட்டு நன்றாக இருட்டியபின் வீடுவந்து சேர்ந்தோம். நாள் முழுக்க ஆலயதரிசனமும் திருப்பாசுரப் பாராயணமும் செய்தபடியினால் அன்றைய அனுபவம் இப்போதும் எமது நினைவில் பசுமையாக உள்ளது.

ஆவணியில் வரும் ஒவ்வொரு ஞாயிறும் தவறாமல் எமது காரில் தட்டுமுட்டு சமையல் சாமான்களுடன் தெல்லிப்பளையிலிருந்து வல்லிபுரக்கோயிலுக்குப் போய் பொங்கி அமுதுபடைத்து அடியார்களுக்கு அளித்து திருப்பாசுரம் படித்து மாலையில் வீடு திரும்புவது வழக்கம். காலை 5.30 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்ட நேரத்திலிருந்து கோயிலுக்குப் போய்ச் சேரும்வரைக்கும் சாரதியின் ஆசனத்திலிருந்து ஐயா சொல்லித்தரும் ராமநாம ஜெபத்தினை பின்னால் நாம் சொல்லவேண்டும். எம்மில் யாராவது நாமம் சொல்லாது கள்ளம் செய்தால் உடனடியாகவே கண்டுபிடித்து ஸ்ரீயா ஏன் சொல்லாமல் இருக்கிறாய்? என கடிந்து கொள்வார். அந்தப்பயத்தில் நாம் அனைவரும் விரும்பியோ விரும்பாமலோ ராமநாம ஜெபம் செய்வோம். நெல்லியடிச் சந்தையில் மரக்கறி வாங்குவதற்காக காரை நிறுத்திவிட்டு தான் திரும்பி வரும்வரைக்கும் விடாது ராமநாம ஜெபம் சொல்லவேண்டும் எனக் கண்டிப்பான உத்தரவு போட்டுவிட்டு சந்தைக்குள் சென்று விடுவார். நாம் காருக்குள் இருந்தபடி அழுவாரைப்போல் ஜெபம் சொல்லும்போது சந்தைக்கு வருவோர் போவோர் யாவரும் எம்மை வினோதமாக வேடிக்கை பார்ப்பர். அன்று ஐயாவின் கண்டிப்பால் மானம், வெட்கம் பாராது செய்த ஜெபம் இன்று எமக்கு உரமாக இருப்பதை நினைக்கும்போது ஐயாவின் ஆத்மீக கருணைக்கு நாம் என்ன கைமாறு செய்யப்போகின்றோம் எனத் தவிக்கின்றோம். யாழ்ப்பாணத்திலிருக்கும் மூன்று விஷ்ணு ஆலயங்களில் எந்த ஆலயத்தில் தேர்த்திருவிழா நடைபெற்றாலும் அங்கு தேருக்குப் பின்னால் ஐயாவின் திருப்பாசுர பஜனை நடக்கும். அவருடன் சேர்ந்து நாமும் பஜனை செய்வோம். நாம் நன்கு வளர்ந்தபின் அவ்வாறு பஜனை செய்யக் கிடைக்கவில்லை. ஏனெனில், நிற்க, நடக்கக்கூடியளவிற்கு ஐயாவின் உடல்நிலை இடங்கொடுக்கவில்லை. 1984ல் ஆச்சிரமம் அமைத்தபின் அவரது முழு பக்திச்சேவையும் ஆச்சிரமத்தை மையமாகவே வைத்துக் காணப்பட்டது. 1970 இலிருந்து 1984 வரைக்கும் வல்லிபுரக் கோயில் திருவிழா நடைபெறும் 18 நாட்களும் அங்கு மடத்திலேயே தங்கியிருந்து அன்னதானம் செய்துவந்தார். அந்நாட்களில் அன்னதானம் தொடங்கமுன் குறைந்தது 1 1/2 மணித்தியாலமாவது திருப்பாசுர பஜனை நடைபெறும். அன்னதானத்தில் பங்குகொள்ள வ்ருபவர்கள்கூட பக்திமேலிடக் கைகளால் தாளம்போட்டுப் பாடியதை நினைக்கும்போது இப்போதும் மெய்சிலிர்க்கின்றது.

ஐயாவின் ராம தொண்டில் முக்கியமானது ராமாயண கதாப்பிரசங்கங்களாகும். இது குறைந்தது பத்து நாட்களுக்குத் தொடராக நடைபெறும் இரவில் திரு அவதாரத்திலிருந்து பட்டாபிஷேகம் வரைக்கும் உபந்நியாசம் செய்வதுடன் பகலில் பூஜை, பஜனை என்பவற்றுடன் மதிய போசனத்தின் பின் மரநிழலில் அடியார்கள் சுற்றியிருக்க ஞானவிளக்கம் அளிப்பார்.

ஸ்ரீராமநவமி, ஸ்ரீகிருஷ்ணஜயந்தி, வைகுண்ட ஏகாதசி போன்றவற்றை மக்கள் அதிகம் அறிந்திராத காலத்திலேயே அவற்றின் மகிமையைத் தனது அன்பர்களுக்கு விளங்கவைத்து அத்தினங்களைப் பெருவிழாவாக எடுக்க வைத்தார். விஷ்ணு ஆலயங்களில் தேவாரம் பாடிய காலத்தில் அதற்குப் பதிலாக பாசுரம் பாடவைத்தார். 1980களிலிருந்து அவரது ஆச்சிரமத்தில் நடந்துவந்த ஸ்ரீராமநவமி விழாவும், ராமாயண கதாப்பிரசங்கங்களும் 1991ல் இடப்பெயர்விற்குப் பின் பல்வேறு இடங்களிலும் நடைபெற்றன. எங்கெல்லாம் தங்கியிருந்தாரோ அங்கெல்லாம் உள்ள ஆலயத்தில் அது எந்த ஆலயம் என்றாலும் ராமாயண கதாப்-பிரசங்கத்தை செய்து பக்தி ஒளியைப் பரப்பினார். அங்கெல்லாம் தொண்டு செய்தவர்கள் இப்போது சிறந்த ராம பக்தர்களாக விளங்குகிறார்கள்.

ஐயா எங்கும் ஸ்ரீராமஜெயத்தினையே எழுதி வைத்திருப்பார். எங்கு பகவான் படத்தைக் கண்டாலும் உடனே அதை எடுத்து பத்திரப்படுத்திப் பேணுவார். அநேகமாக பப்பட உறை, ஊதுபத்தி பக்கற் போன்வற்றில் வரும் கிருஷ்ணா, ராமர் படங்களை வீசவிடமாட்டார். அவற்றினைச் சேகரித்து கத்தரிக்கோலால் கத்தரித்து நேராக்கி ஒரு கொப்பியினுள் மிகவும் கவனமாக பத்திரப்படுத்தி வைக்கும் பாங்கு அவரின் பக்தியின் உச்சநிலைக்குச் சான்று.

ஐயா தீவிரமாக ஹரிநாம சங்கீர்த்தனம் செய்யத் தொடங்கியது 60களின் ஆரம்பத்திலிருந்து தான். அக்காலத்தில் விஷ்ணு வழிபாடு பிரபல்யம் பெற்றிருக்காத நிலையில் பெரும்பாலும் சைவத்திருத் தலங்களில்தான் அவரது ராமாயண கதாபிரசங்கங்களை நிகழ்த்தினார். அது அவ்வளவு சுலபமானது அல்ல. முதலில் அவ்வாலய அறங்காவலர் மற்றும் குருக்கள் ஆகியோரைச் சமாதானப்படுத்தி மகாவிஷ்ணுவுக்கும சிவனுக்கும் உள்ள உறவு, பார்வதி விஷ்ணுவின் தங்கை என்ற உறவு போன்றவற்றையும் மணிக்கணக்காக அவர்களுக்கு தனிமையில் விளக்கி சம்மதிக்க வைப்பார். அப்போதெல்லாம் நாம் சிறுபிள்ளைகளாக ஐயாவுடன் காரில் சென்று இத்தகைய உரையாடல்களை செவிமடுப்பதுண்டு. சைவர்களுக்குத் தான் முரண் இல்லை எனக் காட்டுவதற்காக. அவ்வாலயங்களில் 'அருச்சுனன் தபசுநிலை' 'பார்வதி கல்யாணம்' போன்ற உபந்நியாசங்களை நிகழ்த்துவார். அதிலும் இடையில் பெரும்பங்கு நாராயணனின் பெருமையைத்தான் விளக்குவார். அப்படியிருந்தும் சிலர் வைஷ்ணவ பிரசங்கங்களை எதிர்த்ததுண்டு. பின் அவர்களே இவரது பக்திநிலையைக் கண்டு நெகிழ்ந்து அன்பு கொண்டதுண்டு. இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில் முதன்முதலாக இராமாயண கதாபிரசங்கம் செய்யச் சென்றபோது வித்துவான் இ.திருநாவுக்கரசு அவர்கள் ஐயாவின் இலக்கிய ஆழத்தை அளவிடும் நோக்கில் சென்றிருக்க அங்கு ஐயா அவர்கள் பரதனின் பாதுகாபட்டா-பிஷேகத்தினை பக்திப்பிரவாகத்துடன் கண்களில் நீர்மல்க, தன்னை மறந்த நிலையில் நிகழ்த்தியதைக் கண்டு மனம் உருகி, இவரது பக்திக்கு முன் எமது இலக்கியம் எம்மாத்திரம்! கம்பராமாயணத்தில் இலக்கியச் சுவையைவிட பக்திச்சுவையே மேலோங்கி இருக்கிறது என்பதை இன்றுதான் அறிந்துகொண்டேன் என வியந்து, தானே ஒரு மங்கல வாழ்த்து இயற்றி கௌரவித்தார்.

ஐயா எந்த மதத்தவரையும் வெறுத்தது கிடையாது. அதேபோன்று வேற்று மதத்தவரும் ஐயாவைக் கண்ட மாத்திரத்தே பயபக்தியுடன் அன்பு காட்டியே வந்துள்ளனர். எந்த மதத்திலுள்ள-வர்களுக்கும் தத்தமது மதத்தினை உண்மையாகவும், நேர்மையாகவும் பின்பற்றினால் இறுதியில் கிருஷ்ணாவின் பக்தர்களாவர் எனக்கூறுவர். இவர் சர்வதேச கிருஷ்ண பக்தி கழகத்தினருடன் அன்புகொண்டிருந்தார், அதன் ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ பிரபு பாதாவினை, படுமோசமான லௌகீகப் பிரியர்களான அமெரிக்கர்களையே திருத்தி கடைத்தேற்றிய மகான் எனப் புகழ்வார்.

இறுதி ஏழு வருடங்களாக தனது ஆச்சிரமத்தினை விட்டு இடம்பெயர்ந்த மனக்குறையுடன் இருந்தாலும் ஒவ்வொரு வருடமும் ஸ்ரீராம நவமி விழாவினை தொடர்ந்து பத்து நாட்களுக்கு யாகபூஜை, ததி ஆராதனை, உபந்நியாசம், பஜனை போன்றவற்றுடன் பல்வேறு இடங்களிலும் நடாத்திவந்தார். அத்துடன் நீங்கள் எனக்குப் பிள்ளைகளாக இருந்தாலும் எனக்கு உங்களால் எனக்கு வேண்டிய நேரத்தில் தொண்டு செய்யமுடியாது. ஆனால் எனக்குத் தொண்டுசெய்ய எம்பிரான் தன் அடியான் ஒருவனை அனுப்புவான் என 1997 ஆரம்பத்தில் கூறியிருந்தார். அதேபோல 1997 இறுதியிலிருந்து எமது அன்புக்கும், மதிப்புக்கும் உரிய கந்தசாமி அண்ணர் அவர்கள் ஐயாவுடனேயே இருந்து ஐயா இடும் கட்டளைகளை நிறைவேற்றி வந்ததுடன், இறுதி வைகுந்தமேகும் நிகழ்ச்சிகள் எவ்வாறு அமையவேண்டுமென ஐயா அவருக்குக் கூறிவைத்தாரோ அதன்படியே இன்றுவரை செய்து வருகிறார் என்பதை நினைத்து மனம் உருகுகின்றோம்.

இந்த வருடம் பிறப்பதற்கு முன்பே வெகுதானிய வருடத்தில் தனக்கு விடுதலை எனக் கூறியிருந்தார். அப்போது பஞ்சாங்கமே வெளிவந்திருக்கவில்லை. பின் பஞ்சாங்கத்தைப் பார்த்த போதுதான் தனது காலம் கிட்டிவிட்டது என்பதை உணர்ந்து சொல்லவேண்டியவர்கட்-கெல்லாம் அதனைச் சொல்லியும் வைத்தார். அது மட்டுமல்ல இந்த ஆத்மா அழிவில்லாதது மரணமில்லை எனக்கூறி அது ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டுக்குப் போவது போலத்தான் ஆகையால் அது துக்கப்படுவதற்கு உரியதல்ல. அது ஒரு மரணவீடாக இருக்காது ஒரு வேள்வியாகத்தான் இருக்கும் எனவும் யாரும் அழவோ, ஓலமிடவோ கூடாது எனவும், தேவகணங்கள் வந்து தன்னை அழைத்துச் செல்லும்போது எல்லோரும் ராமநாமத்தை ஜெபித்து வழியனுப்பவேண்டும் எனவும் கூறிவைத்தார். அதுமட்டுமல்லாது தனது சரீரத்தில் சாத்தவேண்டிய புடவை முதற்கொண்டு சகல கருமங்களும் எவ்வாறு நடைபெற வேண்டும் எனக் கூறி வைத்தாரோ அதன்படி எல்லாக் காரியங்களும் அவரின் ஆசிர்வாதத்தால் நடைபெற்றன என்பதை எண்ணி ஆறுதலடையும் நேரத்தில் ஐயா எம்முடன் இருந்து எமக்கு வழிகாட்டுவதற்கு இல்லையே என நினைக்கும்போது அளவிலாத் துன்பமடைகின்ற வேளை அறவழி தவறாமல் பக்தி செய்வீர்களாயின் வேண்டிய நேரத்தில் உங்களுடன் பேசுவேன் எனவும் கூறியமையால் மனதைத் திடப்படுத்தி அவருடைய வழியில் செல்வதோடு ஏனையோரையும் அவ்வழி செல்ல அழைப்போமாக!

**ஓம் ஸ்ரீ ராம ஜெயம்**

***ஆயர்பாடி மயில்வாகனம் ஸ்ரீகிருஷ்ணா.***

ஓம் ஸ்ரீராமஜெயம்

**விண்ணகம் நண்ணிய**

# ஆயர்பாடி ஜோதிடர் ஸ்ரீ.வே.த.மயில்வாகனம்

# *அன்னாரின் ஜோதிடசேவை பற்றிய சிறு ஆய்வு*

**– *ஆயர்பாடி மயில்வாகனம் ராமகிருஷ்ணன்* –**

கி.பி.1909 ஆகஸ்ட் 17ம் நாள் திங்கட்கிழமை பின் இரவு செவ்வாய் அதிகாலை, வானத்தில் இடி இடித்திருக்கவேண்டும். மின்னல் மின்னியிருக்கவேண்டும். அதிர்குரல் சங்கங்கள் முழங்கியிருக்க வேண்டும். ஆம், தீர்க்கதரிசிகளின் பிறப்பின்போது இப்படி வானம் அசாதாரணநிலையில் இருப்பது இயல்பு. 1909.08.17 அதிகாலைப்பொழுது ஒரு பொன்னாள் உம்பர் மயில்வாகனனை உலகிற்குத் தந்த நன்னாள்.

தீர்க்கதரிசிகள் என்றால், பின்னே வர இருப்பவைகளையெல்லாம் முன்னரேயே உணர்ந்தவர்கள் என்பது பொருள். ஜோதிடர்களுக்கும் இது ஓரளவு பொருந்தும் என்பதால் மட்டும் நான் இதை இங்கு கூறவில்லை. ஆத்மீகத்துறையில் ஈடுபட்டு பகவத் அனுபவம் பெற்று முன்னுணர்ந்த மகான் என்பதாலுமே இத்தீர்க்கதரிசி என்ற பெருமை மிகு வார்த்தையை உபயோகிக்கிறேன். ‘ஆயர்பாடி ஐயா’ அவர்களது தீர்க்கதரிசனம், சிறியவர், பெரியவர் என்ற வேறுபாடின்றி யாவர்க்கும் பயனளித்தது. மிகவும் உயர்நிலையில் உள்ளவர் சூரியபகவான், இவருக்கு மேலுள்ள கடவுளர்களை நாம் உணர்வினால் மட்டுமே காணமுடியும் என்பதால் சூரியபகவானை பிரத்தியட்ச தெய்வம் என்று வேதங்கள் கூறுகின்றன. இவரே நவக்கிரகங்களுக்கும் தலைவர். இவரதும், இவரது மந்திரி பிரதானிகளான சந்திரன், செவ்வாய், புதன் வியாழன், சுக்கிரன், சனி, ராகு, கேது இதர நட்சத்திரக் கூட்டங்கள், ராசி மண்டலங்கள் இவைகளது ஆட்சியினால்தான் உலகமே உண்டாகி, உலக உயிரினங்களும் ஆளப்பட்டு, ஆட்டுவிக்கப்பட்டு வருகின்றன. இதுவே ஜோதிட சாஸ்திரத்தின் தத்துவமாகும். கிரகங்களின் அசைவுகள் இயற்கையை உண்டாக்க, இயற்கை மனிதனைப் பாதிப்பதால், நேரடியாகவே கிரகங்கள் மனிதனைப் பாதிக்கின்றன என்று கூறலாம்.

விலாட சங்கிலித் தவண்டைக் குருக்கள் ஆச்சாரிய மரபில் வந்த ஆயர்பாடி மயில்வாகனம் ஐயா அவர்களது பரம்பரைச் சொத்து இவ்வரிய ஜோதிடக்கலையாகும். (அன்னாரது பூர்வீக காணி உறுதிகளில் விலாட சங்கிலித் தவண்டைக் குருக்கள் ஆச்சாரியார் தோம்பு என்றே காணக் கிடக்கின்றது.) விஸ்வப்பிரம்மாவின் ஐம்பெரும் தொழில்களைச் செய்பவர்களுக்கு பிறவியிலேயே ஆச்சாரிய பட்டம் உண்டாகிவிடுகின்றது. ஆச்சாரியர்கள் என்றால் ஆச்சாரம் மிக்கவர்கள். தெய்வபக்தி ஒழுக்கம், தூய்மை கட்டுப்பாடு, கல்வியறிவு மிக்க உயர்குணங்கள் உடையவர்கள் என்பது பொருள். மனிதப்பண்புகளை மேலோங்கச் செய்யவேண்டும்.

பண்டைய காலங்களில் பொதுவாக அறிவில் உயர்ந்து சமய ஆச்சாரம் மிகுந்த யாவருமே ஜோதிட சாஸ்திரங்களில் மிகுந்த பாண்டித்தியம் பெற்றிருந்தனர். ஜோதிடம் ஓர் உயர்கலை ஞானமாகும். இன்றும்கூட, உயர்துறையில் உள்ளவர்களிடமும் பொது அறிவால் உயர்ந்தவர்களிடமும், நல்ல ஜோதிட அறிவு இருப்பதைக் காணக்கூடியதாக இருப்பது மகிழ்ச்சிக்குரியதாக உள்ளது. ஆயர்பாடி ஐயாவின் நெருங்கிய நண்பர்களான சட்டத்தரணிகள், அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம், அமரர் கியூ.சீ.நவரட்ணராஜா போன்றோருக்கும் நன்கு ஜோதிடம் தெரிந்திருந்தது தன்னுடன் பந்தயம் கூடப் பிடித்தனர் என்று எனக்கு ஐயா அவர்கள் கூறியுள்ளார்.

இலங்கைத் திருநாட்டின் சிரசாகிய யாழ்ப்பாணத்தின் வரலாற்றுப் புகழ்மிக்க மாவிட்டபுரத்தில் பிறந்த ஆயர்பாடி ஐயா அவர்கள் அவ்வூரிலேயே வளரலானார். மாவிட்டபுரத்தினது தபால் விநியோக அலுவலகம் தெல்லிப்பளை என்பதால், மாவிட்டபுரம் என்பதைச் சற்றே குறைத்து தெல்லிப்பளை ஆயர்பாடி ஜோதிடர் என்று வழங்கப்பட்டு வந்தது. ஆனால், மாவிட்டபுரம் தெல்லிப்பளை என்பதே சரியான முகவரியாகும்.

மாவிட்டபுரத்தினது மிகநெருங்கிய அயலூர் கொல்லங்கலட்டியாகும். ஜோதிடக் கலையின் ஆரம்ப குரு தனது தகப்பனார் அமரர் வேலுப்பிள்ளை தம்பு என்றும், இரண்டாவது குரு கொல்லங்கலட்டி அமரர் சின்னக்குட்டி சாத்திரியார் என்றும் ஐயா அவர்கள் கூறுவார்கள். தனது பத்தாவது வயதில்தான், தகப்பனாரிடம் ஜோதிடம் கேட்க வருபவர்களுக்குத் தான் ஜாதகம் கணித்துக்கொடுத்ததைக் கூறி இக்காலத்தில் எமது திறமை போதாது என்று எம்மை ஏசுவார். ‘பொடியா! சின்னப்பாவிற்கு ஒரு மேன் பிறந்திருக்கிறானாம். ஒரு குறிப்புப் போடு, நான் முகம் கழுவிக்கொண்டு வாறன்’ என்று தகப்பனார் சொல்லிவிட்டுப்போனால் அவர் வருவதற்கிடையில் சிலேட் பலகையில் குறிப்புக் கணித்து, தாளில் எழுதிவைக்க வேண்டுமாம். பழையகாலத்தில் குருசிஷ்ய முறையும், தகப்பன் மகன் முறையும் கண்டிப்பும் பயபக்தியும் மிகுந்திருந்ததால், சிஷ்யர்கள் குருவை மிஞ்சி வளர்ந்தனர். ஐயா அவர்களது காலத்தில் ஓலைச்சுவடியில் இருந்த ஜாதக கலாச்சாரம் மெல்ல மெல்ல புத்தகத்தாள் கலாச்சாரத்திற்கு மாறியது. முன்னர் ஏடும் எழுத்தாணியும்தான் கொப்பியும், பேனையும் என்று சொல்வார்கள். இவர்களது காலத்தில் ‘மை’க்குப்பியும், தொட்டு எழுதும் பேனை குச்சியும்தான் எழுதுகோலாயின. இவற்றை நான் தனது காலத்தில் பாவிக்காது விட்டாலும் கண்ணால் கண்டிருக்கிறேன்.

தெல்லிப்பளையில் அமெரிக்கன் மிஷனரிமார் வந்து (ஏறக்குறைய 1815ம் ஆண்டளவில் என்று நினைக்கின்றேன்) பெரிய பாடசாலையாக யூனியன் கல்லூரியை ஆரம்பித்தனர். இது முழுக்கமுழுக்க கிறிஸ்தவ கல்லூரியாகவே விளங்கியது. பின்னர் அமெரிக்க மிஷனரிமார் ஆங்காங்கே சிறுசிறு அமெரிக்கமிஷன் தமிழ் கலவன் பாடசாலைகளையும் ஆரம்பித்தனர். மாவிட்டபுரத்தில் ஐயா அவர்களது வீட்டுக்கு அண்மையாக இருந்த அ.மி.த.க பாடசாலையில் ஆரம்பக்கல்வியையும் பின்னர், தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் 5ம் ஆண்டுவரையும்

தான் கல்விகற்றதாகக் கூறியிருந்தார். தனக்குத் திறமை, விவேகம் இருந்தும் பெற்றோரது பொருளாதார வசதியீனம் தன்னை மேற்கொண்டு கற்கவிடவில்லை என்று வருத்தப்ப:டுவார். தான் கற்கவேண்டும் என்ற மனவைராக்கியம்தானோ என்னவோ, தனது 89வது வயது பூர்த்தியாகும் காலத்திலும்கூட சமய நூல்களையும் ஜோதிடநூல்களையும் கூட, குறிப்பெடுத்து, பத்திரிகைக் குறிப்புகளை வெட்டியெடுத்து பைல் பண்ணி, ஒரு ஆய்வாளன் போல கற்றுக்கொண்டே தனது உடலை நீத்திருக்கிறார். ஒரு பிறப்பிலே ஒருவன் எவ்வளவு கற்கிறானோ அக்கல்வி மறுபிறப்பில் தொடரும் என்று வேதங்கள் கூறுகின்றன. 'ஒருமைக்கண்தான் பெற்ற கல்வி மறுமைக்கும் ஏமாப்புடைத்து' என்று திருக்குறள் கூறுகின்றது.

ஐயா அவர்கள் பகலில் பாடசாலைக்கல்வியுடன் இரவில் தான் கற்ற ஜோதிடக் கல்வியைத் தொடர்ந்தார். இரவில் தென்னம்பாழையில் சூழ்கட்டி, அதைக் கொளுத்தி விசுக்கி விசுக்கிக்கொண்டு சென்றால் அது எரிந்து வெளிச்சம் தருமாம். அந்த வெளிச்சத்தில் பாதையை அவதானித்து சின்னக்குட்டிச் சாத்திரியாரின் வீட்டிற்குச்சென்று ஜோதிடம் படிப்பது ஐயாவின் வழக்கமாகும்.

வாக்கியமா திருக்கணிதமா சரியானது என்ற பிரச்சனை அக்காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது. இரகுநாதரது கணிதமா? கலட்டி சுப்பிரமணியத்தினது கணிதமா சரியானது என்று ஐயா அவர்கள் தமது குருவைக் கேட்டபோது, 'மயில்வாகனம் நாளைக்கு ஒரு நாழிகை வட்டத்துடன் வா' என்று கூறினாராம். தற்கால மணிக்கூடு முன்பு நாழிகை வட்டம் என்றே அழைக்கப்பட்டது. அக்காலத்தில் நாழிகை வட்டம் எல்லோரிடமும் கிடையாது. ஐயா, கந்தப்பா வாத்தியாரிடம் கெஞ்சிக்கூத்தாடி வாங்கிக்கொண்டு போனார். இரு பஞ்சாங்கங்களிலும் புதன் கிரகத்தினது உதயம் வெவ்வேறு நாளில் போடப்பட்டிருப்பதைக் குறித்துக்கொண்டு, அந்த இரண்டுநாளிலும் அதிகாலைப் பொழுதில் கீரிமலைக் கலட்டி உயரத்தில் சென்று குறித்த நாழிகைக்கு வானத்தை நோக்கினார். அப்போது குரு, 'மயில்வாகனம், பார்த்தியா கலட்டியான் பிழையடா' என்று குரு புரியவைத்ததை ஐயா அவர்கள் தற்போது கூட திரும்பத்திரும்ப நினைவுகூர்வார்.

கண்டியில் கார் பரிசுபெற்ற கதையையும் சுவாரசியமாகக் கூறுவார். தனது பெரியப்பாவின் மகன் அமரர் வைத்திலிங்கம் அவர்கள் ஓவசியராக கண்டியில் வேலை பார்த்த காலத்தில் அடிக்கடி கண்டிசென்று வருவது ஐயாவின் வழக்கமாகும். கொல்லங்கலட்டி சாணையார் மகன் கந்தையாவும் (ஐயாவின் நண்பர்) அங்கு 'கெமிஸ்ட்' ஆகத் தொழில்பார்த்து வந்தார். ஐயா இவர் வீட்டிலும் தங்குவது வழக்கம். ஒருமுறை ஜோதிடத்தொழிலைச் சற்று வளர்க்கலாம் என்ற எண்ணத்துடன் கண்டி சென்று இவரது வீட்டில் தங்கினார். திரு.கந்தையா 'மயில்வாகனம் எனக்கும் ஜோதிடம் தெரியும். தேவையாகில் உனக்கும் சொல்கிறேன்' என்று பகிடியும் உண்மையும் கலந்த தோரணையில் கூறினார். அதற்கு ஐயா 'உணவுகூட பசியுள்ளவனுக்கு மட்டுமே பயன்படும். அதுபோலத்தான் ஜோதிடமும்

தேவையில்லாதவனுக்கு எதுவுமே பயன்படாது இன்று மட்டுந்தான் உங்கள் வீட்டில் தங்குவேன்' என்று கூறிவிட்டு விறாந்தையில் ஒரு ஓரத்தில் இருந்த சாய்மனைக் கதிரையில் படுத்துவிட்டார். இரவு பத்துமணியளவில் மெல்லிய பேச்சுக்குரல் கேட்டது. ஐயா கண்விழித்துப் பார்த்தால் கெமிஸ்ட் கந்தையருடன் யாரோ பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது. அவர் டாக்டர்.ராமானுஜம். ஐயாவைக் கவனித்த அவர் 'ஹூ இஸ் தட் மான்?' என்று கேட்க, கந்தையரும் 'அவர் தன்னை ஒரு ஜோதிடர் என்று சொல்கிறார்' என்றார். 'ஆஹா, அப்படியா? நான் இப்பொழுதே அவரைப் பார்க்கலாமா?' என்று மகிழ்ச்சி மேலீட்டால் கூறிக்கொண்டு கந்தையருடைய பதிலையும் எதிர்பாராமல் ஐயாவிடம் வந்தார் டாக்டர் ராமானுஜம். ஐயாவுக்குத் தூக்கமும் வராமல் மனப்போராட்டத்தில் பாரத்துடன் அலுத்துகிடந்த ஐயா எழும்பி உட்கார்ந்தபோது, ராமானுஜம் தனது பர்சிலிருந்து ஒரு பேப்பர் துண்டை எடுத்து தனக்கு முன்னே நீட்டினாராம். அது ஒரு ஜாதகக்குறிப்பு. அதுவும் ஒரு இளம் பையனுடையது. அந்த இந்திய டாக்டரைப் பார்த்தால் கருணைவழியும் முகமும், சாந்தமும், அமைதியும், பண்பும், தன்னிடம் தரும்போது இருந்த மரியாதையும் பார்த்தபோது ஐயாவால் வாங்காமல் இருக்கமுடியவில்லை என்பதால் சலிப்புடன் வாங்கிக்கொண்டார். டாக்டரும், கந்தையாவும் ஐயாவின் முன்னால் அமர்ந்து கொண்டனர். குறிப்பை நோட்டம் விட்டவருக்கு சிந்தனை அதிகரித்தது. 10, 20, 30 நிமிடங்கள் கடந்துவிட 'மிஸ்டர் மயில்வாகனம் சிதம்பரசக்கரத்தைப் பேய் பார்க்கிறதா?' என்ற கந்தையரின் குரல் சிந்தனையை அறுத்தது. உடனே அந்த ஜாதகத்தை இரு கைகளாலும் கசக்கி உருட்டி அவர் முகத்தில் எறியும்போது ஐயா கூறிய வார்த்தைகள் 'செத்துப்போனவனுடைய ஜாதகத்தை என்னிடம் ஏன் தந்தாய்?' என்பது மட்டுந்தான். உடனே டாக்டர் ஐயாவின் கால்களைப் பிடித்துக்கொண்டு கதறி அழ ஆரம்பித்து விட்டார். 'ஐயா, இவர் என் மகன், இவர் இறந்துபோவாரென்று ஒருவருமே கூறவில்லை. இவரது பிரிவால் நான் மிகவும் வேதனையடைகின்றேன். நீங்கள் எனது வீட்டுக்கு வாருங்கள். உங்களைக் கண்டால் எனது மனைவியும், மற்றப்பிள்ளைகளும் ஆறுதலடைவார்கள்' எனக் கூறிக்கொண்டே ஐயாவின் உடுப்புப் பைகள், புத்தகங்கள் எல்லாவற்றையும் தானே தூக்கிவிட்டாராம். இதைக்கண்ட கந்தையருக்கு ஒரே திகைப்பு. 'வெரிசொறி டாக்டர், மிஸ்ரர் மயில்வாகனம் இன்றுதான் எனது வீட்டிற்கு வந்தவர். அவரை நாளைக்கு அனுப்புகின்றேன்.' என்றார். அதற்கு டாக்டர் 'நோ, நோ, மிஸ்ரர் கந்தையா நான் இவரை இப்போதே எனது காரில் கூட்டிச்செல்கிறேன்'. என்று ஐயாவைப் பார்த்தார். அருகில் இருக்கும்போது அருமை தெரிவதில்லை. இல்லாமல் போனபின்னர்தான் புரிய முடிகின்றது. இறைவா இப்பிழை நான் விடாமல் என்னைக் காத்தருளவேண்டும் என வேண்டிக்கொண்டு டாக்டரது காரில் ஐயா ஏறிக்கொண்டார். இது தனது கண்டிச் சிறப்பினது முதற்படி என்று ஐயா கூறிக்கொள்வார்.

இப்படியிருக்கும் காலத்தில் கண்டி மாநகர முதல்வர் பதவிக்கு தேர்தல் வந்தபோது கனகநாயகம் முதலியாரும், சொய்சாவும் போட்டியிட்டனர். கண்டி மாநகரையே கலக்கிக கொண்டிருந்த ஜோதிடர் மயில்வாகனத்தை, கனகநாயகத்தாரும் பிடித்துக்கொண்டார். 'ஐயா உங்களுக்குத்தான் வெற்றி. ஆனால் தளம்பாமல் நிற்கவேண்டும் என்பது எனது

கோரிக்கை' என்று ஐயா கூறிவிட்டார். கனகநாயகம், சொய்ஸா இருவரிடையேயும் கடும்போட்டி காரணமாக இருவருக்கும் சமமான வாக்குகளே கிடைத்தன. அடுத்தகட்டம் துண்டுகுலுக்கி அதிஷ்டம் பார்ப்பதுதான். கனகநாயகத்தாருக்கு சனியினது தாக்கம் இருக்கிறது. அதிஷ்டமுள்ள சனிதான் ஆயினும் சனி சனிதானே. எங்கே சனியினது அடையாளம் ஏதாவது புலப்படுகின்றதா என்று ஐயா அவதானித்துக்கொண்டிருந்தார். ஐயா, கனகநாயகம், கந்தையா, சொய்ஸா இதர அதிகாரிகள் கூடியிருக்க, ஒரு சேவகன் கழுத்து உடைந்த ஒரு கூசாவைக் கொண்டுவந்தான். அதனுள்ளேதான் பரிசுத்துண்டுகளை எழுதிப்போட்டு குலுக்கி எடுக்கப் போகிறார்கள். கழுத்து உடைந்த (குறைபாடுடைய) கூசாவைக் கண்டதுமே சனிபகவானது பார்வையால் கனகநாயகத்திற்கு வெற்றி நிச்சயம் என்பதை ஐயா புரிந்துகொண்டார். அருகிலிருந்த கந்தையா ஐயாவைச் சுரண்டி, 'என்ன மயில்வாகனம், ரூபா 20 ஆயிரம் கொடுத்து ஒரு மெம்பரை விலைக்கு வாங்கியிருந்தால் கனகநாயகம் வென்றிருப்பார். உம்முடைய சோதிடத்தால் வீணாக அவரைத் தோற்கவைக்கப் போகிறீர்' என்று முணுமுணுத்தார். இதில் ஒருவருக்குமே நம்பிக்கை வரவில்லை. முதல்முறை துண்டு எடுக்கப்பட்டது. ஒருவருக்கும் பரிசு இல்லை. இரண்டாம் முறையும் அப்படியே போனது. மூன்றாம்முறை சொய்ஸா எடுத்தார். வெறும் துண்டு. கனகநாயகம் எடுத்தார் பரிசுத்துண்டு. கனகநாயகத்திற்கு ஜே! என்ற கோஷம் வானைப் பிளந்தது. அவர் தனது கழுத்திற்கு வந்த மாலைகளைத் திருப்பி ஐயாவின் கழுத்துக்கு அனுப்பினார். ஐயா தன்னைத்தானே நம்பவில்லை. இப்படியா ஜோதிடம் இவ்வளவு மகிமை மிக்கது என்பதை அன்றுதான் உணர்ந்து கொண்டதாகக் கூறியுள்ளார். அன்று கனகநாயகத்தின் நன்றியுரையில் நீண்டநேரம் பேசப்பட்ட நபர் ஜோசியர் மயில்வாகனம்தானாம். தான் வென்றமைக்கும், தனக்கு மனத்துணிவை அளித்ததற்கும் நன்றிக்கடனாக அக்காலத்தின் புத்தம்புதிய காரான ஒஸ்ரின் X மொடல் காரொன்றை ஐயாவுக்குப் பரிசளித்தார். அங்கு இரண்டுநாட்களில் கார் ஓடப்பழகி, அக்காரிலேயே யாழ்ப்பாணம் வந்ததாக ஐயா பெருமைப்பட்டுக்கொள்வார்.

ஜோதிட சாஸ்திரத்தில் ஆருடம் பார்த்தல் என்று ஒரு பிரிவு உள்ளது. இதை நினைத்த காரியம் சொல்லல் என்று கூறுவார்கள். தொலைந்துபோன, திருட்டுப்போன பொருட்களை இதன்மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. ஐயா 1965, 66ம் ஆண்டுகாலப் பகுதியில் புளியங்குளம் சன்னாசிப் பரந்தனில் நீர்ப்பாசனக் குளக்கட்டு வேலை ஒன்றை கொந்தராத்து எடுத்துச் செய்துகொண்டிருந்தார். அதன் சீமெந்து வேலைகளுக்கான மரப்பலகைகளை அறுத்தெடுக்கும்பொருட்டு தமது அயல்குறிச்சியில் இருக்கும் சிவகுரு என்பவரை மரம் அரிவதற்காக ஒப்பந்தம் செய்திருந்தார். என்ன ஆச்சரியம், முதல்நாள் வேலைசெய்த சிவகுருவின் மரம் அரியும் நீண்டவாளை, அடுத்தநாள் வைத்த இடத்தில் காணவில்லை. எங்கே தேடியும் வாள் அகப்படவில்லை. ஐயா அவர்கள் தெல்லிப்பளையில் தனது வீட்டிலிருந்து பஸ்ஸில்போய் சன்னாசிப் பரந்தனில் இறங்க, இந்த முறைப்பாடும் கிடைத்தது. சிவகுருவோ குய்யோ முறையோ என கதறியழ ஆரம்பித்தார். 'சரி, கொஞ்சம் பொறுங்கள் பார்க்கலாம்' என்று அவரை ஆறுதல்படுத்திவிட்டு பஞ்சாங்கத்தை எடுத்து தான் அச்செய்தியைக் கேட்ட பகல் 2 மணி 15 நிமிடத்திற்கு ஒரு ஜாதகம் போட்டார். அதை

ஒருமணிநேரத்திற்கு மேலாக ஆராய்ந்தபோது பொருள், சந்திரன், சுக்கிரனுடன் இருந்ததால் அது தண்ணீருக்குள் இருப்பதாக அனுமானித்துக் கொண்டார். இனி பொருளை வெளியில் எடுக்கவேண்டும். இதர கிரகங்களைக் கொண்டு ஒருவாறு அது இருக்கும் தூரத்தை அனுமானித்துக்கொண்டு, 'சண்முகம், (அவரது உற்ற நண்பர்) இங்கே ஏதாவது தண்ணீர் நிறைந்த இடம் உள்ளதா?' என்று கேட்டார். 'ஏன் ஐயா அருகில்தானே சன்னாசிப் பரந்தன் குளம் இருக்கிறது. இப்போது அதில் நிறையத் தண்ணீரும் தாமரையும் கூட இருக்கிறது.' என்று பதில் வந்தது. சுக்கிரனுடன் ராகுவும் கூடியிருப்பதால் தாமரைக்கொடிகளும் உள்ளன என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு எல்லோரும் குளத்தடிக்குச் சென்றனர். இரண்டுமைல் நீளமான குளத்தில் எவ்விடத்தில் தேடுவது என்று யோசித்துக்கொண்டு பார்த்தால் அங்கே ஒரு அரசமரம் காணப்பட்டது. அரசு மரங்களின் தலைவன் சிங்கராசியாக இருக்கலாம் என்று ஊகித்துக்கொண்டு அந்த மரத்திலிருந்து நாடாப்பெட்டியினால் அளந்து துலாம் ராசியைக் குறித்துக்கொண்டார். 'சரி, இனி இவ்விடத்தில் குளத்துள் இறங்கித் தேடவேண்டும்' எனத் தீர்மானித்துக்கொண்டார். அங்கிருந்தவர்களைப் பார்த்து 'யாரப்பா, குளத்துள் இறங்கப் போகிறீர்கள்?' என்று கேட்க, ஒருவர் நான் இறங்குகின்றேன் என்றார். 'உனது பெயர் என்ன?' என்று கேட்டபோது 'நாகரத்தினம்' என்று பதில் வந்தது. ராகு கேதுக்களால் மறைக்கப்பட்டபடியால் தாமரைக்கொடிகளும், பாம்புடன் சம்பந்தப்பட்ட பெயருள்ள ஒருவரும் வந்தவுடன் அவரது நம்பிக்கை மேலும் வலுவடைந்தது. இதை யாருக்கும் வெளிக்காட்டாமல், 'சரி, நாகரத்தினம், கிழக்கே பார்த்துக்கொண்டு குளத்தில் இறங்கி 20அடி முன்னே போய் அரையளவு தண்ணீர் வந்ததும் வடக்கே திரும்பு' என்றார். அரையளவு தண்ணீர் என்று ஊகித்தமைக்குக் காரணம் சுக்கிரனது ஸ்தானம் அரை (இடுப்பு) என்பதுதான். வடக்கே திருப்பி நாகரத்தினத்தை இனி மெதுவாகக் காலால் நிலத்தில் தேடு என்ற கட்டளை பிறந்தது. என்ன ஆச்சரியம்! முதல் காலைத்தூக்கி வைத்த நாகரத்தினம் வாளின்மீதுதான் காலை வைத்தார். வாள் நிமிர்ந்தபடியே கிடந்ததால் அதன் பல்லுப்பட்டு காலில் இரத்தம்கூட வந்துவிட்டது. ஐயா வாள் என்ற கூச்சலும், அதைத்தொடர்ந்து குனிந்து தண்ணீரில் மூழ்கி எழுந்த நாகரத்தினத்தின் கைகளிலே அந்த நீண்ட மரமரியும் வாளைக் கண்ட எல்லோரும் அதிர்ச்சியில் ஆழ்ந்தனர். மறுகணம் சிவகுரு ஐயாவின் காலைப்பிடித்துக் கொண்டு ஆனந்தக்கண்ணீர் பெருக்கினார்.

எந்த உயர்கலை ஞானத்தாலும், அதன் கற்கை(படிப்பு)க்கும், செயல்(நடை)முறைக்கும் வித்தியாசம் இருக்கவேசெய்யும். வெறும் நூல்களை மட்டும் படித்துவிட்டு அதை அப்படியே பிரயோகிக்கமுடியாது இந்த நுணுக்கத்தை உணர்ந்து அளவளவாக மக்களுக்குக் கொடுக்கும்போது தான் அக்கலைஞானம் பரிணமிக்கின்றது. இது ஜோதிட சாஸ்திரத்திற்கு நன்குபொருந்தும். இன்றுள்ள ஜோதிடர்களில் பலர், விதிகளை ஓரளவு படித்திருந்தாலும், விதிவிலக்குகளை உணர்வதில்லை. தோஷம் இல்லாத செவ்வாயை தோஷம் என்றும், தோஷமான செவ்வாயை தோஷமில்லை என்றும் கூறுவார்கள். மனிதவாழ்க்கை அதிகூடிய பெறுமதி மிக்கதாகையால், ஏன் வீணாகப் பொறுப்பேற்கவேண்டும் என்ற பயத்தினால் பொருத்தம் இல்லை என்றே கூறிவிடுகின்றனர். எனவே இவர்களைக் குறைகூறிப் பயனில்லை.

மக்கள் தங்கள் விஷயங்களில் தாங்கள் கவனமாக இருக்கவேண்டும். நல்ல ஜோதிட அறிவுள்ள ஜோதிடரையே மக்கள் அணுகவேண்டும்.

இனி, இலங்கையின் தலைசிறந்த ஜோதிடராகவும், ஆயிரம் பிறைகண்ட உத்தமச் செம்மலுமாகிய ஐயா ஆயர்பாடி ஜோதிடர் மயில்வாகம் அவர்களது ஜாதக கிரகநிலையைச் சற்று ஆராய்வோம்.

ஜாதகத்தில் 5ம் இடத்தைப் பூர்வபுண்ணிய ஸ்தானம் எனக் கூறப்படும். இதுவே உயர்கலை ஞானங்களுக்குமுரியது, பூர்வீகக்கொடை அல்லது கடவுளின் அருள் என்கிறார்களே அது இந்த 5ம் இடத்தினது பிறப்பினால்தான் ஏற்படுகின்றது. ஒரு ஜாதகத்தில் 5ம் இடமும் 5ம் அதிபனும் நல்லநிலையில் இருந்தால் இத்தகைய சிறப்புக்கள் ஏற்படும். கலைகளில் 'ஞானம்' என்ற ஒரு வார்த்தையைப் பயன்படுத்துகிறார்களே அந்த ஞானத்தைத் தருபவர் 5ம் இடத்து அதிபதிதான். ஜோதிடத்தில் ஒருவர் நிறை அறிவு பெறுவதற்கு 5ம் அதிபன், லக்ன அதிபன், சூரியன், சந்திரன், புத்திகாரகன், புதன், ஞான(அறிவு) காரகன் வியாழன் ஆகியோர் நன்கு பலமடைந்திருக்கவேண்டும். ஆம்! ஆயர்பாடி ஐயாவினுடைய ஜாதகத்தில் இவை யாவுமே நன்கு பலமடைந்திருக்கின்றன.

ஐயாவின் ஜெனன லக்கினம் மிதுனம். லக்கின அதிபனே புதனாவதால் இயல்பாகவே புத்திக்கூர்மையும், அறிவு விவேகமும் இருக்கும். இவர் வீர்ய, தைர்ய, பராக்கிரம ஸ்தானமாகிய மூன்றில் ஆட்சிபெற்ற சூரியனுடன் கூடுவதால் புதனது பலம் மேலும் அதிகரிக்கின்றது. லக்ன அதிபன் புதன் வித்தைகளுக்குரிய 4ம் அதிபனுமாகி, 5ம் அதிபன் சுக்கிரனுடன் கூடி லட்சுமி யோகம்பெற்று, 3ம் இடத்தில் சூரிய சந்திரனுடனும், ஞான(அறிவு) காரகன் வியாழனுடனும் கூடி இருப்பதால் ஐயா அவர்களுக்கு ஜோதிட அறிவு கடல்அலையெனப் பெருக்கெடுத்தது. 5 கிரகங்கள் கூடி 3ல் இருப்பதனால் தனது ஊரில், நகரத்தில், உலகில் தனிப்பெரும் புகழ்பெற முடிந்தது. 3ம் இடம் பெலமடைகின்ற ஜாதகர்கள் பிரபல்யம் மிக்கவர்களாக இருப்பார்கள். இது அரசியல்வாதிகளுக்கும் மிக முக்கியமானது. போட்டிகளில் பரிசுபெற வைப்பதும் இந்த 3ம் இடந்தான். கடினபயிற்சி பெற்றவன் தானே வெற்றிபெறுகின்றான். அதுபோல இதுவும் வாழ்க்கையில் கரடுமுரடான துன்பப்பாதைகளையும் கொடுத்து அவற்றை வெற்றிகொள்ளவும் வைக்கிறது.

ஐயாவினது ஜாதகம் இதுதான். லக்னம் மிதுனம். நவாம்ச லக்னம் விருச்சிகம். நட்சேத்திரம் மகம் 3ம் பாதம், சிங்கராசி, 3ம் இடத்தில் சூரியன், சந்திரன், புதன், வியாழன், சுக்கிரன். 6ம் இடத்தில் கேது, 10ம் இடத்தில் செவ்வாயும், சனியும். 12ம் இடத்தில் ராகு. பிறக்கும்போது கேது மகாதிசையில் இருப்பு வருடம் 01 மாதம் 09 நாள் 18.

லக்ன அதிபன் புதன் 3இல் இருந்தமையால் வாழ்க்கையில் பொறுப்புக்கள் சுமைகளைக் கொடுத்து பிரச்சனைகளை வெற்றிகொள்ள வைத்து பிரபல்யத்தைக் கொடுத்து,

லக்கினாதிபன் புதனும் சூரியசந்திரர்களுடனும் வியாழன் கூடி இருப்பதால், ஆத்மீக வாழ்க்கையில் ஈடுபடவைத்து மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக முழுநிலைக்கு உயர்த்திவைத்தது. அசுரகுரு சுக்கிரனும், தேவகுரு வியாழனும் கூடியிருந்தமையால், உலகாயத வாழ்க்கையும், ஆத்மீக வாழ்க்கையும் சமாந்தரமாகவே சென்றது. இதைத்தான் 'கிரகஸ்தாஸ்சிரமம்' என்று வேதங்கள் கூறும் இல்லறத்தில் இருந்தபடியே இறைவனை அடைதல் என்பது பொருளாகும். 12ம் இடமாகிய மோட்ச ஸ்தானத்திலே ராகு இருந்தமையாலும் ஞானத்தைக் கொடுத்திருக்கின்றது. தொழில் கர்மஸ்தானமாகிய 10ல் செவ்வாயும், சனியும் இருந்தமையால் அவை 6ம், 8ம் அதிபனாகி ஒருபுறத்தில் கஷ்டங்கள், துன்பங்களையும் மறுபுறத்தில் 9ம், 11ம் அதிபனாகி சிறப்புகள், நன்மைகளையும் கொடுத்தது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக 3ம் இடத்தில் உயிர்க்கிரகங்களான லக்ன அதிபன் புதன், சூரியன், சந்திரனும் குரு அந்தஸ்துப்பெற்ற வியாழனும் சுக்கிரனும் கூடி, அதாவது ஐந்து கிரகங்கள் கூடி 3ல் இருந்தமையால்தான் ஐயா அவர்களுக்கு இத்தகைய சிறப்புக்களும் உயர்நிலையையும் கொடுத்துள்ளது சந்திரனும், குருவும் கூடியிருப்பதனால் குருசந்திரயோகம் அமைந்தது. இப்படியானவர்களுக்கு மிகவும் மென்மையான இதயம். மற்றவர்கள் பசித்திருப்பதை, களைத்திருப்பதை இவர்களால் பார்த்திருக்கமுடியாது. இதனால்தானோ என்னவோ ஐயா அவர்களது வீட்டில் எந்தநேரமும் வருவோர் போவோருக்கெல்லாம் நிறை உணவு காத்திருந்தது. குருசந்திரயோகம் உடையவர்கள் மற்றவர்களுக்கு நிழல்தரும் மரம்போன்றவர்கள். இன்னுமொரு ஆன்மீகத்துறைக்கான சிறப்புக் கிரக அமைப்பு ராகுவை சனி பார்ப்பதாகும். இதைக் காலசர்ப்பதோஷம் என்று நாங்கள் கூறுகின்றோம். இது ராஜரிஷிகளுக்குரிய கிரக அமைப்பாகும். தலைசிறந்த முனிவர்களான விசுவாமித்திரர், காசியபர், அத்திரி, ஆங்கீரசர், பிருகு போன்றோர்களுக்கெல்லாம் சனியும் ராகுவும் சேர்ந்திருக்கிறது அல்லது ராகுவை சனி பார்க்கிறது. இப்படியான அமைப்புடையவர்கள் தமது வாழ்க்கையை உலகாயதத்தில் ஆழவிட்டால் துன்பங்களையே அனுபவிக்க வேண்டியிருக்கும். ஆத்மீகவழியில் வாழ்க்கை அமைத்துக்கொண்டால் நிம்மதியும் நிறைவும் காலடியில் கிடைக்கும் என்று ஐயா அவர்கள் திரும்பத் திரும்பக் கூறுவார்கள். கிரகநிலையில் மாத்திரமல்ல நவாம்சநிலையிலும் கிரகங்கள் பெலமடையவேண்டும் என்று கூறுவார்கள். ஐயா அவர்களுக்கு நவாம்சத்தில் ஐந்து கிரகங்கள் பெலமடைந்திருந்தன. சூரியன் உச்சம், செவ்வாய் ஆட்சி, புதன் ஆட்சி உச்சம், சனி ஆட்சி இவைகளும் ஐயா அவர்களது தனித்துவமான வாழ்க்கைக்குத் துணைபோயின.

தமது தாய்தந்தையர்கள் நீண்டகாலமாக குழந்தைப்பாக்கியம் இல்லாமல் வருந்தினார்களாம். பிதா அமரர் வே.தம்பு அவர்களது ஜாதகத்தில் புத்திரஸ்தானமாகிய 5ல் கேது இருக்க, 5ம் அதிபன் செவ்வாய் 6ல் மறைந்து போய் இருக்கிறது. பலகோவில் குளம் எல்லாம் சென்று தீர்த்தமாடி வணங்கி இறுதியில் சுன்னாகம் ஐயனார் கோவிலுக்கு வந்து சேர்ந்தனராம். இனி செல்ல இடம் இல்லை நீயே தஞ்சம் நாம் ஆற்றோம், என்ற சரணாகதி நிலையில், தனது தலையை சுன்னாகம் ஐயனாரது வாசற்படியில் அடித்தாராம். (இது வெறித்தனமா? முரட்டுத்தனமா? பக்தியின் உயர்நிலையா? என்பதை யாமறியோம்)

அன்றுமுதல் அவரது நெற்றியில் சிறிய பாக்களவிலான கட்டியொன்று தளும்பாக உருவாகிவிட்டது. இது பின்னர் மாறவேயில்லை. இதே கட்டி ஐயா அவர்களின் வலது கை மணிக்கட்டிலும் வந்திருந்தது. அது மட்டுமல்ல அவர் பரம்பரைக்கும் இது தொடர்கின்றது. இது ஐயப்பனின் ஒரு முத்திரையோ என்று எண்ணத்தோன்றுகின்றது.

இன்னுமொரு ஆச்சரியமான விடயம். ஐயாவின் மறைவிற்குப் பின்னர்தான் எனக்குப் புலனாகியது. ஐயனார் சுவாமிகள் ஹரிஹரபுத்திரன். அதாவது விஷ்ணுவினதும், சிவனினதும் புத்திரன் என்று வேதங்கள் கூறுகின்றது. ஐயா அவர்கள் முற்றுமுழுதாக விஷ்ணுபகவானையே பரப்பிரம்மமாகவும் முழுமுதற்கடவுளாகவும் கொண்டு ஸ்ரீ ராமபிரானையே வணங்கி வந்தாலும், தனது நெற்றியில் பூசுகின்ற சிவசின்னமாகிய விபூதியை விடவில்லை. எந்நேரமும் முக்குறி விபூதிப் பூச்சும் அதன் மேலாக சந்தன குங்குமத்தினாலான திருநாமமும் கம்பீரமாக காட்சியளிக்கும். பலர் ஐயாவைக் கேட்டிருக்கிறார்கள். ‘ஐயா! விஷ்ணுபகவானை வழிபடும் உங்களுக்கு, ஏன் விபூதிப் பூச்சு? இது தேவைதானா?’ என்று அதற்கு ஐயா அவர்கள் இதுதான் எனது பூர்வீகம், இதை மாற்றமாட்டேன் என்று கூறிவிட்டார். காரணம் இப்போதுதான் புரிகின்றது. உள்ளத்தில் நிறை வைஷ்ணவனாகவும், உடலில் ஹரிஹர புத்திரனாக சிவ விஷ்ணு சின்னங்களுடன் வாழ்ந்திருக்கிறார். அல்லது சமயங்களுக்கிடையில் சமரச உணர்வைக் காட்டவா? என்பதும் விளங்கவில்லை.

ஐயா அவர்கள் முருகபக்தியில் திளைத்த குடும்பத்தின் வழிவந்தவர். மாவைக் கந்தனுக்கு குடிகுடியாட்பட்டவர்கள். அதன் காரணமாகவே ‘மயில்வாகனம்’ என்ற திருநாமமும் அவருக்குச் சாத்தப்பட்டது. ‘ஐயா! எப்படி நீங்கள் விஷ்ணுபகவானிடம் வந்தீர்கள்?’ என்று கேட்டதற்கு, தான் வாழ்க்கையில் படமுடியாத துன்பதுயரங்களை அனுபவிக்கும்போது, தான் வழிபட்ட தெய்வங்களும் தன்னுடன் கூட அழுதனவேயன்றிஅவைகளால் என்னைக் காப்பாற்றமுடியவில்லையென்றும், பின்னர் விநாயகப்பெருமான்தான் தனக்கு விஷ்ணுபகவானைக் காட்டித்தந்தார் என்றும் கூறுவார். இன்றும் தனது வழிபாட்டினைத் தொடங்கும்போது ‘சீதக்களபச் செந்தாமரை’ விநாயகர் அகவல் படித்தே பூஜையை ஆரம்பிப்பார். விநாயகரது முதல் மந்திரமான ‘சுக்லாம் பரதரம் விஷ்ணும்’ என்பதும் விஷ்ணுபகவானையே தனக்கு ஞாபகமூட்டுவதாகக் கூறுவார். அருணகிரிநாதர்கூட அவர் திருப்புகழில் நெடிய மாமன் விஷ்ணுபகவானின் புகழ்பாடி இறுதியில் மட்டும் இப்படிப்பட்டவ-னுடைய மருகோனே என்றுதான் பாடியுள்ளார் என்பதையும் ஞாபகமூட்டுவார்.

யாழ்ப்பாணத்து அருள்வல்லார் யோகர்சுவாமிகள் ஐயா அவர்களின் தீட்சாகுருவாவர். தெல்லிப்பளை துர்க்கையம்பாள் கோயிலடியிலிருந்து யாழ்ப்பாணம் சிவன்கோவில் வாசல்வரை காரின் இடதுபக்க முன்சீற்றில் ஏறிய சுவாமி அவர்கள் சாரதி ஆசனத்தில் இருந்த தமக்கு ஸ்ரீராமநாமத்தை உபதேசித்ததாகப் பெருமைப்பட்டுக்கொள்வார். எல்லோருக்கும் சிவநாமம் சொல்லிக்கொடுத்த சுவாமி தனக்கு ஸ்ரீராமநாமத்தை உபதேசித்ததையிட்டு மிகவும் ஆச்சரியப்பட்டார். எல்லாம் கடந்த உயர் பிரம்மநிலையில் எல்லா நாமங்களும், ஒருவனையே

குறிக்கின்றன. இவற்றை ஞானிகள் அறிவர். ஆனால் வாழும்வரைக்கும் ஒரு உறுதியான பாதை தேவைப்படுகின்றது என்று ஐயா கூறுவார். எப்பவோ முடிந்த காரியம்! ஒரு பொல்லாப்பும் இல்லை! முழுவதும் உண்மை! யாமறியோம்! என்ற யோகர் பெருமானது அருள்மொழிகளைத் திரும்பத் திரும்பக் கூறுவார்.

மட்டக்களப்பில் (1976 என்று நினைக்கிறேன்) பெரிய ஆயர்பாடி ஜோதிடர் ஐயாவுடன், சிறிய ஜோதிடராகிய நானும் உரை நிகழ்த்தும் வாய்ப்புப் பெற்றேன். அங்கு ஜோதிடத்தில் சந்திரன் இரண்டு என்றும் அவை சோமனும், இந்துவும், அதாவது வளர்பிறைச் சந்திரன், தேய்பிறைச் சந்திரன் என்பவை இருவேறு பலன்களைத் தரும் என்றும் ஆற்றிய பேருரையால், மட்டக்களப்பில் ஜோதிடர் குழாமே மலைத்துவிட்டது. நானும் அன்றுதான் அப்பாடத்தைப் படித்தேன். அனைவரும் நண்பர்களாயினர். ஐயா ஆய்வுமண்டபத்திற்குப் போகும்போதும், முடிந்து வரும்போதும் ஜோதிடர்கள் பயபக்தியுடன் சுற்றிநின்று தமது ஐயங்களைக் கேட்டுத் தெளிந்துகொண்டமை என்னை ஆச்சரியப்படவைத்தது. ஆயர்பாடி ஜோதிடர் என்ற பெயர் எனக்கு பரம்பரை என்ற வழி வந்துள்ளது. ஆனால் அதன் சிறப்பை, மகிமையைத் தக்க வைத்துப் புகழடையச் செய்ய குருநாதர்தான் வழிவிடவேண்டும். இவனுக்கு இது வருகிறது என்று கூறியுள்ளமையால் சற்று ஆறுதலடைகிறேன்.

**ஆயர்பாடி மயில்வாகனம் ராமகிருஷ்ணன்.**

*உன்னிடத்தும் என்னிடத்தும் பிறரிடத்தும் விஷ்ணுவே இருக்கிறார். என்னிடம் சகிப்பின்றி வீணாகக் கோபிக்கின்றாய். எல்லோரிடத்தும் ஆத்மாவையே காண்பாயாக. வேற்றுமை எண்ணத்தை எங்கும் விட்டுவிடுவாயாக.*

*கோவிந்தனை வழிபடு, கோவிந்தனை வழிபடு, கோவிந்தனை வழிபடு. பிறவிக்கடலைக் கடப்பதற்கு நாமஸ்மரணையைத் தவிர வேறு உபாயத்தை நாங்கள் காணவில்லை.*

*பஜகோவிந்தம் -*

ஓம் ஸ்ரீ ராமஜெயம்

# வைஷ்ணவ திலகம்

*– புலோலியூர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை ஜெயம் –*

**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**
**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே.**

**'ஓம் நமோ நாராயணாய நமஹ'**
**'ஓம் ஸ்ரீதேவி பூதேவி சமேத**
**ஸ்ரீமன் நாராயணாய நமஹ'**
**'ஓம் நமோ பகவதே வாஸுதேவாய'**

நாம் எமது வாழ்க்கைப் பாதையில் பல பெரியோர்களைக் காண்கின்றோம், பழகுகின்றோம். ஆனால் ஒரு சிலரே நம்மனத்தில் ஆழமாகப் பதிந்து ஒரு தனித்துவமான இடத்தைப் பிடித்துக் கொள்கின்றார்கள். இப்படியாக நம் உள்ளத்தைக் கவரக்கூடிய விதத்திலே எமக்குத் தேவையான அதி சிறந்த அறிவுரைகளும் பொருள் பொதிந்த போதனைகளும் வாரிவாரி வழங்கிய வள்ளல் உயர்திரு. ஸ்ரீமான். ஆயர்பாடி வேலுப்பிள்ளை தம்பு மயில்வாகனம் அவர்களுடன் பழகிய எவரும் அவர்களைத் தம் வாழ்நாளில் மறக்கமாட்டார்கள். அவர்களுடன் மனம்விட்டுச் சம்பாஷித்தாலே எம் மனத்திலுள்ள துயர்கள் அனைத்தும் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்து, இதயம் நிறைகுடம் போன்று நிறைந்த ஆனந்தப் பரவசத்தை அடையும்.

ஐயா அவர்கள் தமிழ் அட்சரங்களை முறைப்படி உச்சரித்து ராமநாமங்களையும், ஆழ்வார் பாசுரங்களையும் பாராயணம் செய்யும் பாணி அலாதியானது. அவை இப்போதும் எம் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டு இருக்கின்றன. அதிநுட்பமான ஆன்மீகத் தத்துவங்களையும் அவற்றிற்கான விளக்கங்களையும் தூய செந்தமிழில் அலங்காரமாகத் தொகுத்து, அனந்தசயனனை, நாராயணனை, மாயவனை, மதுசூதனன், விஷ்ணுபிரானை, கேசவனை, புருஷோத்தமனை, பத்மநாபனை, கிருஷ்ணனை, வாமதேவனை, ஸ்ரீநிவாஸனை, கோவிந்தனை, மாதவனை எம் மனக்கண்முன் கொண்டுவந்து விடுவார்கள்.

நெற்றியில் கம்பீரமாக வீற்றிருக்கும் நாமத்துடனும், மலர்ந்து ஜொலிக்கும் முகத்துடனும், ஆஜானுபாகுவான தோற்றத்துடனும் சற்றேனும் சளைக்காது மணிக்கணக்கில் பக்கவாத்தியங்களுடன் பாட்டும், பொருளும் கலந்து பஞ்சாமிருதம்போல் விஷ்ணுவின் மகிமைகளை உபந்நியாசம் செய்வார்கள். அவர்களின் விளக்கங்களை நோக்கினால் `இந்த ஆன்மா அழியாதது ஆனால் உடல் அழியும் தன்மை கொண்டது'' என்பன போன்ற உயரிய தத்துவங்களை எவரும் விளங்கக்கூடிய முறையில் உதாரணங்களுடன் விளக்குவார்கள்.

இலங்கையில் வைஷ்ணவ சமயத்திலே முதல்வரிசையிலே குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்களுள் ஐயா அவர்களும் ஒருவராகும். வைஷ்ணவசமயத்தையும் தமிழ்மொழியையும் தமது இருகண்கள் எனப் போற்றிப் பேணிக் காத்து வாழ்ந்தவர்கள்

ஆயர்பாடி ஐயா அவர்கள். காலை, மாலை நேரங்களில் மாத்திரம் அல்ல சதாசர்வ காலமும் நாராயணனின் நாமத்தை இயம்பிக்கொண்டிருப்பார்கள்.

வாக்குத் தூய்மையுடன் உளத்தூய்மையும் உள்ள ஐயா அவர்களின் சொல், செயல்கள் யாவும் ஆத்மீக ரீதியில் மேம்பட்டன. ஆத்மீக தத்துவங்களிலும், ஆத்மீக வாழ்விலும் ஐயா அவர்கள் கொண்ட ஆர்வமும் ஆதங்கமும் ஐயா அவர்களை ஆத்மீகத் துறையில் மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்திவிட்டது.

அழிந்துவிடக்கூடிய உடலுக்கு ஏற்படக்கூடிய சிறுசிறு சுகயீனங்களைக்கூட ஔஷதங்களால் குணப்படுத்துவதிலும் பார்க்க ஆத்மீக நம்பிக்கையால் சொஸ்தப்படுத்தலாம் என்று வாழ்ந்து காட்டிய உயரிய மகான் ஐயா அவர்கள் ஆகும். அறிவுக்கு ஆத்மீகப்போதனைகளை வழங்கும் ஐயா அவர்கள் தங்களது தெல்லிப்பளை ஆயர்பாடி ஆச்சிரமத்திலும், மற்றும் வசித்த இடங்களிலும் தானங்களில் சிறந்த அன்னதானம் செய்தார்.

வல்லிபுரக்கோவில் திருவிழாக்காலங்களில் அங்கேயே தங்கியிருந்து அன்னதானம் செய்து வந்ததோடு அங்கே இருக்கும் இலுப்பை மரநிழலில் அமர்ந்து பக்தர்குழாமுக்கு ஆன்மீக சொற்பொழிவுகளும், உபந்நியாசங்களும் செய்வார்கள். தேர்த்திருவிழாவின்போது அடியார் கூட்டத்துடன் பஜனை பாடிக்கொண்டு தேருடன் செல்வார்கள்.

ஐயா அவர்களின் ஆன்மீக உரைகள், பொருள் பொதிந்தவை மாத்திரமல்லாது எமது அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளை ஆன்மீக ரீதியில் தீர்த்துவைக்கக் கூடியதாக இருக்கின்றன. ஐயா அவர்களின் விளக்கங்கள், உபந்நியாசங்கள் இலங்கையில் பல்வேறு பாகங்களிலும் இடம்பெற்றிருக்கின்றன.

இல்லறத்திலிருந்தவாறே துறவறத்தை மேற்கொள்ளலாம் என்ற பழமொழிக்கேற்ப தம் வாழ்க்கையைத் தூய அறவழியிலே ஐயா அவர்கள் கொண்டார்கள் ஐயா அவர்கள் துன்பம் என்று வருவோர்க்குத் துயர் துடைத்து பேரின்பத்தைத் தமது பொருள் பொதிந்த போதனைமூலம் அளித்தார்கள்.

அறத்தைப் பேண நல் மனைவி, பிள்ளைகள் அவசியம். நாராணயணன் புகழ்பாடும் ஐயா அவர்களுக்கு எப்படி நாராயணனுக்கு லட்சுமிதேவியோ அதேபோல் அதிசிறந்த பண்புகளுடன் குறிப்பறிந்து நடக்கும் மனைவியும், அறிவும், பண்பும், ஞானமும் நிறைந்த மக்கட் செல்வங்களும் கிடைத்திருக்கிறார்கள். தமது கணவனின் விருப்பு, வெறுப்புக்களை அறிந்து அதற்கேற்ப உரிய காலத்தில் ஐயா அவர்களின் ஆத்மீக வாழ்விலும் நாளாந்தக் கடமைகளிலும் முழுமனத்துடன் ஒரு தெய்வத்திற்கு ஒரு பக்தன் செய்யும் பணிவிடைகள் போல் செய்தார்கள். அவர்களின் கடமைகள் போற்றுதற்குரியது.

ஐயா அவர்களின் மக்கட்செல்வங்களும் ஐயாவின் குறிப்பறிந்து ஐயாவின் மனம் குளிரும்படி நடந்து தந்தையின் உயர்குணங்களுக்குச் சிறிதும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார்கள்.

**ஓம் ஸ்ரீராம ஜெயம்**

***விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை ஜெயம்***

ஓம் ஸ்ரீராமஜெயம்

# சொல்லின் செல்வனுக்கு என் அஞ்சலி

**— கு.பொ.வி.வரதராஜா —**

**மாவட்ட நீதிபதி, மாவட்ட நீதிமன்றம், திருகோணமலை.**

24.08.98ல் வைகுந்த பதம் எய்திய ஈழமணித்திருநாட்டின் புகழ்பெற்ற தெல்லிப்பழை ஆயர்பாடி ஸ்ரீ.வே.த.மயில்வாகனம் அவர்களைத் தெரியாதவர்கள் இலங்கையில் அனேகமாக இல்லையென்றே கூறலாம். புராதனப் பெருமைமிக்க பழமைவாய்ந்த பின்னணி கொண்ட குடும்பத்தில் அவர் அவதரித்தார். பொதுவாகவே அவரது பெயரைவிட ஆழ்வார் என்று சொன்னால்தான் இலங்கையில் உள்ள அனைவரும் அவரை அறிந்துகொள்வார்கள். மகாபாரதம், ராமாயணம், மற்றும் வைஷ்ணவ கிரந்தங்கள் ஆகியவற்றில் ஆழ்வார் அவர்களுக்குரிய புலமையும், ஆட்சியும் சொல்லும் தரமன்று. இலங்கையில் நாலாபக்கத்திலும் அவருடைய கீதைப்பேருரையோ அல்லது ராமாயண சொற்பொழிவோ நடைபெறாத இடமே இல்லையென்று சொல்லலாம். பன்னிரு ஆழ்வார்களினால் அருளப்பெற்ற நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் அவருக்குள்ள ஆட்சி இலங்கையில் சமகாலத்தில் வேறு யாருக்கும் இருக்கும் என்று கூறமுடியாது. எந்தத் திருப்பாசுரத்தையும் எந்நேரத்திலும் எவர் கேட்டாலும் அவரால் இயம்பமுடியும். ராமகாவியத்தையும், மகாபாரதத்தையும் குறிப்பாக கீதையையும், திவ்விய பிரபந்தத்தையும் ஓதியும், ஓதுவித்தும் மக்களை மேன்மையடையச் செய்தார். இதைவிட ஜோதிட சாஸ்திரத்தில் அவருக்குள்ள பாண்டித்தியத்தை இலங்கையில் அறியாதவர்கள் இல்லை. ஜோதிட சாஸ்திரத்திற்குப் புறம்பாக அவர் கூறும் வாக்குப் பலிக்கும்.

ஆழ்வார் அவர்களுடன் எமது குடும்பம் எனது வாலிபப் பராயத்தில் இருந்தே நெருங்கிப்பழகும் பாக்கியம் பெற்றது. அவருடைய இன்சொல்லும், விருந்தோம்பல் பண்பும், மனம் கவலையுற்றிருக்கும் வேளையில் அவர் சொல்லும் ஆறுதலும் மறக்கமுடியாது. 1994ம் ஆண்டு நான் கடுமையாக நோய்வாய்ப்பட்டபோது ஒரு கட்டத்தில் தெஹிவளையிலுள்ள அவருடைய இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். என்னைப் பார்த்த மாத்திரத்திலேயே 'உனக்கு பாரதூரமான நோய் எதுவுமில்லை. இங்குள்ள வைத்திய நிபுணர்கள் கண்டமாதிரியாகவும் குளிசைகளைத் தருவார்கள். நீ அதை வைத்து விழுங்காதே. ஆயினும் ''ஸ்ரீ ராம லிகித ஜெபம் செய்" என்று சொல்லி அன்றே அதனை ஆரம்பித்தும் வைத்தார். ஸ்ரீ ராம லிகித ஜெபத்தை ஆழ்வார் அவர்களின் கட்டளைப்படி நான் தொடர்ந்து வந்தாலும் எனக்குச் சிகிச்சை அளித்த வைத்திய நிபுணர்கள் இலங்கையில் புகழ்பெற்ற முதலாம் தர வைத்திய நிபுணர்களாக இருந்தமையால் அவர்கள் தந்த மருந்துகளையும் நான் பாவித்தே வந்திருந்தேன். ஆயினும் பலன் எதுவும் கிட்டவில்லை. இதனிடையே ஆழ்வார் அவர்களை இடையிடையே சந்தித்த போதெல்லாம் மேற்சொன்னவாறே திரும்பத் திரும்பக் கூறிவந்தார். நான் அவசரமாக இந்தியா செல்ல நேரிட்டபோது 04.07.98இல் அவரைச்

சந்தித்தபோது மீண்டும் தான் சொன்னதையே எனது நோய் தொடர்பில் கூறியிருந்தார். அத்துடன் ஸ்ரீ ரங்க மஹிமையையும் கூறி அங்கு சென்று வருமாறும் கூறியிருந்தார். எதேச்சையாக இந்தியாவில் மருத்துவ பரிசோதனைக்கு நான் உட்பட்டபோது ஆழ்வார் அவர்கள் கூறிய கூற்று உண்மையாகியது. நோய்க்குக் காரணி ஒன்றாக இருக்க எனக்கு வேறு வைத்தியம் இங்கு அளிக்கப்பட்டது. ஆயினும் அதைச்சொல்ல தற்போது அவர் நம்மிடையே இல்லை என்பது தான் எனது வருத்தம்.

90 வயது வரை ஒருவர் வாழ்வது இன்றைய காலகட்டத்தின் களநிலவரத்தை கவனத்தில் எடுக்கும்போது மிகவும் அரிதான ஒன்று. 90வது வயதிலும் கூட ஆழ்வார் அவர்களுடைய ஞாபகசக்தி சற்றும் பிசகவில்லை. 04.07.98ல் நானும் எனது குடும்பத்தார்களும் அவருடைய இல்லத்தில் அவரைச் சந்தித்தபோது எங்கள் எல்லோரையும் அவர் வாழ்த்தினார். அந்தச் சமயம் தான் இவ்வுலக வாழ்க்கையை விட்டு நீங்கவேண்டிய தருணம் வந்துவிட்டது என்பதைத் தெளிவாகவும், திடமாகவும் கூறினார். என்னால் அதை ஜீரணிக்கமுடியவில்லை. ஏனெனில் அவ்வளவு தெம்புடனும், ஆரோக்கியத்துடனும் காணப்பட்டார். இருப்பினும் அவரிடமிருந்து அன்றைய தினம் நாங்கள் விடைபெற்றபோது அவருடைய வாழ்த்துரையில் சிறிது மாற்றமும், சற்று உணர்ச்சியும் தென்பட்டது. அதன் காரணம் யாது என்று பின்னர்தான் அறிந்துகொண்டேன்.

1997ம் ஆண்டு ஸ்ரீராமநவமியின்போது திருகோணமலையில் நடைபெற்ற யாகமும் அவர் நிகழ்த்திய சொற்பொழிவும் இன்றும் இங்கு வாழும் மக்களிடையே நன்கு ஞாபகத்தில் உள்ளது. தொடர்ந்தும் 1997ம் ஆண்டு மீண்டும் ஒருமுறை விஜயம் செய்திருந்தார். அந்தச் சம்பவமும் யாவரின் மனத்திலும் பசுமரத்தாணி போல் இருக்கிறது. அவர் பேருரை நிகழ்த்தும் போதெல்லாம் ஸ்ரீ ஆஞ்சநேயரைக் குறிப்பிட்டுச் சொல்லப்படும் ''புத்தி மதாம் வரிஷ்டம்'' என்ற சொற்பதம் ஞாபகத்தில் வரும்.

ஆழ்வார் அவர்களுடைய பூவுலகவாழ்வு முற்றுப்பெற்றது. அவருடன் சாதாரண பழக்கமுடையவர்களுக்கே அதை ஜீரணிப்பது கஷ்டமாக உள்ளது. அப்படியிருக்க அவருடன் ஏறக்குறைய 55 ஆண்டுகள் இல்லற தருமத்தை செவ்வனே ஆற்றிவந்த அவருடைய பார்யைக்கும், புத்திரர்களுக்கும் இந்நிகழ்வானது எவ்வளவு பரிதவிப்பைக் கொடுக்கும் என்பது புரிந்துகொள்ளக்கூடியதே. ஆயினும் ஆரம்பம் என்கின்ற நிகழ்வு ஒவ்வொன்றும் முடிவு என்கின்ற சம்பவத்துடன்தான் பூரணமாகும். இது தவிர்க்கமுடியாத இறை நியதி. அதிலும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வைகுந்த பரமபதம் எய்தும் பாக்கியம் எல்லோருக்கும் கிடைத்துவிடுமா என்ன?

***கு.பொ.வி.வரதராஜா.***

07. 09. 98

ஓம் ஸ்ரீ ராமஜெயம்

# ஆயர்பாடி ஆழ்வார்

*— சி. இரங்கராசா —*

பிரதிப் பிரதம செயலாளர், வடக்கு கிழக்கு மாகாணசபை.

**கண்டோங் கண்டோங் கண்டோங் கண்ணுக்கினியன கண்டோம்**
**தொண்டீர் எல்லீரும் வாரீர் தொழுது தொழுது நின்றார்த்தும்**
**வண்டார் தண்ணந் துழாயான் மாதவன் பூதங்கள் மண்மேல்**
**பண்டான் பாடிநின் றாடிப்பரந்து திரிகின்றனவே.**

**(5ம்பத்து 2ம் திருவாய்மொழி)**

ஆயர்பாடி ஆழ்வார் என்றே நாம் அவரை அழைப்பது வழக்கமாகும். ஆழ்வார்களின் பிரபந்தங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டமையாலோ, அவர்களது வாழ்க்கைநெறியைப் பின்பற்றி எடுத்துக்காட்டாக வாழ்ந்தமையாலோ அல்லது வைஷ்ணவனுக்குரிய சீரியநெறியை கடைப்பிடித்தமையாலோ அழைக்கப்பட்டிருக்கலாம். 1970களின் ஆரம்பத்தில் இருந்து ஆண்டு தோறும் பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் பல ஆண்டுகளாகத் தொடர் பிரசங்கத்தினை அவர் நிகழ்த்தினார். பிரசங்கம் என்றால் அத்துடன் பட்டாபிஷேக வைபவம், அன்னதானம் போன்ற நிகழ்ச்சிகளும் சேர்ந்தேயிருக்கும். அவரின் பொன்னாலை வருகையுடன் அவர் எமது வீட்டில் தங்குகின்றமையும், எனது குடும்பத்தார் அவரது ஆச்சிரமத்திற்குப் போய்வருகின்ற சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன. பூர்வபுண்ணியத்தால் ஆழ்வார் அவர்களை திருக்கேதீச்சரத்திலும் திருக்கோணேஸ்வரத்திலும் வரவேற்று உபசரிக்கும் வாய்ப்புக் கிட்டியது. இந்நிகழ்ச்சிகளை அவர் அடிக்கடி நினைவுகூர்ந்து பேசுவார். ஆழ்வார் அவர்களின் கொழும்பு வீட்டில் அவர்களைப் பலமுறை தரிசித்து ஆசிபெறும் வாய்ப்புக் கிடைத்தது. அவருடனான சம்பாஷணையின்போது அவர் கூறிய எத்தனையோ விடயங்களை எனது தகுதிக்குறைவினால் மனதில் நிலைநிறுத்திப் பின்பற்றமுடியாது போயிற்று..

ஆழ்வார் அவர்கள் ஞானமார்க்கமும் பக்திமார்க்கமும் கலந்த ஒருவித பாதையிலே வாழ்க்கையை நடாத்தினார். ராமகாதை முதல் பல தத்துவ நூல்கள் வரை கற்றிருந்தார். ரமாயண பிரசங்கங்களின்போது அவர் பாத்திரங்களாகவே மாறி உணர்ச்சிபூர்வமாகவும், உயிரோட்டத்துடனும் சம்பவங்களை விளக்கும்போது பக்தர்களும் அவருடன் சேர்ந்து கண்ணீர் விடுவதும், உணர்ச்சிவசப்படுவதும், சிரிப்பதும் சர்வசாதாரணம். அதேபோன்று பகவத்கீதை போன்ற ஞானக் கருவூலங்களிலிருந்து அநாயாசமாக மேற்கோள்களை எடுத்துக்காட்டித் தனது ஆத்மானுபவத்தையும் சேர்த்து ஆன்மா பற்றிய கருத்துக்களை விளங்கவைப்பது ஞானமார்க்கத்தில் அவரது தகுதியைக் காட்டுவதாக இருக்கும்.

அவர் தனது வாழ்க்கை அனுபவங்களைப் பற்றி அவ்வப்போது கூறுவார். அவற்றில் அவர் நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஆற்றிய தொடர் பிரசங்கங்கள், திருப்பணிகளுக்கு உதவிய முறைகள், யாகபூசைகள், பஜனை வழிபாடுகள் என்பன முக்கியமானவையாகும்.

ஒவ்வோர் பிரசங்கங்-களின்போதும், யாகபூசைகளின்போதும் நிகழும் அற்புதமான நிகழ்ச்சிகள், அன்பர்கள் பெற்ற எதிர்பாராத அனுபவங்கள், ஆறுதல்கள் என்பன பற்றி அவ்வப்போது கூறுவார். ஆறுதல் வேண்டியும் தனது பிரச்சனைகளுக்குப் பரிகாரம் வேண்டியும் பல மட்டத்தினரும் அவரிடம் அணுகுகின்றமை, அவர் செய்த பேருதவிகள் என்பன பற்றியும் குறிப்பிடுவார். அவரது முக்கியமானதொரு அனுபவத்தைக் குறிப்பிடுதல் இங்கு பொருத்தமானதாகும்.

ஒருமுறை யோகர்சுவாமிகள் ஆழ்வார் அவர்களை 'நீ இந்தப்பக்கம் இனிமேல் வரக்கூடாது' எனக் கடுமையாக ஏசிக் கலைத்துவிட்டார். ஆழ்வார் அவர்கள் வழமைபோல ராமஸ்மரணையில் ஈடுபட்டவராக வாழ்ந்துவந்தார். சிறிதுகாலம் சென்றபின் ஆழ்வார் அவர்கள் தமது காரில் வந்துகொண்டிருக்கும்போது தெருவில் வந்துகொண்டிருந்த யோகர்சுவாமிகள் அவரிக் காரை மறிததார். 'நீ ஏன் அந்தப்பக்கம் வருவதில்லை?' எனக் கேட்டதற்கு ஆழ்வார் அவர்கள் 'என்னை நீங்கள் அந்தப்பக்கம் வரக்கூடாது என்று கூறியபடியால்தான் நான் அங்கு வருவதில்லை' என ரோஷத்துடன் கூறினார். யோகர்சுவாமிகள் பக்குவம் அறிந்து ஆட்கொள்ளும் சித்தர்தானே! காருக்குள் ஏறி அமர்ந்தபடி, 'நான் வரவேண்டாம் என்று சொல்லிக் கலைத்தவன் உன்னுள் இப்போது இல்லை, போய்விட்டான்; இனி நீ வரலாம்.' என்று ஆட்கொண்டார். யோகர்சுவாமிகளை ஏற்றிக்கொண்டு அவரின் இல்லத்திற்கு ஆழ்வார் சென்றார். அவர்களிடையே இடம்பெற்ற கார்ப்பயணங்களின் போதான உரையாடல்கள் மிகவும் அந்தரங்கமானவையாகவும் ஆழமானவையாகவும் இருந்தனவாம்.

ஆழ்வார் அவர்கள் மிகவும் இறுக்கமான நியமங்களை உடையவராக இருந்தார். ஆனால், அன்பு, தயவு, இலக்கிய ரசனை, ஹாஸ்யம் போன்ற இயல்புகள் இல்லாது இருந்தார் என்பதற்கு இல்லை. அவரது பிரசங்கங்களின்போது அவரது இலக்கியரசனை வெளிப்பட்டது. அன்றாட வாழ்க்கையில் அன்பும், தயவும் பிரதிபலித்தன. திருகோணமலைக்கு அருகில் உள்ள 'மூதூர்' என்ற ஊருக்கு அனுமான் வந்தான் என்று கம்பர் கூறியுள்ளார்; அருணகிரிநாதர் திருப்புகழில் முருகனைப் பாடவில்லை. அப்படி இப்படியெல்லாம் நாராயணனைப் பாடிவிட்டு கடைசியில் 'திருமால் மருகோனே' என்று முருகனைப் பாடுகின்றார் என்பன போன்ற தகவல்களை சுவைபடக்கூறுவார். சிலவேளைகளில் சிரிசிரியென்று சிரித்தபின் விடயத்தைக் கூறுவார். உலகியல் ஹாஸ்யங்களாக அவை இருக்கமாட்டாது. **'உள்ளுவார், உள்ளிற்றெல்லாம் உடன் இருந்து அறுதி என்று வெள்கிப்போய் என்னுள்ளே நான் விலவறச் சிரித்திட்டேனே'** என்று தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருப்பாசுரத்தைக் கூறி, 'எப்படி நான் கனவு நினைக்கிறது, அவன் பார்த்துக்கொண்டெல்லோ இருக்கிறான்' என்பது போன்ற செய்திகள் கூறுவர்.

மற்றவர்கள் மனதில் உள்ளதை அறிவதிலும் அவர்கள் மனதிலே பதியும்படி கருத்துக்களை இடித்துக் கூறுவதிலும் அவரது பாணி தனியானது. சம்பாஷணைகளின் இறுதியில் 'நான் உனக்கு ஏசுவன்'; 'உன்னுடைய உத்தியோகம் எனக்குப் பெரிசே'; இல்லாட்டி உங்களுக்கு உறைக்காது'; 'ஏறாது'; 'நான் சொல்லுறன் கேள்'; 'நீ எவ்வளவு செய்யலாம் ,தெரியுமே' என்றெல்லாம் இடித்துக் கூறுவார். அதன் பின் மங்கள ஆசிகள்

சொல்லி விபூதி பிரசாதம், தீர்த்தம் முதலிவை தந்து ஆசீர்வதிப்பார். சிலவேளைகளில் ஜவ்வாது, புனுகு போன்ற வாசனைப் பொருட்களும் இதில் அடங்கும்.

ஒரு சந்தேகத்தைக் கேட்டால், உடனே திருப்பி ஒரு கேள்வி கேட்பார். மறுமொழி கூறினால் 'உதுதான் உங்கடை படிப்பு'; 'நீ உவங்கள் இலக்கியகாரர் மாதிரிப் பேசுகிறாய்' என்பார் பின்பு மகாபாரதம், இராமாயணம், ஆழ்வார்கள் சரிதை அல்லது பாகவதம் போன்ற ஒன்றில் இருந்து சந்தர்ப்பம் ஒன்றைக்கூறி சந்தேகத்திற்கும் விளக்கம் கொடுப்பார்.

அவருக்குத் தீர்க்கமான சமூகப் பார்வையும் இருந்தது. சில சமயங்களில் 'இங்கு தவம் குறைந்துவிட்டது, ஆன்மீகம் இல்லை, இதுதான் இங்குள்ள பிரச்சனைகளுக்கெல்லாம் காரணம். பூசைகள், வழிபாடுகள் எல்லோருமாகச் சேர்ந்து செய்யவேண்டும். இப்போது எல்லாமே வியாபாரமாகப் போய்விட்டது. சனங்கள் கடவுளிடம் இரந்து பிரார்த்தனை செய்தால்தானே பிரச்சனை தீரும். இதை யார் இப்போது விசுவாசமாகச் செய்கிறார்கள்?' என்பார். 'ஒரு பெண் தலைவிரித்தாள் பாரதப்போர் மூண்டது, பேரழிவு ஏற்பட்டது. இப்பத்தே பெண்பிள்ளைகள் தலைவிரிச்சுப்போட்டுத் திரிகிறார்கள், இதனால் நாட்டில் என்ன நடக்குமோ?' என்று கவலைப்படுவார். ஒழுக்கத்தின் அவசியத்தைக் கடுமையாக வலியுறுத்தினார்.

இடக்கான கேள்விகளுக்கு மிக உறுதியாகப் பதிலளிப்பார். மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் ஒன்றி ஈடுபட்டு பக்தி செலுத்தவேண்டும் என்பர். இயமம், நியமம் வெகு முக்கியம் என்பார். 'மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் ஒன்றிவிட்டால் இயக்கம் ஸ்தம்பித்துவிடும். எடுத்த தீபத்தை வைத்துக்கொண்டு மந்திரத்தையும் விட்டுவிட்டு அப்படியே நிற்கவேண்டியது தானே எப்படி வழிபடமுடியும்?' 'அதென்ன 108தரம் உச்சாடனம் செய்தல் ஏன் கூடிக்குறையச் செய்யக்கூடாது? 108 வரை மனக்கணக்கு போட்டுக்கொண்டிருந்தால் அல்லது மாலையை உருட்டிக்கொண்டிருப்பதில் கவனம் போனால் எப்படி இறைவனிடத்தில் மனதை வைத்திருப்பது?' என்பன போன்ற இடக்கான கேள்விகளுக்குச் சடக்கென்று பதில் கொடுப்பார்.

அவரது நித்திய காலைப் பூசைகள் எல்லாம் முடிந்த பின்னர் தான் நீர் அருந்துவார். அவரது மதிய ஆகாரம் காலை 11.30 மணிக்கு முன்னர் முடியும். யாராவது அவ்வேளை வந்திருந்தால் அவருக்கும் கட்டாயச் சாப்பாடு. அவரது நியமங்கள் மற்றவர்கள் பார்த்துப் பின்பற்றத்தக்கன. அவரது புனிதப் பொருட்களில் அவர் வழிபட்ட படங்கள், நூல்கள், ஜெபமாலை, தீர்த்தம் வைக்கும் வலம்புரிச்சங்கு என்பன முக்கியமானவை. அவரது நியமங்களைக் கொண்ட வாழ்க்கைமுறைக்கு அவரது மனைவி, மக்கள் மிக்க ஒத்தாசையாக இருந்து கடமைகளையும் தொண்டுகளையும் செய்துவந்தார்கள். இது அவர்களும், ஆழ்வாரும் செய்த பாக்கியமாகும்.

அவர் மீண்டும் மீண்டும் கூறிய கருத்துக்கள் சில நினைவுகூரத் தக்கனவாகும். 'நீங்கள் சந்தோஷமாக இருக்கவேண்டும்.' ஆத்மாவின் இயல்பு மகிழ்ச்சியாக இருத்தலே, உங்களது கவலையால் கடந்தகால நிகழ்வுகள் மாறப்போவதில்லை. ஆகவே கவலையை விட்டுவிட்டுக் கடமையைச் செய்யுங்கள். எல்லாம் வல்ல கருணையுள்ள கடவுள் உங்களோடு

இருக்கின்றார். பிறகு ஏன் எல்லோரும் பிச்சைக்காரர் மாதிரி ஏங்கிஏங்கிப் பயப்பட்டுக்கொண்டு அலைகிறீர்கள்? எதற்கும் ஆசைப்படக்கூடாது. அதனால்தான் துன்பம் வரும். கடவுளை அடைய ஆசைப்பட்டாலும் துன்பம் வரத்தான் செய்யும். எல்லாத் துன்பங்களையும் கடவுளின் பிரசாதமாக ஏற்றுக்கொண்டுவிட்டால் கவலையில்லை. ஒருவனுக்குத் தன்னம்பிக்கை இழக்கின்ற அளவுக்குத் துன்பம் வருகின்றது என்றால் அது ஆண்டவனின் பெருங் கருணையாகும். திரௌபதை தன் நம்பிக்கையை இழந்த பின்னர்தான் கண்ணனிடம் சரணாகதியடைய முடிந்தது. பூரணசரணாகதியின் பின் எமக்கு என்ன பொறுப்பு? அவனே எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வான். என்பார்.

ஆத்மாவை அறிய முயற்சிசெய்யவேண்டும்; அதை அறிந்தால் எல்லாவற்றையும் அறிவீர்கள்; ஏனென்றால் ஆத்மாதான் அந்தப் பரம்பொருள்; அதுதான் இந்த உலகம். சாதகனுக்குத்தான் அது முடியும். அது சும்மா இலேசுப்பட்ட அலுவல் இல்லை' என்பார். 'அதற்கு இறுக்கமான சாதனை வேண்டும்; ஒருவன் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற படிமுறைகளைக் கடந்துசெல்ல வேண்டும்.' என்றும் கூறுவார். 'இவைகளை இலேசில் செய்யமுடியாது. வினை உன்னைத் தடுக்கும்; இதிலிருந்து விடுபட ராமநாமந்தான் வழி. ராமநாமம் பிராப்தத்தை மட்டுமின்றி சஞ்சிதம், ஆகாமியம் ஆகிய வினைகளையும் அழித்து உன்னை விடுவிக்கும்' என்பர்.

ஆழ்வார் அவர்கள் இறுதிநாட்களில் மிகவும் உள்முகமாகத் திரும்பியிருந்தார். நெடுநேரம் யோசித்துவிட்டு ஒரு கருத்தைக் கூறுவார். கடைசியில் 'அதுவும் நான் சொல்லுறத்திற்கு யார்? நான் அப்படிச் சொல்லக்கூடாது' என்றார். தனது கை அசைவினால் மங்கள ஆசிகள் தெரிவித்து சைகை காட்டி வாயைப் பொத்திக்கொண்டார். இதற்கு அடுத்தமுறை இறுதியாகச் சந்தித்தபோது எதுவுமே அதிகம் பேசவில்லை. அப்போது அவர் நீண்டநாட்கள் இருக்கப்போவதில்லை என்ற செய்தியை அறிந்திருந்தேன். அதன் பின் நான் கடுமையாகச் சுகவீனமுற்று மருத்துவமனையில் இருந்தபோது பூசைசெய்து விபூதிப் பிரசாதம் அனுப்பி, அதை நான் எவ்வாறு பத்திரப்படுத்தினேன் என்பதைக் கேட்டு அறிந்து திருப்தி கொண்டார் என்று பின்னர்தான் நான் அறிந்துகொண்டேன்.

ஆழ்வார் அவர்களின் பக்திநெறியும், ஞான நெறியும் கலந்த வாழ்க்கைமுறைதான் நாம் அவரிடமிருந்து பின்பற்ற வேண்டியது. அவரது ஆத்மா சூட்சுமமாக எங்களிடையே வலம் வந்துகொண்டிருக்கும் என்பதே என் துணிவு.

**பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்**
**நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங் கியாதொன்று மில்லை**
**கலியும் கெடுங்கண்டு கொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்**
**மலியப் புகுந்திசை பாடியாடி யுழிதரக் கண்டோம்.**

**(5ம்பத்து 2ம் திருவாய்மொழி)**

***அன்பன்***

***சி. இரங்கராசா***

ஸ்ரீ ராமஜெயம்

அரி ஓம் நமோ நாரா அணாய நமக

# ஆயர்பாடி ஸ்ரீ மயில்வாகனம் ஆழ்வார்களே சரணம்

***– நாகராஜா கணபதிப்பிள்ளை -***

148/4, உவர்மலை வீதி, திருகோணமலை.

ஸ்ரீ ஹரியின் சேவகனாக வாழ்ந்து, பொலிக, பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம் என்ற தாரக மந்திரத்தோடு, தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைத்து தனது 90வது வயதிலே ஹரியின் பாதாரவிந்த கமலங்களையடைந்த மயில்வாகனம் ஆழ்வார்களின் வாழ்வு பூரணமானதாகும்.

பூரணமில்லா வாழ்வு கானல்நீருக்கு ஒப்பானது. கானல்நீரென அறியாத மான்கூட்டங்கள் தண்ணீர் அருந்துவதற்குச் சென்று ஏமாற்றமடைவதுபோல் புலன்களின் வயப்பட்டு மயக்கமுற்று அலையும் பக்குவப்படாத ஆன்மாக்கள், இன்பத்தினைத் தேடி அலைந்து கிடைக்காமல், மயக்கமுற்ற நிலையிலேயே அழிந்துபடுவதே மாந்தர்களின் வாழ்வாகின்றது. மயக்கமுற்று வாழ்கின்ற ஆன்மாக்களுக்கு வழிகாட்ட பக்குவப்பட்ட ஆன்மாக்கள் யுகந்தோறும் பிறவி எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். ராமனாகவும், கிருஷ்ணனாகவும் வந்த அவதாரபுருஷர்களின் அநுக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டு உலகில் தோன்றிய எத்தனையோ ஆன்மாக்கள் உலகநன்மைக்காக அல்லும் பகலும் உழைத்துவிட்டு பூரணநிலை எய்துகின்றார்கள்.

ஸ்ரீராமா, ஸ்ரீகிருஷ்ணா என்ற நாமங்களை ஒவ்வொரு மூச்சுடனும் கலந்து, ராமமயமாக கிருஷ்ணமயமாக வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைத்துவிட்டுச் சென்ற ஒரு பூரணமனிதனை காண்பதற்கும், பழகுவதற்கும் பயனடைவதற்கும் அடியவனுக்கு ஒரு வாய்ப்புக் கிட்டியது என் வாழ்நாளில் எனக்குக் கிடைத்த ஒரு தெய்வீகப்பேறாகும். சுவீப் ரிக்கற் வாங்கினால் பணம் கிடைக்கும் கிடைக்காமலும் போகும். ஆனால் அருளை வேண்டினால் கிடைக்காமல் போவதென்ற சொல்லுக்கே இடமில்லை. நிச்சயம் அருள் கிடைக்கும். இதை என் வாழ்நாளில் பிரத்யட்சண்யமாகவே அனுபவித்தேன்.

அந்த பூரணமனிதன் திருகோணமலையில் பூரணயாகம் ஒன்றைச் செய்வதற்காக வருகை தந்தார். உடல்நலம் குன்றிய இறுதிநாட்களில் நீ சென்று யாகம் செய். நான் இங்கிருந்து கவனித்துக்கொள்கின்றேன் எனக் கட்டளையிட்டார். யாகமே என்னவென்று தெரியாத அடியவன், அவர் பக்கத்திலிருந்து நடாத்துகின்றார் என்ற உணர்வுடன் யாகம் செய்தேன். இறுதிநாள் பூரண ஆகுதியை முடித்துவைத்தார். அதன் பின், திருகோணமலையில் கோயில் கொண்டிருக்கும் ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீகிருஷ்ணபகவான் ஆலய கும்பாபிஷேகம் 22.06.1998ல் நடைபெற்றது. கும்பாபிஷேகம் தொடக்கம் மண்டலாபிஷேகம் வரையுள்ள 48 நாட்களிலும் தொடர்ந்து, பகவான் நாராயணனின் அவதாரங்களும் மகிமைகளும் அடங்கிய ஸ்ரீமத் பாகவதத்தை உலகமக்கள் அறியும்பொருட்டு தொடர்ச்சியாக

உபந்நியாசம் செய். நாராயணன் அருள்புரிவார் எனக் கட்டளையிட்டார். சிரமேற்கொண்டு அடியவன் அவரது அன்புக்கட்டளையை நிறைவேற்றினேன். அடியவனால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத ஒரு திருச்செயல். இப்படிப்பட்ட ஒரு உறுதியான கட்டளையை இட்டு நிறைவேற்றி வைக்கக்கூடிய ஆற்றல் இறைவனின் பூரணஅருள் பெற்று செயற்படுகின்ற மனிதர்களைத் தவிர வேறு யாராலுமே முடியாததொன்றாகும். அதனால்தானோ அன்னாரை ஆழ்வார்களுள் ஒருவராக, ஆயர்பாடி மயில்வாகனம் ஆழ்வாராக ஆக்கிவிட்டார்கள் அடியார்கள்.

அன்னாரது உலகியல் வாழ்விலே நட்டம், நயம் எனப் பொருட்படுத்தாது, தனது பணி இதுவென நினைத்துச் செய்யும் தொழிலே தெய்வம் எனச் செயற்பட்ட கொந்துராத்துக்-காரராக, நல்ல சோதிடராக நல்லது, தீயது செய்யும் கிரகங்கள் என்ற நிலைப்பாட்டினைக் கடந்து, ஒவ்வொருவருடைய வாழ்விலும் அவர்களது அறியாமையினால் நடைபெறும் செயல்களை கிரகங்கள் மேல் பழியைப் போடாமல் 'நாள் என் செய்யும் கோள் என் செய்யும்' எல்லாவற்றிற்கும் மேலாக எம்பெருமான் இருக்கையில் என்ற நிலைப்பாட்டினைப் பின்பற்றி, தெய்வீக உணர்வுடன் சாதகங்களை நன்றாக ஆராய்ந்து இறையருளினால் தீயனவும், நல்லனவாக முடியும் என்ற விளக்கங்களைத் தருவதோடு, பல சோதிடர்கள் முடியாது, நடக்காது என்ற கூற்றுக்களைக் கூட முடியும், இத் திருமணத்தைச் செய். ஒரு குறையும் வராது, கட்டாயம் நடக்கும் என ஆணித்தரமாகக் கூறி தோஷங்களினால் பாதிப்பு ஏற்படும் என்ற நிலைப்பாட்டினையே மாற்றிக் கொடுத்தவர்களில் எத்தனையோ குடும்பங்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் எனக் கேட்கும்போது அவரது சோதிட அறிவுகூட வெறும் ஏட்டுச்சுரைக்காயல்ல, தெய்வீகச்செயல் எனத் தெளிவாகப் புரியும்படி வாழ்ந்தார்.

அன்னாரின் இறைசேவை இளமையிலிருந்தே ராமகாதை சொல்லும் ராமதாசராக, கந்தபுராணம் சொல்லும் முருகவேளாக, விஷ்ணுவின் அவதார மகிமைகளைச் சொல்லும் ஸ்ரீமத் பாகவதத்தையும், கிருஷ்ணனின் பகவத்கீதையையும் சிறிய குழந்தைகூட ரசித்துக் கேட்கும்படியான மழலைச் சொற்களாலும், அறிஞர்கள் கேட்டு ரசித்துத் திளைக்கும் பாணியிலும் பிரசங்கம் செய்து எத்தனையோ ஆன்மாக்களை பூரணப்படுத்தி, ராமமயமாக, கிருஷ்ணமயமாக ஆக்கி எந்தப் பற்றுதலும் இல்லாமல் வாழ்ந்து, வைகுண்டம் எய்திவிட்டார் மயில்வாகனனார்.

கண்ணன் கீதையிலே கூறியதுபோல், மனத்தையும் புத்தியையும் பகவானிடத்தில் அர்ப்பணித்து வாழ்ந்த ஆழ்வார், உயிர்பிரியும் போதும் "முற்றும் உணர்ந்த சூட்சுமமான ஆதிமுதலாகிய எல்லாவற்றையும் ஆள்பவனாக, தாங்குபவனாக, சிந்தனைக்கு எட்டாதவ்னாக, அறியாமை எனும் இருளுக்கு அப்பாற்பட்டவனாக, சூரியனைப்போன்று பிரகாசிப்பவனாக உள்ளவனுடைய எந்த சொரூபத்தை, ஒரு பக்தன், பக்தியோடும், சஞ்சலமில்லாத உறுதியான மனத்தோடும், இறுதிக் காலத்தில் தான் வாழ்ந்துகொண்டிருக்கும்போதே அப்பியாசித்துவந்த

யோகபலத்தோடும், தன் பிராணனை புருவங்களுக்கு மத்தியில் நிலைப்படுத்தி, உடலைத் துறக்கிறானோ அவன் அத்திவ்ய பரமபுருஷனுடன் இரண்டறக்கலக்கிறான்" என்ற நிலையினை மயில்வாகனம் ஆழ்வார் அடைந்தார் என்பதில் சந்தேகத்திற்கிடமின்றி அவரது இறுதிக்கால வாழ்வுமூலம் அறியக்கிடக்கிறது.

ஒரு புனித ஆத்மா நாராயண பக்தன், பூமியில் பிறந்தான், வாழ்ந்தான், தனக்குதவியாக பக்குவப்பட்ட பல ஆத்மாக்களையும் தன்னுடன் அழைத்துவந்தான் என்பதனை ஆழ்வாரின் வாழ்வும் குடும்பமும் எடுத்துக்காட்டுகின்றது. அல்லும் பகலும் '**தெய்வம் தொழாஅள் கொழுநற் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை**' என்ற வள்ளுவன் வாக்கிற்கமைய இலட்சுமி என்ற நாமத்துடனேயே, கணவனுக்கு சேவை செய்யவே பிறந்த அன்பு மனைவியும், பரிவாரங்களாக பிள்ளைகள் என்ற ரூபங்களிலே சரோஜினியும், கோபாலகிருஷ்ணனும், ராமகிருஷ்ணனும், ஸ்ரீகிருஷ்ணாவும், ராதாதேவியும், கிருஷ்ணதாசனும், ருக்குமணிதேவியும், ஸ்ரீஆண்டாளுமாக மற்றும் அவர்களோடு சேர்ந்த எல்லாக் குடும்பவிளக்குகளுமே விஷ்ணுமயமாகவே விளங்கும் . ஆழ்வார் மயில்வாகனனாரின் குடும்பமே வைகுண்டமாகத் திகழ்வதைப் பார்க்கும்போது அவருடன் தொடர்புள்ளவர்கள் யாவருமே கொடுத்து வைத்தவர்கள்.

அன்னாரோடு பழகிய குறுகிய காலத்தில் அடியவனும், எனது நண்பர்களும் பெற்றபேறு, நாராயணனைப் பற்றிய சூட்சுமமான எந்த ஏடுகளிலும் படித்தறியமுடியாத ஆழ்ந்த தெய்வீகச் செய்திகளை குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித்தருவது போல் சொல்லித்தந்தார். பாகவதம், ராமாயணம், கீதை படிக்கின்றோம் என்று சொன்னாலே போதும் ஆனந்தக்கண்ணீர் விடுவார். மழலைக் கண்ணன் சிரிப்பதுபோலச் சிரிப்பார். உடனே விளக்கம் சொல்லத் தொடங்கிவிடுவார். பல மணித்தியாலங்கள் எப்படிப் போனதென்றே தெரியாமல் மூழ்கி விடுவோம். எம்மை அறிதுயிலில் ஆழ்த்திவிடுவார். நாமும் குழல் ஊதும் கண்ணனின் கானத்தில் மயங்கிய கோபியர்கள் போலவும் ஆவினங்களைப்போலவும் மயக்கத்திலிருப்போம்.

இப்படிப்பட்ட ஆத்மாவை எப்படி மறப்பது? என்பதை நினைக்கவே முடியாமலுள்ளது. கோபியர்களைப் பிரிந்து வந்த கிருஷ்ணன், கோபியர்களுக்குச் சமாதானம் சொல்லும்படி உத்தவரைத் தூதனுப்பினான். எவ்வளவோ முயற்சித்தும் உத்தவரால் அவரைச் சமாதானப்படுத்தவே முடியவில்லை. அந்த கோபியர்களைப் பார்த்து உத்தவர் கேட்கின்றார், "உங்களை நட்டாற்றில் விட்டுச்சென்ற அந்தக் கிருஷ்ணனை நினைத்து ஏன் வீணாக வருந்துகின்றீர்கள்? அவனை மறந்து விடுங்களேன்" என்று கூறியதும், கோபியர்கள், "அந்தோ! அவரை மறப்பதற்கு எங்களால் முடியவில்லையே. உத்தவரே! அவரது அழகான நடையிலும், உதாரமான சிரிபபிலும், விளையாட்டுப் பார்வையிலும், இனிமையான பேச்சிலும் உள்ளத்தைப் பறிகொடுத்த நாங்கள் அவரை எங்ஙனம் மறப்போம்" என்று கூறுகின்றார்கள். யோகிகளும், ஞானிகளும் பகவானை நிலையாக நினைக்கவே முடியவில்லை என்கிறார்கள். ஆனால் இந்தக் கோபிகைகள் பகவானை மறக்கமுடியவில்லையே எனக்கூறுகின்றார்கள் (பாகவதம்)

இதே கோபிகைகளின் நிலைமைதான் ஆழ்வார் மயில்வாகனம் ஐயாவோடு இரண்டறக்கலந்து பழகியவர்களாகிய நாங்கள், அவரினது பிரிவை மறக்கமுடியாமல் வருந்துகின்றோம்.

கங்கையும் வழிபாட்டுத்தலங்களும், விக்கிரக வணக்கங்களும், யாத்திரைகளும், பஜனைகளும் காலம் செல்லச்செல்ல பக்குவம் வர, நாளடைவில்தான் புனிதத்தைத் தரும். சாதுக்களோ தரிசித்த மாத்திரத்திலேயே பலனளிக்கின்றார்கள்.

சாதுக்கள் எனது இருதயம். சாதுக்களுக்கு நான் இருதயம். என்னையன்றி அவர்கள் மற்றொன்றை அறியமாட்டார்கள். நானும் அவர்களையன்றி சிறிதுமறியேன். என பகவான் கூறுகின்றார் (பாகவதம்)

நாம் தரிசித்துப் பயன்பெற்ற சாது மயில்வாகனம் ஐயாவை எப்படி மறப்பது?

**சமர்ப்பணம் கண்ணனின் திருவடிகளுக்கே.**

***நாகராஜா கணபதிப்பிள்ளை.***

❁ ❁ ❁ ❁ ❁ ❁

ஸ்ரீ ராமஜெயம்

# மாவை நகர் வாசன்

***கந்தையா பாலசுந்தரம்***
**முன்னைநாள் சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியர்,**
**விஞ்ஞான தொழிநுட்பத் திணைக்களம்,**
**சொகோட்டோ மாநிலம், நைஜீரியா.**

“நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன் நாராயணா எனும் நாமம்” “பொலிக, பொலிக போயிற்று வல்லுயிர்ச்சாபம்” என்னும் ஆழ்வார்கள் பாசுரங்கள் தினமும் ஒலித்துக்கொண்டே இருக்கும்படி தான் ஆயர்பாடி. இங்கு வசித்தார் ஆயர்பாடி. சோதிட கலாநிதி. வே.த.ம அவர்கள் ஈழத்து ஆழ்வார்கள் என்று பெருமையோடு அழைக்கப்படுவர். ஆழ்வார்கள் வே.த.ம அவர்கள் வைஷ்ணவத்தில் ஆழ்ந்த அறிவு கொண்டவர்கள். அவர்கள் அறிவை எம்மவர் அளக்கவோ மதிப்பிடவோ முடியாதளவு விசாலமானது. ஆத்மீக வளர்ச்சியில் இமயத்திலும் சிறந்தவர். நான் கண்ட குரு, வழிகாட்டி தெய்வத்தின் விம்பம் இவர்களை நினைத்து அவர் காட்டிய வழியில் செல்ல எம் குருநாதர் அவர்களே வழிவிட வேண்டுமென அவர்கள் பாதகமலங்களைத் தியானத்தில் கொண்டு இதனைச் சமர்ப்பிக்கின்றேன்.

***கந்தையா பாலசுந்தரம்***
2512 Hemns Sq.,
Mississauga On,
L5C 3 X 4, Canada.

உ

ஓம் ஸ்ரீ ராமஜெயம்

# மா மனிதன் - ஆயர்பாடி

*— திருமலை ராமஜெயம் —*

ஆயர்பாடி ஐயா அவர்கள் ஆவணி 24ந் திகதி இரவு 9 மணிக்கு வெள்ளவத்தை டெல்மன் ஆஸ்பத்திரியில் இகலோக விடுதலைபெற்றார். வெகுதானிய வருடத்தில் தனக்கு விடுதலை கிடைக்குமென பல ஆண்டுகளுக்கு முன்னரே தெரிவித்திருந்தார். 17.08.98ல் தனது 90வது பிறந்த தினத்தை தெஹிவளை அப்போன்சோ மாவத்தையில் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் சேர்ந்து கழித்தார். 20ம் திகதி சுகயீனமுற்ற அவரை 21ந் திகதி ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கேயே நான்கு நாட்களின் பின் இறைபதம் அடைந்தார்.

ஆயர்பாடி ஆழ்வார் என்று போற்றப்படும் ஐயா அவர்களுடன் சுமார் 16 மாதம் மட்டுமே எமக்குத் தொடர்பேற்பட்டு இருந்ததும் அவரைப் பிரிந்தபோது பல பிறவிகளாக ஏற்பட்ட தொடர்பு விடுபட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது.

ஒரு சில நிமிடநேரம் மட்டுமே அவரைச் சந்தித்து உரையாடிய எவரும் அவரை எளிதில் மறந்துவிடமாட்டார்கள் அவரது உரையாடலும் உள்ளத்தைத்தொடும் மோகனப் புன்சிரிப்பும் எவரையும் அவர்பால் இழுக்கும்.

அதேநேரத்தில் அவரிடம் ஏச்சுவாங்காதவர்களும் இல்லையென்றே சொல்லலாம். மிக நுணுக்கமாகவும், அவதானமாகவும் எல்லாவற்றையும் அவதானிக்கும் அவர் தவறுகளைச் சுட்டிக்காட்டத் தவறமாட்டார். அறிவுரை தரவும் தவறமாட்டார்.

உலககதை நிறுத்தப்பட்டால் இறைவன் கதை ஆரம்பமாகும் என்பார். அவரிடம் சோதிடம் கேட்க வந்தாலும் சரி, குசலம் விசாரித்துச்செல்ல வந்தாலும் சரி ஆசிர்வாதம் வேண்டி வந்தாலும் சரி, கடவுளின் கதை கேட்காது ஆத்மீக அறிவுரை மழையில் நனையாது சாப்பாட்டுவேளையானால் உணவருந்தாது போகமுடியாது.

பத்தாவது வயதில் ராமாயணம் படிக்கத்தொடங்கிய ஆயர்பாடி ஐயா அவர்கள் பதினெட்டு வயதில் தனது முதல் ராமாயண பாராயணத்தை வேலைக்கு வந்த சக தொழிலாளர்களுக்கு இரவு பொழுதுபோவதற்காக ஆரம்பித்தார். விறாந்தையில் அரிக்கன் விளக்கொளியில் தன்னோடு வேலைசெய்ய வந்த பத்துப்பேருக்கும் ராமாயணக்கதை சொல்ல ஆரம்பிக்க அதை வீட்டிலிருந்த முதலாளியும், வீட்டுக்காரரும் கேட்டு மகிழ்ந்தனர். தேனீர் எல்லோருக்கும் பரிமாறினார்கள். மறுநாள் ஏனையோருடன் அவர் வேலைக்கு அனுப்பப்படவில்லை. தொடர்ந்து பத்து நாட்களுக்கும் இரவு வேளைகளில் ராமாயண கதாப்பிரசங்கம் நடைபெற்றது. ராமபட்டாபிஷேகமும் வேலையும் ஒரே நாளில் முடிவுற்றன. ஐயாவுடன் வேலைசெய்த அனைவருக்கும் வேட்டிசால்வையும் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது. ஐயாவுக்கு வேட்டி சால்வையுடன் அந்தக்காலத்து 101 ரூபாவும் தட்சணையாகக் கொடுக்கப்பட்டது.

அப்போது ஆரம்பித்த ராமாயணக் கதாப்பிரசங்கத்தை தனது 89வது வயதிலும் நிகழ்த்தினார். கடந்த இரண்டு வருடங்களாக நடப்பதற்குக் கஷ்டமாக இருந்ததனால் சக்கரநாற்காலி பாவிக்க ஆரம்பித்தார். அந்த நாற்காலியிலிருந்தவாறே கதாப்பிரசங்கம் ஆற்றினார். 1992ல் யாழ்நகர் விட்டு வந்தபின் ஆண்டுதோறும் ஸ்ரீராமநவமியினை இலங்கையின் பல பாகங்களிலும் நிகழ்த்திவந்தார். 1997 ஏப்ரல் 14, 15, 16ம் திகதிகளில் திருகோணமலையில் உட்துறைமுக வீதியில் அமைந்திருக்கும் 'திருவள்ளுவர் அகத்தில்' நடைபெற்றது. காலையில் யாகமும், மாலையில் ராமாயண கதாகாலேட்சபமும் நிகழ்த்தினார். 16ம் திகதி ஸ்ரீ சீதாராம பட்டாபிஷேக நிக்ழச்சி சிறப்பாக நிகழ்ந்து வந்திருந்த அனைவரின் உள்ளத்திலும் பெருநிறைவு ஏற்பட்டது.

மீண்டும் அதே வருடம் ஆவணியில் 16ம் திகதி திருமலை வந்து 17இலிருந்து யாகபூசை ஆரம்பித்தார். சுகயீனம் காரணமாக அவரால் தொடர்ந்து யாகம் செய்ய முடியாது போய்விட்டது. எனினும் ஆவணி 25ம் திகதி நடைபெற்ற கிருஷ்ணஜயந்தியின்போது கலந்து எல்லோரையும் ஆசீர்வதித்து ஆனந்தப்படுத்தினார்.

பலவருடங்களாக நிரம்பாத கந்தளாய்க் குளம் 1997 மாரிக்கு நிறைந்தது. கிருஷ்ணஜயந்தியன்று கிருஷ்ணன் கோயிலுக்குப் பூஜை செய்வித்தார். அடுத்த கிருஷ்ண ஜயந்திக்குள் 98 ஜூன் 22ம் திகதி மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

யோகர் சுவாமிகள் எவருக்குமே தீட்சை என்று கொடுத்ததில்லை. ஆனால் ஆயர்பாடி ஐயா-விற்குக் கிடைத்த அனுபவம் அபூர்வமானது. தெல்லிப்பளையில் யோகர் சுவாமிகள் வீதியால் செல்வதைக்கண்டு தமது காரை அவரைத் தாண்டிச்சென்று சிறிது தூரத்தில் நிறுத்தினார். 'எங்கே போகிறாய்?' என்று யோகர்சுவாமிகள் விசாரித்தபோது தாம் யாழ்ப்பாணம் செல்வதாகக் கூறினார் தானும் வருவதாகக் கூறி, காரில் ஏறிய யோகர் சுவாமிகள், 'யாழ்ப்பாணம் போகும்வரை உன்னால் எத்தனை ராமநாமங்கள் ஜெபிக்கமுடியும்?' என்று கேட்டதற்கு, 'தெரியாது, எண்ணிப்பார்த்துத்தான் சொல்லவேண்டும்' என பதிலளித்தார் ஐயா. முன்சீற்றில் இடப்பக்கமாக இருந்த யோகர்சுவாமிகள் தோளில் கையைப் போட்டுக்கொண்டு 'நான் சொல்லித்தாறேன் நீ சொல்லு' என்று கூறி, ராமநாமத்-தைச் சொல்லிக்கொண்டே போனார். தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஆரம்பித்த ராமநாம ஜெபம் வண்ணார்பண்ணை சிவன்கோவிலடியில் நிறைவுபெற்றது. இந்நிகழ்ச்சியை அடிக்கடி சொல்வதில் ஐயாவுக்கு மிகவும் பிரியமுண்டு.

ஞானமும், பக்தியும் ஒருங்கிணைந்த மாமனிதனாக வாழ்ந்து சென்றவர்களுக்கெல்லாம் ஆன்மீகப் போதனை செய்து உயர்வித்த உத்தம ஆத்மாவிற்கு அவரின் அறிவுரைப்படி நடந்து நாம் உய்வதுதான் நாம் செய்யும் பெரும் சேவை!

***திருமலை ராமஜெயம்***

**57, பிரதான வீதி, திருகோணமலை.**

ஓம் ஸ்ரீராமஜெயம்

# ஆத்ம ஜோதி

*— ராம் பாலசுப்பிரமணியம் —*

பல இலட்சக்கணக்கான மக்களுக்கு, ஆன்மீகக் கோட்பாட்டுக்கமைய, உலகியல் வாழ்க்கையில் ஈடுபட்டு, என்றும் ஆனந்தமயத்தில் லயித்திருக்கும் வாழ்க்கைமுறைக்கு வழிகாட்டி, வாழ்ந்துகாட்டி, எல்லோர் உள்ளத்திலும் குடிகொண்டுள்ள ஞானி உயர்திரு **ஆயர்பாடி மயில்வாகனம்** ஐயா தனது பஞ்சபூதங்களாலான ஆடையைக் களைந்து எறிந்துவிட்டு இறைவனுடன் இரண்டறக் கலந்துள்ளார். இம்மாற்றத்தால் ஏற்பட்ட தாக்கத்தால் தவிப்பவர்களில் யானும் ஒருவன்.

அன்னாருடன் எனக்கு ஏற்பட்ட முதற்தொடர்பு 1969ம் ஆண்டிலாகும். சோதிடம் சம்பந்தமாக அவருடன் தொடர்பு வைத்த யான், அவரது ஆன்மீகச் சொற்பொழிவுகளால் கவரப்பட்டு அவருடன் அளவளாவுவதில் அமைதியும், ஆனந்தமும் பெறும் ஒரு பாக்கியசாலியாகவிருந்தேன். அவரது வாழ்க்கையில் ஒவ்வொரு கோணத்திலும் ஆன்மீகம் கலந்திருக்கும். வாழ்க்கை வாழ்வதற்கே என்பதை வலியுறுத்தியது அவரது வாழ்க்கைமுறை. ஆரம்பக்கல்வியிலும் சரி, தொழில்முறையிலும் சரி, சோதிட ஆராய்ச்சியிலும் சரி, சமயவாழ்க்கையிலும் சரி, இல்வாழ்க்கையிலும் சரி ஆன்மீகம் இரண்டறக்கலந்திருந்ததை அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் நன்குணர்வார்கள்.

சோதிடம் ஓர் கணித சாஸ்திர முறையல்ல. பலன் கூறப் புத்தக அறிவு போதுமானதல்ல. தியானமும், ஆன்மீக சிந்தனையும் அதன் உயிர்நாடிகள். இதனை அவரின் ஆரூடங்களைக் கேட்டவர்கள் நன்கறிவார்கள். 1976ஆம் ஆண்டு தமிழ்த்தலைவர்களை நிறுத்திவைத்து விசாரிக்கப்பட்ட 'ட்ரயல் அட் பார்' வழக்கைப் பற்றி ஆறு மாதங்களுக்கு முன்பாக, அவ்வழக்கை விசாரித்த நீதிபதி ஒருவருக்குக் கூறியதை, அந்நீதிபதியே என்னிடம் கூறி வியந்தார். இராமாயணக் கதாப்பிரசங்கத்தில் அன்னார் ஒரு சமுத்திரம். அவ்வேளைகளில் பக்திக்கோர் எல்லையே இல்லை. அதனால் ஏற்படும் பலன்களோ எண்ணிலடங்கா. ஆயர்பாடி ராமகதை கூறினால் இராம பட்டாபிஷேக நாளில் வர்ணபகவான் மழையை வாரி வழங்கும் காட்சியைக் காணாதவர்களே இல்லை. மழை வேண்டுமானால் ஆயர்பாடியின் ராமகதை கூறப்படவேண்டுமென்பது மக்கள் கருத்தாக மலர்ந்தது. இக்காட்சியைப் பலமுறை நேரிற் காணும் வாய்ப்புப் பெற்றவர்களில் நானும் ஒருவன்.

'ஆன்மாவுடன் பழகு - ஆனந்தமாய் இருப்பாய்' என்பது அடியேனுக்குக் கூறப்பட்ட தாரக மந்திரம். அதனால் பல இன்னல்களை இலகுவாக எதிர்நோக்கக்கூடிய சக்தியைப் பெற்றேன். உள்நோக்கிப் பார்த்தால் அமைதியும், சாந்தியும், சமாதானமும். வெளிநோக்கிப் பார்த்தால் குழப்பமும், அமைதியின்மையும் என்பதை அதற்கேற்ப உதாரணங்களுடன்

உள்ளங்கை நெல்லிக்கனிபோல எடுத்துரைப்பார். நண்பகல் உணவு உச்சிப்பொழுது சாயுமுன் உட்கொள்ளப்பட வேண்டுமென்பதையும், அதன் பலனையும் அவரது வாழ்க்கைமுறையிலிருந்து அறியமுடிந்தது. அவருக்கு அருகில் இருந்தால் யாத்திரையும் தேவையில்லை. சாதனையும் தேவையில்லை என்று தோன்றும். சுருங்கக் கூறின் அவர் ஒரு ஆத்மஜோதி..

**"கற்க கசடற கற்க கற்பவை - கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"**

எனனும் வள்ளுவர் வாக்கை அணுகியே அவரது வாழ்க்கைமுறை அமைந்தது. இளவயதில் ஆன்மீகக் கல்வியைத் தெளிவாகக் கற்று, தனது வாழ்க்கைமூலம் வாழ்ந்துகாட்டி, மனைவி மக்களை ஈடேற்றிப் பேரப் பிள்ளைகளுக்கும் ஆன்மீக வாழ்க்கைமுறைக்கு வித்திட்டு, குறைவின்றி நிறைவுடன் தொண்ணூறு ஆண்டுகள் வாழ்ந்து, தனது இறுதிக்காலத்தை ஞானக்கண்ணால் அறிந்து, அதற்கு எல்லோரையும் தயார்செய்து ஒருவருக்கும் ஒரு குறைவில்லாமல் நிறைவுடனே இவ்வுலக வாழ்விலிருந்து நீங்கிய முறை அவரது ஆன்மீக சாதனையின் பெருமையை மேலும் உயர்த்தியுள்ளது.

அன்னாரின் தகைமைக்குச் சான்றாக அவரது குடும்பம் மட்டுமல்ல அனைவருமே '***மயில்வாகன சுவாமி***" என்று தினமும் வழிபடும் ஒரு உன்னதநிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் அவரது மனைவி, மக்கள், மருமக்கள் ஆகியோரின் வாழ்க்கைமுறையைப் பார்க்கையில்

**"தக்கார் தகவிலார் என்பது அவரவர்**
**எச்சத்தாற் காணப்படும்"**

என்னும் வள்ருவர் வாக்கிற்கமைய வாழ்ந்துள்ளார் என்பது வெளிப்படை.

என்றுமே ஆத்மஜோதியாகத் திகழும் ஆத்மஞானிக்கு அளிக்கும் இக்காணிக்கையைப் பூரணப்படுத்துமுன் அவர் அடிக்கடி எமக்கு எடுத்துரைக்கும் ஸ்ரீராம நாம மகிமையை நினைவுகூர விரும்புகின்றேன்.

**"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே**
**தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே**
**ஜென்மமும் மரணமும் இன்றித் தீருமே**
**இம்மையே ராம என்ற இரண்டெழுத்தினால்"**

**ஓம் சாந்தி!**

***இ. பாலசுப்பிரமணியம்.***
Solicitor, (England & Wales)
Attony - at - Law & Notary Public (Sri Lanka)

ஓம் ஸ்ரீராம ஜெயம்

# ஆயர்பாடி மயில்வாகனம் சுவாமிகள்

— பொ. கந்தையா—

காந்தி ஆசிரியர்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பிறந்து வளர்ந்த இடம் 'ஆயர்பாடி'. மயில்வாகனம் சுவாமிகள் தான் வாழ்ந்த பகுதியை ஆயர்பாடியாக்கி கிருஷ்ணபரமாத்மா வாழ்ந்ததுபோல தானும் அங்கு வாழ்ந்து வந்தார். இதனால் ஆயர்பாடி மயில்வாகனம் சுவாமிகள் என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டார்.

சுவாமிகள் 1909ம் ஆண்டு ஆவணிமாதம் 17ந் திகதி தெல்லிப்பளையைச் சேர்ந்த மாவிட்டபுரத்தில் பிறந்தார். தகப்பன் பெயர் வேலுப்பிள்ளை தம்பு. தாய் பெயர் வீரகத்தி மாணிக்கம். கற்பனவெல்லாங் கற்று பிரவல சோதிடராக விளங்கினார்.

உரிய காலத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்த இலட்சுமி அம்மாளைத் திருமணம் செய்து திருக்குறள் வழியில் இல்லற தர்மத்தை நடாத்தி நாலு ஆண்பிள்ளைகளையும், 4 பெண்பிள்ளைகளையும் பெற்றார். அவர்களை கல்வி ஒழுக்கங்களில் சிறந்தவர்களாக்கி, நாட்டுக்குப் பயனுள்ளவர்களாகவும செய்தார்கள். அவர்கள் எல்லோரும் நல்லாயிருக்கிறார்கள். ஐயாவின் சமய சமூகப்பணிகளை அவர்களும் தொடர்கிறார்கள்.

மாவிட்டபுரத்திலுள்ள ஊரிவத்தைக் குறிச்சியில் சோதிடநிலையத்தையும் ஸ்ரீ ஆழ்வார்கள் ஆச்சிரமத்தையும் 1976ல் ஸ்தாபித்தார்கள். 1984 பங்குனிமாதம் ஒரு கோடி ஸ்ரீராமஜெபங்களை வைத்து அதன்மேல் ஆச்சிரமக்கோயில் கட்டப்பட்டு ஆனி 22ம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஊரிவத்தைக் குறிச்சியே இப்போது ஆயர்பாடி என வழங்கப்படுகின்றது.

'பசித்தோர் முகம் பார்'; 'உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோர்'; பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்'; 'அன்னமயம் பிராணமயம்' என்பன பழமொழிகள். ஆச்சிரமத்தில் தினமும் அடியார்கள் சாப்பிட்டுப் பசியாறிப் போகவேண்டும் என்பது சுவாமிகளின் கண்டிப்பான கொள்கை. ஆச்சிரமத்தில் தங்குமிடம், கிணறு. பூந்தோட்டம், கறவைப்பசு, வழிபாடு, பிரார்த்தனை, நூல்நிலையம் ஆகிய சேவைகளும் உள.

சுவாமிகள் எல்லா மூர்த்திகளையும் வழிபடுவார். அவற்றிலெல்லாம் கிருஷ்ணமூர்த்தியையே காண்பார். தனக்குள்ளேயே கிருஷ்ணபகவானைக் கண்டார் தரிசித்தார், வணங்கினார். இப்படி எல்லோரும் இருக்கவேண்டுமென விரும்பினார். கிருஷ்ணபரமாத்மாவின் லீலைகளைப் பற்றிப் பக்திப்பிரசங்கம் செய்வார். பாரத, ராமாயணயக்கதைகளைக் கதாப்பிரசங்கம் செய்வார்.

வில்லிபாரதக்காப்பு, நாலாயிரத் திவ்வியபிரபந்தத் தொகுப்பு என்னும் நூல்களை வெளியிட்டார். ஆஞ்சநேய சுவாமிகளின் மகிமைகள், ராமமந்திரம் ஆகிய துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு மக்களுக்கு இலவசமாகக் கொடுத்து கிருஷ்ணபக்தியை வளர்த்தார்.

'அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்து எய்துங்காண் பராபரமே' 'தாமின்புறுவது உலகின்புறக்கண்டு' என்னும் மகாவாக்கியங்களுக்கு உதாரணபுருஷராக வாழ்ந்தார். மக்களுக்கு வழிகாட்டி, வாழ்ந்துகாட்டி மாமனிதராக, மனிதருக்குள் மாணிக்கமாக விளங்கினார்.

வன்செயல் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு கொழும்பில் தெஹிவளையில் இல.28A, அப்பொன்சோ வீதியில் சோதிடநிலையத்தையும் ஆயர்பாடி ஸ்ரீ ஆழ்வார்கள் ஆச்சிரமத்தையும் அமைத்து தொண்டுகளைத் தொடர்ந்தார். திருகோணமலையில் இருந்தும்

சில அடியார்கள் அடிக்கடி ஆயர்பாடிக்குச் சென்று சுவாமிகளைத் தரிசித்து நல்லருளும் நற்பேறும் பெற்று வந்தார்கள்.

திருக்கோணேஸ்வரத்தில் சுவாமிகளுக்கு அதிகவிருப்பம். அதிக ஈடுபாடு. ராமநவமியை முன்னிட்டு 1997 சித்திரை 14 - 16 திகதிகளில் உள்துறைமுக வீதியில் உள்ள திருவள்ளுவர் மண்டபத்தில் பெரிய யாகம் ஒன்றை நிகழ்த்தினார்கள். ராமாயணப் பிரசங்கமும் ராமர் பட்டாபிஷேகமும் நடந்தன. ஆவணி 17 - 25 திகதிகளில் யாகமும், கிருஷ்ணஜயந்தி விழாவும் அதே மண்டபத்தில் நடைபெற்றன. யாகம் நடந்த நாட்களிலெல்லாம் நூற்றுக் கணக்கான அடியார்கள் சுவாமிகளின் விருப்பப்படி அன்னதானத்தில் பங்குபற்றி மனநிறை-வோடும் மன மகிழ்ச்சியோடும் சென்றார்கள்.

***சுவாமிகள் எனக்கு அனுப்பிய கடிதங்களில் எழுதிய அருளுரைகள்:—***

**"சாதுக்களின் தரிசனம் சேவை பணிவிடைகளால் யோகசித்திகள் எய்தப்பெறும்."**

**"அசத்துக்களிடம் அறிவின்மையால் வைக்கும் பற்று சம்சாரத்திற்குக் காரணமாகும். அவற்றை சாதுக்களிடம் வைத்தால் பற்று நீங்கி ஆத்மலாபம் பெறவும் காரணமாகும்."**

**"இவ்வுலகம் முழுவதும் எவனால் வியாபிக்கப்பெற்றுள்ளதோ, எவன் நிர்க்குணனாய் பிரகிருதிக்கும் அப்பால் உள்ளவனோ, எல்லா உலகங்களிலும் வேறு ஒளி இன்றி பிரகாசிப்பவனோ, எவனுக்கு ஆதி இல்லையோ இறுதியுமில்லையோ அவனே ஆத்மா. அல்லது பரமபுருஷன் எனப் பெறுவான்"**

**"நன்கு திடமாகவே வேரூன்றிய சம்சாரவிருட்சத்தை திடமான பற்றின்மை என்னும் ஆயுதத்தால் வெட்டிவிட்டு பிரம்ம சொரூபமான ஆதிபுருஷனையே சரணடைய வேண்டுவதே கிடைத்த மனித ஜென்மத்தின் மாபெரும் பாக்கியமாகும்."**

**"அறியாத நாங்கள் அறிந்த அறிவுடையோரின் பேச்சைப் பேசி, கருமங்களை விளக்கி விபரித்து புகழ்ந்து பேசும் வேதவாதங்கள் மிகுந்த இடத்தில் தத்துவ விசாரம் செம்மையாய் சுத்தமாய் விளங்காது கனவுக்கு நிகரான மனித வாழ்க்கைச் சுகம் தள்ளத்தக்கது. எவனுக்கு ஆன்மசுகம் தானாக உண்டாகவில்லையோ அவனுக்கு தத்துவஞானம் வெளிவராது."**

**"போதமிகும் பரமாத்மாவின் லீலைகளையும் அடியார்களின் அன்புரசத்தையும் பெற விரும்புகின்றோம். உத்தம சுலோகனான பரமாத்மாவின் லீலைகள் போற்றப்பெறுகின்ற இடமும், போற்றி வாழும் அடியார்களின் உறவுமே மேலான பிறவிக்குரிய பலன். எல்லா இடத்திலும் அவை இருக்காது. கிடைத்தற்கரிய மனிதப்பிறவி வீணாகாமல் சிறப்புப்பெற அடியார்களின் உறவு முக்கியம். அவை பெறக்கூடிய இடமும் ஸ்ரீ பரமாத்மாவினால் கிடைக்கவேண்டும்"**

**"முகஸ்துதி சொல்லாமல் பிறரின் மதிப்பைப் பெறுபவரே உண்மைவழியில் செல்பவரும் மக்களின் நன்மைக்கு வழிகாட்டக் கூடியவரும் ஆவார்!"**

**"தருணமறிந்து செய்யும் சேவை வானுலகத்திற்கு வழி திறந்துவிடும் என்பது பெரியோர் வாக்கு!"**

**"நல்லாரை நாவிலுரை. பொன்னைக் கல்லிலுரை. தர்மம் யாவினும் மேலானது மனோதர்மம். நல்ல நினைவு நல்ல பயன் தரும்."**

தொண்ணூறாவது வயதை முடித்து சில நாடக்ளுள் கிருஷ்ணபரமாத்மாவின் பாதாரவிந்தங்களைப் போய்ச்சேருவேன்.என்று கூறிக்கொண்டிருந்த ஆயர்பாடி சுவாமிகள் 24.8.98 திங்கள் இரவு 9.00 மணியளவில் கிருஷ்ணபதம் எய்தினார். சுவாமிகளின் தெய்வீகப் பணிகளை நாம் தொடருவோம். சுவாமிகளின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

**பொ. கந்தையா**

**முத்துக்குமாரசுவாமி கோவிலடி,. திருக்கோணமலை.**

ஓம் ஸ்ரீராமஜெயம்

# "ஓயாது ஒலித்த குரல் ஓய்ந்தது"

– **காரையூர் நா. பொன்னையா** –

(Diploma in English, Diploma in Mass Media, Diploma in Journalism)

தலைவர், பகவான் ஸ்ரீசத்யசாயிசேவா மண்டலி,

நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமையப்பெற்று கன்னலும் செந்நெல்லும் நிறையப்பெற்று சைவமும் தமிழும் தழைத்து ஓங்கச்செய்யும் சான்றோர் பலரையும், செல்வப்பெருமை கொண்ட வணிகர்களையும், விவசாயப் பெருங்குடி மக்களையும், தன்னகத்தே கொண்ட யாழ்ப்பாணத்தில் திகழ்வது திருவளரும் தெல்லிப்பளையூர். இக்கிராமத்தின் காவல் தெய்வமாக அமைந்தது துர்க்கைஅம்பாள் ஆலயம். அருள்சொரியும் அன்னையின் அருட்பெருக்கினால் பிறந்து, வளர்ந்து சீரும் சிறப்புடனும் வாழ்ந்த **ஸ்ரீ.வே.த.மயில்வாகனம்** என்னும் இப்பெரியாரின் மறைவு கேட்டுப் புலம்பாதோர் இலங்கை வாழ் மக்கள் இல்லை.

''வளரும் பயிரை முளையிலே தெரியும்'' என்ற கூற்றிற்கிணங்க அமரர் அவர்கள் காத்தற்கடவுளாம் ஸ்ரீமந் நாராயணப் பெருமான்மீது பேரன்பு கொண்டவர். எனவே அத்தெய்வத்தைப் பக்திசெய்ததன் விளைவாக 1976ம் ஆண்டு ***ஆயர்பாடி ஸ்ரீ ஆழ்வார்கள் ஆச்சிரமம்*** அமைந்தது. தவறாது ஒவ்வொரு ஞாயிறுதோறும் ராமநாம ஜெபம்செய்து மகிமையைப் பெற்றார். இதன் வாயிலாக வாழ்க்கையில் துன்பத்தைத் தழுவியவர்களும், நோய்நொடிகளால் பீடிக்கப் பட்டவர்களும் ஞாயிறு தினங்களில் இவ்வாச்சிரமத்திற்குத் தவறாது சென்று நாராயணன் புகழ்பாடி நிவிர்த்திபெற்றுச் சென்றமை இங்கு குறிப்பிடவேண்டியதொன்றாகும்.

***பல்கலைகளிலும் பட்டம்பெற்ற தந்தை***

பல்கலைக்கழகத்தில் படித்தப் பட்டம்பெறவில்லை. மற்றவர்களிடமிருந்து கலைகளைப் படிக்கவுமில்லை. தமக்குக் குருவாகிய ஸ்ரீநாராயணமூர்த்தியின்மேல் கொண்ட அன்பினால் அம்மூர்த்தியின் அருட்கருணையால் கலைகளைக் கற்று அக்கலைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளத் துணிந்தவர் அமரர் மயில்வாகனம் என்றால் மிகையில்லை. ''நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற வகையில் தேங்கிக்கிடந்த பல சமயநூல்களை தொகுப்புச்செய்தார். ஏறக்குறைய பத்து நூல்களின் தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார். இவைகளில் ஸ்ரீ ஆழ்வார்கள் பன்னிருவர்களும் அருளிய ''நாலாயிரத் திவ்விய பிரபந்தத் தொகுப்பும்'' ஒன்றாகும் என்பதை நாம் அறிவோம்.

***பெரியோர் உறவும் தென் இந்திய யாத்திரையும்***

1963ல் தென் இந்திய யாத்திரையை மேற்கொண்டார். அங்குள்ள கோவில்கள் பலவற்றையும் தரிசித்துள்ளார். ஆன்மீக வளர்ச்சிபெற்ற அமரர் மயில்வாகனம்

யோகர்சுவாமிகளின் சீடருமானார். இணுவை திவ்விய ஜீவன சத்ய சன்மார்க்கத்தலைவர் ஸ்ரீ. தியாகராசா சுவாமிகள், காங்கேசன்துறை ஜோதி சுவாமிகள், கிளிநொச்சி குருகுலம் ஸ்ரீ கணேசானந்த சுவாமிகள், தெல்லிப்பளை சாது பாண்டுரங்கன் ஆகிய சுவாமிகளுடன் தான் பெற்ற ஆன்மீக வளர்ச்சி ஊடாக உறவுகொண்டு ஆன்மீக வளர்ச்சிக்கு மெருகூட்டினார்.

### *நாட்டின் பல பாகங்களிலும் சமயச் சொற்பொழிவுகள்*

1961ம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை ஈழத்திரு நாட்டின் பல பாகங்களுக்குச் சென்று அங்குள்ள கோயில்களிலும் சமய நிறுவனங்களிலும் சமயச் சொற்பொழிவுகள் உபந்நியாசங்கள் நிகழ்த்தியுள்ளார். 'ஈழத்துச் சிதம்பரம்' என்று அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவிலில் 15.02.1969ல் 'சிவராத்திரியும் தவநிலையும்' என்னும் பொருளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார் என்பதை இந்நாளில் நினைவுகூரும்பொழுது நமது கண்கள் குளமாகின்றன. சமய வரலாற்றை யாவரும் விளங்கும் வகையில் எடுத்து ஆளுவதில் மிகவும் திறமைபடைத்தவர். ஸ்ரீராமநாம மகிமை பேசுவதில் பாண்டித்தியம் பெற்றவர் என்றால் மிகையில்லை. இவருக்கு நிகர் யாருமில்லை.

### *திறமை மிக்க சோதிடர்*

இறைவனின் பணியாளராக விளங்கும் நவக்கிரகங்களின் வரலாறுகளையும் அக்கிரகங்களின் குணாதிசையங்களையும் நுட்பமாகக் கற்று தமது கூர்மையான அறிவுத்திறன் கொண்டு பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளார். அங்கு அவர்கள் கண்ட பலன்களில் நம்பிக்கை கொண்ட இப்பெரியார் ஈடு இணையற்ற சோதிட ஆராய்ச்சி மூலம் தாம் பெற்ற அனுபவங்களை ஆதாரமாக்வும், மையமாகவும் கொண்டு நவக்கிரகங்களினால் ஏற்படக்கூடிய தீமைகளை மக்கள் இலகுவாகத் தவிர்க்கும் வகையில் தெய்வ வழிபாட்டு முறைகளையும், கிரக வழிபாட்டு முறைகளையும் அமைத்துள்ளமை அன்னாரின் சோதிடமகிமைக்கு மகுடமாக அமைகின்றது என்பது எமது நோக்காகும்.

### *அமரர் பெற்ற மகத்தான செல்வம்*

**"பெறுமவற்றுள் யாமறிவதில்லை**
**அளவறிந்த மக்கட்பேறல்ல பிற"**

மனிதன் தான் பெறக்கூடிய செல்வங்களில் மக்கள் செல்வமே மிகச் சிறந்ததாகும். இச்செல்வத்தை அன்னார் சிறப்பாகவே பெற்றிருந்தார். சுருங்கச்சொன்னால் அவர் பெற்ற எட்டுப் பிள்ளைகளும் அவர் முன் பணிவான பிள்ளைகளாகவும் தாய், தந்தை என்ற உணர்வுடன் வாழ்ந்துகொண்டேயிருக்கிறார்கள். இந்நிலை செல்வத்திற்கு ஆபரணம் அணிந்துள்ள வகையில் அமைந்தமை போற்றத்தக்கதொன்றாகும். மேலும் தமது மூத்த புதல்வர் திரு.ம.கோபாலகிருஷ்ணன் அவர்களை எங்கள் மண்டலிக்குச் தந்து பகவானின் அருட் கருணையையும் பெற்றுள்ளார் என்பதை இங்கு குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகும்.

**எல்லோருக்கும் நல்லவராக வாழ்ந்தவர்**

எல்லோருக்கும் நண்பனாய், நல்லாசிரியனுமாய் பார்வையிலே சேவகனாய் வாழ்ந்தவர் மடத்தடி மயில்வாகனம். அலுக்காது உழைக்கும் ஆற்றல் கொண்டவர். அலுப்பு என்பது அவரது அகராதியில் இல்லை. அன்னார் ஆற்றிய அளப்பரிய சேவை என்றும் எல்லோரினதும் உள்ளங்களில் என்றும் நிலைத்து நிற்கும் என்பது எமது அசையாத நம்பிக்கை. மனிதற்கும் மனிதத்திற்கும் பாலமாகிவிட்ட இப்பெரியார் சைவத்தமிழ் உலகின் பாரிசாத மலராகிவிட்டார். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய தில்லையிற் கூத்தனை இறைஞ்சுவோமாக!

**வாழ்க அன்னாரின் நாமம்!**
**வளர்க அவரது பணிகள்!**

**வாழ்க்கை என்பதில் பலவகை உண்டு**
**வாசல்தோறும் வேதனை உண்டு**
**எதையும் தாங்கும் இதயம் காண்பீர்**
**இறுதிவரையும் உயர்வு காண்பீர்.**

**காரையூர் – நா.பொன்னையா.**
அன்டர்சன் தொடர்மாடி, கூடலூர்,
கொழும்பு - 05.

*எல்லாத் தருமங்களை (செயல்களை)யும், பற்றற*
*விட்டொழித்து, என் ஒருவனையே சரண்புகுவாய்.*
*நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும்*
*விடுவிப்பேன், வருந்தாதே.*

*- பகவத்கீதை- சுலோகம் 66*

*அவரவர் தமதமது அறிவு அறிவகை*
*அவரவர் இறையவர் என அடி அடைவார்கள்*
*அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்*
*அவரவர் விதிவழி அடைய நின்றனரே.*

*- ஸ்ரீ நம்மாழ்வார்*

ஓம் ஸ்ரீராமஜெயம்

# "சமய சமரசம் கண்டவர்"

ஆத்மீக மாணவன்

**– *நௌஷாட் காதர்* –**

-பட்டயக் கணக்கறிஞன்-

இறையடியெய்திய எமது மதிப்புக்குரிய பெரியார் - ஆசான் ஆயர்பாடி மயில்வாகனம் ஐயாவை இற்றைக்கு ஒரு தசாப்த காலமாக அறிவேன். இக்காலகட்டத்தில் அவருடன் பழகிய ஒவ்வொரு கணமும் எனது வாழ்வின் பொற்காலமென்றே எண்ணுகின்றேன். ஆயர்பாடி ஐயாவுடன் தொடர்பேற்பட காலாக இருந்தவர் கணக்கியலில் எனக்கு ஆரம்ப ஆசானாக இருந்த ஐயாவின் புதல்வர் திரு. சிறீகிருஷ்ணா அவர்கள்.

அறிமுக நாட்தொட்டு ஐயாவின் ஆத்மீக உபசாரங்களைக் கேட்டறிவதில் வெகுவிருப்புக்கொண்டு அவரை நாடிச் செல்வேன். அவரது ஆத்மீகக் கருத்துக்கள் என்னை மிகவும் கவர்ந்தன. 'துறவு பூண்டு காட்டுக்கு ஓடாதே ஆனால் துறவுநிலைக்கு உள்ளத்தைப் பண்படுத்தி உலகில் வாழ்ந்திடு' அவரிடமிருந்து பெற்ற பதில் இது. 'கர்மத்தைச் செய் பலனை எதிர்பாராதே' என்று கிருஷ்ண பகவான் அருச்சுனனுக்குச் சொன்ன கீதோ உபதேசத்தை பல்வேறு பாணியில் ஐயா எனக்குச் சொல்லும் போதெல்லாம் உடல் சிலிர்க்கும்.

ஐயாவிடம் நான் கற்ற இன்னொரு விடயம் சகல மத நம்பிக்கைகளிலும் பொது ஒற்றுமையைக் காண்பது. எந்தச் சமயமாயினும் என்ன கோட்பாடாயினும் வெளிப்பொருளன்றி உட்பொருளறிதல் வேண்டும் அவ்வுட்பொருள் நன்மையையன்றி வேறு எதனையும் விளம்பாது - என்பது அவரது நோக்கு. இந்த நோக்குடன் அணுகினால் எதிலும் பிழைவராது என்பார் அவர். பல்லின மக்கள் இவ்வாறு பண்படுத்தப்பட்டால் பூமியில் அமைதியும் அன்பும் நிலவுமென்பது உண்மை. ஐயாவுக்கு நாம் செய்யவேண்டிய நன்றிக்கடன் யாதெனில் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு கர்மயோகியாக எமது வாழ்க்கையை அமைத்துக்கொள்வதே.

அன்னாரது ஆத்மா இறைவனடி சேர
பிரார்த்தித்தவனாக
**நௌஷாட் காதர்**

*"ஸர்வ தேவ நமஸ்காரம் கேசவம் பிரகச்சதி"*

**எல்லா இறைவழிபாடுகளும் இறுதியில் கேசவனையே சேருகின்றன.**

ஓம் ஸ்ரீராமஜெயம்

# ஈழத்து ஆழ்வார்

***நாராயணதாசன்—***

**கண்ணன் கழலினை**
**நண்ணும் மனமுடையீர்**
**எண்ணும் திருநாமம்**
**திண்ணம் நாரணமே.**

**-திருவாய்மொழி-**

மேற்குறித்த திருவாய்மொழிப் பாசுரத்தின் சிறப்பினை அடியேனுக்கு எடுத்துரைத்தவர எனது மானசீக குருநாதரும் ''ஆயர்பாடி ஆழ்வார்'' என்று எல்லோராலும் பக்தியுடன் அழைக்கப்பட்டவரும் பிரபல சோதிடரும், ஆன்மீக உபந்நியாசகரும் அறிஞருமாகிய தெல்லிப்பளை ஸ்ரீ.வே.த.மயில்வாகனம் ஐயா அவர்கள் ஆகும். அவர் பரமபதம் அடைந்துவிட்ட ஞாபகார்த்த மலருக்கு அடியேனும் சிலவார்த்தை எழுதும் பேறு கிடைத்தபோது எனக்கு மேற்குறித்த பாசுரத்தின் நினைவுதான் முதலில் வந்தது. ஒரு சமயம் அடியேன் இந்தப் பாசுரத்திற்கு இசையமைத்துப் பாடியபோது அதைக்கேட்டு மகிழ்ந்த ஆழ்வாரவர்கள் அதன் பெருமையைக் கூறினார்கள். அதாவது வைணவத்திற்கும் மாற்றுமதங்களுக்குமிடையில் இருந்த கருத்துவேற்றுமை காரணமாகப் 'புனல்வாதம்' செய்யப்பட்டபோது இப்பாசுரம் எழுதப்பட்ட ஏடு ஆற்றுநீரைக் கிழித்துக்கொண்டு எதிராக முன்னேறியதாம். அதனை முன்னோடியாகக் கொண்டே இதனை எழுதுகின்றேன்.

ஆழ்வார் அவர்களைப்பற்றி 'ஈழத்து ஆழ்வார்' என்னும் தலைப்பில் அடியேன் எழுதக் காரணம் பாரததேசத்தில் வைணவத்தின் ஆழம் கண்ட பன்னிரு ஆழ்வார்கள் வரிசையில் வைக்கத்தக்கதாக நமது நாட்டில் வைணவத்தின் ஆழம் கண்ட ஒருவர் இருந்தார் என்றால் அவர் நமது ஆழ்வார் அவர்களாகும். ஆரம்பகாலத்தில் கந்தபுராணத்தில் மிக ஈடுபாடுடைய-வராயிருந்து கம்பராமாயணத்தை அறிந்தபின் தீவிரமாக வைணவத்தை ஏற்று நாலாயிரத் திவ்வியபிரபந்தம், கம்பராமாயணம், பாகவதம், மகாபாரதம் முதலிய நூல்களை மனப்பாடமாகச் சொல்லத்தக்கதாக அறிந்தும் மற்றுமுள்ள வைணவநூல்களையும் படித்து மக்கள்மத்தியில் பக்தியை வளர்க்கக்கூடியதாக மிகச்சாதாரணமான எளிமையான உதாரணங்கள் மூலம் உபந்நியாசம் செய்யும் ஆற்றல் பெற்றிருந்ததோடு தமது வாழ்க்கை நடைமுறையில் இயமநியமங்களுடன் கூடிய ஒரு சீரிய வாழ்க்கையை வாழ்ந்து காட்டிய பெருமகன்.

அறிஞர்கள் மத்தியில் மாநாடுகளில் தனது அறிவாற்றலாலும் விவாதத் திறமையாலும் உண்மைக் கருத்தை நிறுவித்தாபித்ததை அடியேன் பலவிடங்களில் நேரில் கண்டவன். இருளிலே வழிதடுமாறி அலைந்த என்னைச் சிறிது வெளிச்சத்திற்கு அழைத்துவந்தவர் ஆழ்வாரவர்கள். நான் மட்டுமல்ல பலரும் அவர்களால் நெறிப்படுத்தப்பட்டுள்ளனர். 1965ம் ஆண்டில் ஆழ்வாரவர்களின் தொடர்பு ஏற்பட்டபின் சிலகாலம் அவரது தாசனாக இருக்கவும் உபந்நியாசங்களைக் கேட்கவும் அடியேன் வாய்ப்புப் பெற்றவன். ஆழ்வாரவர்கள் மிகமிக உன்னதமான இடத்தைச் சென்றடைந்து விட்டார்கள். அவரின் உபதேசத்தால் பயனடைய வேண்டியவர்களுக்கெல்லாம் இது பேரிழப்பாகும். இந்த இடத்தை நிரப்ப இன்னொரு ஆழ்வார் தோன்றினால்தான் உண்டு.

ஆழ்வாரவர்களின் சிறப்பியல்புகளை நாளெல்லாம் எழுதினாலும் எழுதிமாளாது. அவரை அறிந்தவர்களுக்கெல்லாம் இது தெரியும். ஆகவே இத்துடன் முடிக்குமுன் சிலவார்த்தை எல்லோரையும் போல அவரின் ஆத்மசாந்திக்கு இறைவனை வேண்டுகின்றேன் என்றோ அவரின் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவிக்கவோ நான் முன்வரவில்லை. ஏனென்றால் அவர் நிறை வாழ்வு வாழ்ந்து குடும்பத்தாரையும் நிறைந்த நிலையில் அமைத்துவிட்டுத் தானும் இம்மையிலேயே ஆத்மசாந்தி அடைந்தநிலையில் பகவானின் அனுமதிக்காகக் காத்திருந்தவர் அனுமதி கிடைத்ததும் சென்றுவிட்டார். இது அடியேனுடைய கருத்து. அப்புனிதரின் ஆத்மா எங்கேயிருந்தாலும் அடியேங்களை ஆசீர்வதிக்க வேண்டுமாய் வணங்குகின்றேன்.

**"ஓம் நமோ நாராயணா"**

***நாராயணதாசன்***

**(பொ. சிவகுருநாதன்)**

**பொன்னாலை.**

✿ ✿ ✿ ✿ ✿ ✿

ஓம் ஸ்ரீராமஜெயம்

# இதயத்திலிருந்து சில வார்த்தைகள்..........

***– திருமதி.நா.தம்பிராசா –***

மாவை ஆழ்வார் மாவைநகர் வாசன் ஸ்ரீ.வே.த.மயில்வாகனம் சுவாமிகள் எமது நெருங்கிய உறவினராக இருந்தும் அன்னாருக்கும் எமது குடும்பத்தார்க்கும் இடையே இருந்த பிணைப்பு சொந்தம் என்பதைவிட ஆன்மீக உறவிலேயே அபரிதமாக இருந்தது. எமது குடும்பத்தலைவர் ஸ்ரீ.நா.தம்பிராஜா அவர்கள் வீரகேசரி ஸ்தாபனத்தில் தொழில்புரிந்த காலம் தொடக்கம், அவர் திருமணம் புரிந்து இல்லறத்தில் ஈடுபட்டது முதல், குழந்தைச் செல்வங்கள் பெற்று அவர்கள் வளர்ந்தது, நிலைபெற்றது, எமது தொழில்சிறப்பு எல்லாவற்றிலும் அன்னாரின் பங்களிப்பும், ஆலோசனையும் இருந்துவந்தது. சுருங்கக்கூறின் தோழமைகலந்த பாசத்துடன் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிற்கும் அர்ச்சுனனிற்கும் இருந்த உறவுபோல சுவாமிகள் எமது குடும்பத்தலைவர் ஸ்ரீ.நா.தம்பிராஜாவுடன் கலந்து உறவாடி இருந்தார். 'நாராயணா' என்னும் நாமத்தின் பெருமையை எமக்கு அறிமுகம் செய்து பக்தி உணர்வூட்டி எம்மை ஆளாக்கிய பெருந்தகை அவர். எமது தலைவரையும் எம்மையும் வைணவ ஆலயங்கள் தோறும் அழைத்துச்சென்று தரிசனம் செய்யவைத்து பாகவத சேவையும் செய்வித்து எம்மை உய்வித்த அருளாளன் அவர். குறிப்பாக 1963ம் ஆண்டு சுவாமிகள் எமது குடும்பத்தலைவருடன் செய்த் இந்திய யாத்திரை அருள்மிகு வைணவத்தலங்ளைத் தரிசித்து அங்குள்ள ஐயங்கார், ஜீயர்களிடம் ஆசிபெறவைத்து எமது குடும்பத்தினரிடையே ஒரு ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்தியது. எமது குடும்பத்தலைவரின் மறைவின் பின்னரும் எம்மைப் பாசமிகு தந்தைபோல அரவணைத்து, ஆலோசனைகள் வழங்கி, ஆசிகூறி வழிநடத்தியது நாம் என்றும் மறக்கமுடியாதது. வைகுந்தம் சென்ற சுவாமிகள் எம்மை என்றும் ஆசீர்வதிக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

***திருமதி.நா.தம்பிராசா குடும்பத்தினர்***

ஓம்
ஸ்ரீராமஜெயம்
சற்குரு பாதந்துணை
ஹரி ஓம் நமோ நாராயணாய நம

**திவ்விய பாகவத பக்த திலகம் ஆழ்வார் பெருமாள்**

# திரு.வே.த. மயில்வாகனம் அவர்களை

**இணுவை தியாக சத்திய ஜீவன சன்மார்க்க இயக்கத்தார் வாழ்த்தியளித்த**

# மங்கல வாழ்த்துக்கள்

## பஃறொடை வெண்பா

திருவிளங்கு மார்பன் சீரரங்கன் தென்பால்
உருவிளங்கு சோலைமலை யுரான் – மருவிளங்கு
வேங்கடவன் வெண்ணைதிருடி உரலுருளப்
பாங்கர் மருதிடந்த பண்பினான் – ஓங்கிவளர்ந்(து)

ஈரடியால் மூவுலகும் எண்புகழ் மாவலிபால்
சீரடியர் வாழ்த் திறை கொண்டான் – போரவுணர்

பொன்றக் கடல் கடைந்து பொன்னாடு வாழ்வித்து
நின்றபுகழ்க் கோசலைபால் நேயமாய் – அன்புதரம்

தன்னு ளடங்கித் தனதுதரத் தண்டமெல்லாம்
மன்னி ஒடுக்கும் மலிபுகழான் – பன்னியசீர்ச்

சீதைக்கு விற்குனித்துத் தேவர் சிறைமீட்ட
ராதைக் கருள்ராமன் நற்புகழே – உளதைக்கும்

ஒல்கா துயரருளில் ஒன்றிக் கிடந்தின்பம்
மல்கா வளஞ்சுரந்து மாதவர்சேர் – பல்கால்

பயிலன்பர் வேண்டப் பகவன் கருணைக்
குயிலின் குரலோசை கோட்ப – மயிலனைய

மங்கையர் மைந்தர் மகிழ்தூங்கச் ஸ்ரீராமன்
சங்கையில்லாண்மை தனைக்கம்பன் – மங்கை

ஆழ்வார் திருமழிசை அன்பார் குலசேக
ராழ்வார் முதலோர் அடைந்தநெறி – வழக்கென்று

ஒருபான் தினத்திலுணர் வித்தசெம்மல் சீர்த்
திருவாரும் தெல்லிநகர்ச் செல்வன் – குருவான

ஆழ்வார் பெருமாள் மயில்வாகனன் மனம் மகிழ்ந்து
வாழ்வாங்கு செஞ்சோன் மழைபொழிந்தான் – வாழ்கவே

செல்வம் பழுத்துத் திசையாவும் சீர்வளர
கல்வி சுரந்து கலைவாழ்வில் – மல்கி
பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல கோடி நூறாயிரம்.

சுபம்.

**பாடியவர்: வித்துவான் இ. திருநாவுக்கரசு**

**இணுவில்.**
5-1-1963

**இங்ஙனம்,**
**தியாக சத்திய ஜீவன சன்மார்க்க இயக்கத்தார்**

உ

ஓம் சுத்த சக்தி

சற்குரு பாதந்துணை

ஹரி ஓம் நமோ நாராயணாய நம

# இணுவை தியாக சத்திய ஜீவன சன்மார்க்க இயக்கத்தாரால்

வழங்கப்பெற்ற

# பட்டமளிப்பு இதழ்

இணுவை தியாக சத்திய ஜீவன சன்மார்க்க இயக்கத்தார் ஆதரவில் இணுவில் சிவகாமசுந்தரி அம்மன் சந்நிதியில் சுபகிருது வருஷம் மார்கழி மாதம் நடைபெற்ற **ஸ்ரீமத் கம்பராமாயண கதா காலக்ஷேப** வைபவப் பூர்த்தி நாளாகிய (5-1-1963) ஸ்ரீ ராம பட்டாபிஷேக வைபவத்தில், அதனை வழமையாக நடாத்திவரும்

தெல்லிப்பளை பெருமாள் ஆழ்வார்

## திரு.வே.த. மயில்வாகனம் சோதிடர்

அவர்களைப் பாராட்டுமுகமாக அன்னாருக்கு

## ❋ திவ்விய பாகவத பக்த திலகம் ❋

என்னும் கௌரவப் பட்டம் பக்தகோடிகளால் அன்பளிப்புச் செய்து கௌரவிக்கப்பட்டது

*எமது வாழ்த்துக்கள் அவர்களுக்குரியன.*

இணுவில்
5-1-1963

இங்ஙனம்
**தியாக சத்திய ஜீவன சன்மார்க்க இயக்கத்தார**

ஓம்
ஓம் சுத்தசக்தி
ஹரி ஓம் நமோ நாராயணாய நம

## இணுவை தியாக சத்திய ஜீவன சன்மார்க்க இயக்கத்தார்

### பாகவதன் பெருமாள்

## திரு.வே.த. மயில்வாகனம் அவர்களை

பாடி அளித்த

# வாழ்த்துப்பா

### வெண்பா

திருவளர் மார்பன் தெளிபுகழ் பேசுங்
குருவென லாகுங் குணத்தோய் – பெருமலையே
வேற்பிள்ளை தம்பு மயில் வாகனவேளே! நல்
சூற்கொண்டால்! வாழ்க சுகம்.

### அகவற்பா

பூதல மாதின் பொட்டென லாகும்
ஈழத்துயர் சிர மிலகுயாழ்ப் பாணம்
காங்கேச னெனுங் கவியின்முரு கிருக்கும்
மாவை நகரதில் மனுமுறை வழுவாப்
பஞ்சசிற்பா சாரியர் பரவும்
கரும்பொன் வினைஞர் கண்ணிய மரபு
வேற்பிள்ளை தம்பு வேண்டிப் பெறுமகன்
மாதவன் சீர்நிறை வண்பாப் பாடும்
பாகவத னாயும் பக்திப் பரவசம்
உறவுரை கதாப் பிரசங்கி ஓதும்
சோதிட விற்பனன் சொற் பெருமாள் புகழ்
ஆழ்வா ராகியும் அடியார் கூட்டம்
அணையு மிடத்தே அடியா னாகியும்
வாழ் மயில்வாகன மதிநலத் தோன்றால்!
நாலாயிரத் திவ்ய பிரபந்த நாற்பாத்
திளைத்தமை நாமுந் திளைக்கச் சொல்வை!
நாரா யணனவ தாரநற் பெருமை
சீரா யோதச் சிந்தை செய்இணுவை
தியாக சத்திய சீவனசன் மார்க்க
இயக்கத் தாரின் இனிய வேண்டுதல்
ஏற்றுத் தசதினம் இராமா யணமுரை
ஆற்றி யெம்மை அவச மாக்கியே
தாசரதி புகழ் தங்கித் திளைக்க
நேசமுடன் சொல் நேய! அருண
கிரிதிருப் புகழ்முரு கின் மாதுலன்சீர்
விரிவுரை செய்ய விளங்கு முன்போல்
அன்பனுண் டோ! அவனியில் மிகுசுகம்
மாடுமனை மக்கள் நீடுநாள் வாழ்ந்து
பீடு பெற நின்று பெற்றுக் கீர்த்தியொடு
நாடு மீக்கூற நாவல் லவனாய்
கங்கா தீரங் காண்மணல் பலவினும் நீடுழி வாழ்க!
என்று வாழ்த்துவாம் யாம்.
ஏற்று நன்குறுக இந்நில மீதே

### விருத்தம்

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க!
மாதவன்றன் புகழ்பாடும் மயில்வாகனம் வாழ்க!
மாதமூன்றுமழை பெய்க! மனுநீதி மகிதலத்துச்
சாதனைசெய் அடியர்குழாம் தரணிமேல் வாழுகவே!!

## 29.11.1961ல் வீரகேசரி 'ஊர்க்குருவி' K.V.S. வாஸ் அவர்கள் எழுதிய செய்தி

### 'ஊர்க்குருவி'

எந்த ஒரு மனிதனையும் அவனுடைய வெளித்தோற்றத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு மதிப்பிடுவது மிகப்பெரிய அறிவீனம் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அது எவ்வளவு தூரம் நூற்றுக்கு நூறு உண்மையென்பதை அனுபவத்தில் கண்ட றிந்து சொல்லும் வாய்ப்பு நேற்று எனக்கு ஏற்பட்டது.

தெல்லிப்பளையைச் சேர்ந்த ஒரு சோதிடர் தற்செயலாக என்னைப் பார்க்க வந்திருந்தார். எல்லாச் சோதிடரையும்போல அவரும் சோதிட சாஸ்திரத்தை மட்டும் பயின்றவராக இருப்பார் என்று எண்ணி சில சோதிட சந்தேகங்களை அவரிடம் வினவினேன். அவர் பேசவாரம்பித்துச் சில நிமிடங்களுக்கெல்லாம் அவர் ஒரு சோதிடர் என்பதும் அவரிடம் நான் கேட்ட கேள்விகளும் அறவே மறந்துபோயின. அவருடைய இலக்கிய மேதாவிலாசம் என்னை மெய்மறந்து போகச் செய்துவிட்டது. கம்பனும், வள்ளுவனும், நாயன்மார்களும், ஆழ்வார்களும் இயற்றிய இலக்கியங்களையெல்லாம் அக்கு வேறு ஆணி வேறாக அலசி ஆராய்ந்து கரைத்துக் குடித்தவரைப் போல அந்த சோதிடர் செவிக்கினிமையாகப் பேசியதைக் கேட்டதும் 'இவர் எப்படி இனிமையாகப் பேசுகின்றார்?' என்றெண்ணி பிரமித்துப் போனேன். சாதாரணமாக அவரை நேரில் பார்ப்பவர்களுக்கு அந்த மனிதருக்குள் சாட்சாத் சரஸ்வதிதேவியே வாசம் செய்கின்றாள் என்பதை ஒருபோதும் உணர்ந்து கொள்ளமுடியாது.

இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், சோதிட சாஸ்திரத்துக்கே அவர் திருமுறைகளிலிருந்தும், திவ்விய பிரபந்தங்களிலிருந்தும் மேற்கோள்களை எடுத்துக் காட்டியதுதான். இலங்கையில் சைவநூல்களைப் படித்தவர்களையாவது நாம் அதிகம் பார்க்கமுடியும். வைணவ ஆழ்வார்களின் திவ்விய பிரபந்தங்களை மனப்பாடம் செய்திட்டதோடு மட்டுமின்றி அவற்றை உருக்கமாகவும், சொல்நயம், பொருள் நயத்துடன் சொல்லக் கூடியவர்களும் இருக்கிறார்களென்பதை அறிந்ததும் என்னை அறியாமலே அந்த அன்பரிடம் ஒரு பக்தி ஏற்பட்டது. நமக்குத் தெரியாமல் குடத்தினுள் வைத்த விளக்கைப் போல நம்மிடையில் பல அறிஞர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். அவர்களை நாம் அறிந்துகொள்ளாதது நம்முடைய குறையே தவிர அவர்களுடைய குறையல்ல. இத்தைய அறிஞர்களுக்கும் நான் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகின்றேன். இறைவன் ஒருவருக்கு விசேஷ ஞானத்தைக் கொடுப்பது அதைக்கொண்டு மற்றவர்களும் பயனடையவேண்டும் என்பதற்காக. பிறருக்குப் பயன்படாமல் ஞானத்தை ஒருவன் தனக்குள்ளேயே வளர்ப்பது ஆண்டவனுக்கு நிச்சயம் திருப்தி அளிக்க மாட்டாது. இத்தகைய பெரியோர்கள் பத்திரிகை வாயிலாகவும், நூல்கள் வாயிலாகவும் தங்களுடைய விசேஷ அறிவு உலகத்துக்கும் பயன்படுமாறு செய்யவேண்டும். இதை என்னைச் சந்திக்க வந்த அன்பரிடம் சொல்லி 'கேசரிக்கு அடிக்கடி எழுதி மக்கள் பயனடையச் செய்யவேண்டும்' என்று கேட்டுக் கொண்டேன். அவரும் சம்மதிக் கிறார். கூடிய சீக்கிரம் அவரது தத்துவார்த்த இலக்கியக் கட்டுரைகளை கேசரியில் வாசகநேயர்கள் படிக்க ஒரு வாய்ப்பு ஏற்படும்.

## ராமநாம அருள் பலித்தது!

*(சாவகச்சேரி நிருபர்) (வீரகேசரி)*

உசன் பகுதியில் மழையின்மையினால் அவதி கொண்ட கமக்காரர்கள் அங்கு ஸ்ரீராமாயண கதாப்பிரசங்கம் செய்த ஸ்ரீ மயில்வாகன சோதிடரிடம் ராமநாம சங்கீர்த்தனம் செய்தும் மழைபெய்யவில்லையே என்று கேட்டார்கள். இரண்டுநாட்களுக்குள் ஸ்ரீராமநாமம் நிச்சயம் மழையைக் கொண்டுவருமென்று அந்தச் சோதிடர் பதிலளித்தபடி இரண்டாவது நாள் மழைபெய்தது எல்லாரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியது.

ஓம் ஸ்ரீராமஜெயம்

# வைகுந்தமெய்திய சுவாமி வே.த.மயில்வாகனம் ஆயர்பாடி ஆழ்வார் பற்றிய நினைவலைகள்.....

– ***வெங்கையா சுந்தரலிங்கம்*** – B.A. SLTES II

பிரதி அதிபர் தொழில்நுட்பக் கல்லூரி, திருகோணமலை.

1962ம் ஆண்டு எமது ஊரான மாவிட்டபுரத்தில் ஸ்ரீகாளியம்பாள் ஆலயத்தில் 10 நாட்கள் இராமாயணப் பிரசங்கத்தின்போது ஆழ்வாரின் தரிசனம் எனக்கு முதன்முறையாகக் கிடைத்தது. அவரது கொலுவான தோற்றத்துடன் கையிலே சிப்பிளக்கட்டை ஏந்தி, கனிவான குரலில் ஆற்றிய பிரசங்கள் இன்றுகூட எனக்கு மிக ஞாபகமாக இருக்கின்றது. உட்பொருளை அபிநயத்துடன் தெளிவான மொழிநடையில சிறுவர் முதல் பெரியோர் வரை நன்கு விளங்கிக்கொள்ளும் வகையில் மிகவும் சிறப்பாக எடுத்துரைப்பார். ''மங்களம் ..........'' என்று இந்த மங்களப் பாடல்பாடுகின்றபோது எனக்கு இப்பொழுதுகூட அவரின் அந்தக்காட்சி முன்னுக்கு இருப்பதுபோன்று தெரிகின்றது. நான் சிறுவனாக இருக்கும்போது இப்பாடலை அடிக்கடி பாடுவதும் உண்டு.

ஆழ்வார் அவர்கள் சைவசமயத்தில் பிறந்தாலும் வைணவசமயத்தின் முழுமுதற் கடவுளான விஷ்ணுவையே தனது குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டுப் பல வெற்றிகளை எய்தியுள்ளார். பொன்னாலை வரதராஜப்பெருமாள், வல்லிபுர ஆழ்வார், யாழ் விஷ்ணு ஆலயம், தெஹிவளையில் வெங்கடேசர், இந்தியாவில் உள்ள ஸ்ரீரங்கம், திருப்பதி போன்ற ஆலங்களை வணங்கி வந்ததுடன் அங்கு ராமபிரானைப்பற்றி பிரசங்கம் செய்யத் தவறியதும் இல்லை. பத்துப்பேராக இருந்தாலும் சரி, பத்தாயிரம் பேராக இருந்தாலும் சரி, பகவானின் அற்புதங்களை இடைவிடாது எதுவித சலிப்பும் இன்றி மணித்தியாலக்கணக்கில் உரையாற்றும் வன்மை அவர் ஒருவருக்கே உண்டு. பகவத்கீதையின் உட்கருத்துக்களை மிகவும் எளியமுறையில் மக்கள் வாழ்க்கையுடன் ஒத்துப்போகக்கூடிய தன்மையில் இணைவுபடுத்தி மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் பல உதாரணங்களுடன் மிகவும் ஆழமாகவும், அழகாகவும் விளங்கவைப்பார்.

ஆழ்வார் அவர்கள் தனது பரமஎதிரியாக இருந்தாலும் சரி, படித்தவன், படியாதவன் அல்லது பெரிய பதவி வகிப்பவனாக இருந்தாலும் சரி தனது முன்னிலையில் சமமாகவே மதித்துவந்தார். யாராவது அவரிடத்தில் தமது கஷ்டம் துன்பங்களை எடுத்துரைத்து ஆறுதல் கேட்கப் போகும்போது அவர்களின் மனப்பாரங்களைக் குறைத்து தமது அருள் வார்த்தைகளினால் அரவணைத்து மிகவும் பூரிப்பானநிலையில் வழியனுப்பிவைப்பார்.

ஆழ்வார் அவர்கள் தானம் வழங்குவதில் தலைசிறந்தவர். விஷ்ணு ஆலயங்களில் விசேஷ தினங்களின்போது அன்னதானம் வழங்குவதில் முன்னிற்பார். எத்தனையோ ஏழைகள் இவரது அன்னதானத்தின்போது உளம்குளிர உணவு உட்கொண்டதை நான் அறிவேன். பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோவில், வல்லிபுர ஆழ்வார் கோவில், தனது சொந்த வளவில் அமைத்த ஆச்சிரமம் போன்றவற்றில் இவ்வன்னதான வைபவங்களைக் காணக் கூடியதாக இருந்தது. தனது வீட்டுக்கு வருகின்றவர்கள் யாராயிருப்பினும் அவர்களுக்கு

அறிவுரை வழங்குவது மட்டுமல்ல உணவும் பரிமாறி மிகக் குளிர்மையாக மெய்சிலிர்க்கும் வகையில் அவர்களை வழியனுப்புவார்.

இலங்கையில் யாழ்ப்பாணம் மாத்திரமின்றி கொழும்பு, வவுனியா, மாத்தளை இறுதியாக திருகோணமலை போன்ற இடங்களுக்கு தனது தள்ளாடும் வயதில் கூட கிருஷ்ண பகவானின் அற்புதங்களை மக்களுக்கு எடுத்துக்கூறும் பொருட்டும் பல யாகங்களைச் செய்யும் பொருட்டும் ம்ககளின் அவலங்கள், துன்பங்கள் போன்றவற்றை அழித்து ஆன்மீகம் ஈடேறும் பொருட்டு பகவத் கீதையிலுள்ள அரிய கருத்துக்களை வெளிக்கொணர்ந்து இந்த லௌகீக வாழ்க்கையில் இருந்து ஈடேறும் பொருட்டு தன்னை அர்ப்பணித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாங்கள் அறியாமை காரணமாக ஆலயங்கள்தோறும் ஆண்டவனைத் தேடியோடும்-போது சுவாமி அவர்கள் கூறுவார் ''நீங்கள் ஏன் பேய், பிசாசு போல அலைகிறீர்கள் இறைவன் உங்கள் உள்ளத்தில்தான் குடியிருக்கின்றார். உங்கள் உள்ளத்தில் உள்ள இறைவனைவிட்டு அங்குள்ள கருங்கற்களையா கும்பிடப் போகிறீர்கள்? ஏன் இறைவன் இங்கு இல்லையா?" என்று மறைமுகமாக உள்ளத்தில்தான் கடவுள் எனப் பலதடவை உணர்த்தியுள்ளார். அவரிடம் ஆசீர்வாதம் பெற்றுச் சென்ற எந்த விடயமும் உண்மையிலேயே தோல்வியடைந்தது கிடையாது. எண்பது வயதிற்கு மேலுள்ள பெரியவர்கள் யாவரும் கடவுளுக்குச் சமமானவர்கள் என்பதை அடிக்கடி உணர்த்துவதுடன் அவர்களை வணங்கித் துதிக்கவேண்டும் என்று தன்னிடம் செல்பவர்களுக்கு அடிக்கடி உணர்த்துவார்.

தனது சொந்தப் பிள்ளைகளைப் போன்றே ஏனையோரையும் சமமாக நடத்துவார். எல்லோருக்கும் ஒரேவிதமான அறிவுரைகளை வழங்குவார். சமயப்பாகுபாடு, சாதிப்பாகுபாடு, பதவி உயர்வு தாழ்வு, ஏழை பணக்காரன் போன்ற பாகுபாடு அவரிடத்தில் அறவேயில்லை. நான் அவரிடத்தில் செல்லும்போது என்னை அழைத்துத் தன் முன்னிலையில் இருக்கவைத்து பல வகையிலான கருத்துக்களை எடுத்துரைப்பார். குடும்பத்தில் பிள்ளைகளைக் கட்டுப்படுத்தி எவ்வாறு வளர்க்கவேண்டும் என்பதனை தனது குடும்பத்தினை எடுத்துக்காட்டி எனக்கு அறிவுரைகளைக் கூறுவார். உண்மையிலேயே அவரது குடும்பம் தலைசிறந்ததோர் குடும்பமாக சீரும் சிறப்புடன் பிள்ளைகள் அத்தனைபேரும் நல்ல ஒளிமயமான வாழ்வினை அடைவதற்கு சுவாமி அவர்களின் அறிவுரையைக் கடைப்பிடித்தமையே காரணமாகும். நாமும் அவ்வாறு அவரது அறிவுரைகளை வாழ்க்கையில் பின்பற்றி வாழ்வோமேயாயின் இவ்வுலகில் எம்மை ஆட்டிப்படைக்கும் சிற்றின்பங்களிலிருந்து விடுபட்டு பேரின்பப் பெருவாழ்வுதனை எய்தலாம்.

ஆயர்பாடி ஆழ்வார் அவர்கள் இறைவனடி சேர்ந்துள்ளார். அவர்கள் வணக்கத்திற்குரிய சுவாமி ஆகிவிட்டார். தனது வாழ்க்கையில் நீண்டதூரம் சென்று இன்பதுன்பங்களை அனுபவித்து வாழ்க்கையின் உண்மையான தத்துவத்தைப் புரிந்து, அவற்றைத் தன்னை நம்பிவந்தவர்களுக்கும் புரியவைத்து தனக்கு மறுபிறவியே இல்லை என்ற வகையில் இறைவனுடன் இரண்டறக்கலந்துவிட்டார். அவரை நாம் யாவரும் வணக்கத்திற்குரிய தெய்வமாக மதித்து எமது இல்லங்களில் ஏனைய தெய்வங்களுடன் சமமாக வைத்து வணங்குவோமாக.

**வெங்கையா சுந்தரலிங்கம்** B.A. SLTES II
**பிரதி அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, திருகோணமலை.**

ஓம் ஸ்ரீராமஜெயம்

# ஆதர்ச தந்தை

***– ஆயர்பாடி சரோஜினிதேவி தியாகராஜா –***

ஆஜானுபாகுவான தோறறம், தீட்சண்யமான கண்கள், எதையும் கூர்மையாகக் கவனிக்கும் அஷ்ட அவதானம், தான் சொல்பவற்றை அடித்துச்சொல்லும் உறுதியும் ஆளுமையும் ஆனால் இவற்றினிடையே இதயத்தில் நிரம்பிவழியும் கருணையும், பாசமும். இவையே எனது தந்தையார். குடும்பத்திற்குத் தலைப்பிள்ளை என்ற முறையில் மற்றைய சகோதர சகோதரிகளைவிட அவருடன் கூடியகாலம் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

எனது பிதா சாதாரணமான ஒரு தந்தையாகவோ, குடும்பத் தலைவனாகவோ இருக்கவில்லை. கடுமையான ஒழுக்கக்கட்டுப்பாடு, சட்டதிட்டங்கள், நடையுடை பாவனைகள் அத்துடன் மற்றவர்களுடன் பழகுதல் என்பவற்றில் எமது விருப்பம், ஆசை என்பவற்றிற்கு இடமேயில்லை. நாம் என்ன செய்யவேண்டும் எப்படி செய்யவேண்டும் என்பது அவராலேயே தீர்மானிக்கப்பட்டது. அதனைக் கடைப்பிடிப்பதிலும் கண்டிப்புடன் நடந்துகொண்டார். அதேநேரம் எங்கள்மீது பாசம் சொரியவும் எங்களைப் பாதுகாக்கவும் அவர் தவறவில்லை. அவருக்கு ஆண்பிள்ளை, பெண்பிள்ளை என்ற பாகுபாடு கிடையாது. மகளும் மகனைப் போலவே சக்தி படைத்தவள். செல்வம் தருபவள் என்ற சமநோக்குக் கொண்டவராகவே இருந்தார்.

சிறுவயதிலேயே எம்மை ஆலயங்களுக்கு அழைத்துச்சென்று சுவாமி தரிசனம் செய்யவைப்பது மட்டுமல்லாது பஜனை பிரசங்கங்களைக் கேட்கவைத்து, அடியார்களுக்கு அமுதுபடைத்து சேவை செய்யும் சேவையில் எங்களை ஈடுபடுத்தினார். இல்லத்திலும் அடிக்கடி பூஜை வணக்கங்களும் ததியாராதனைகளும் இடம்பெறும். எமது கல்வியில் கண்டிப்பும் ஊக்கமும் தருபவராக இருந்து ஒவ்வொரு பிள்ளையையும் கூடியவரை கல்வியில் முன்னேற்றிவிட்டார். எங்களுக்கு நேர்முகப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை நடைபெறும் இடங்களுக்குத் தனியே விடாமல் தானும் கூடவேவந்து முடியும்வரை காத்திருந்து எம்மை இல்லம் அழைத்துச்செல்வார். பாடசாலை செல்லும்போதுகூட எங்கள் நெற்றியில் விபூதி, நாமம் இருக்கவேண்டும் என்பதில் கண்டிப்பாக இருந்தார். தனிப்பட்ட சுற்றுலாக்களுக்குச் செல்வதற்கோ, சினிமா, களியாட்டங்களுக்குச் செல்வதற்கோ எமக்கு அனுமதி இல்லை. உறவினர்களிடம் நினைத்தபடி போகவரமுடியாது. எந்தவிதமான உதவியும் அவர்களிடமிருந்து பெறமுடியாது.

இப்பழக்கங்கள் ஆரம்பகாலத்தில் எனக்கு வெறுப்பாக இருந்தது. ஆனால் கண்டிப்பு காரணமாகவும் அவர்மீது இருந்த பயம் காரணமாகவும் அதன்படி நடந்துவந்தேன். எம்முடைய வித்தியாசமான பழக்கவழக்கங்கள் காரணமாக உறவினர்கள் கொஞ்சம்கொஞ்சமாக விலகினர். மறைவில் பூசாரி குடும்பம் என்ற பெயரும் கிடைத்தது. எமது கட்டுப்பாடான வாழ்க்கையும் தொடர்ந்தது.

தந்தையார் தனக்கு என்ன கஷ்டம் வந்தாலும் அடியார் சேவை செய்துவந்தார். ஞாயிறு பூஜையும் அடியார்கள் சேவையும் செய்துவரலானார். ஆரம்பத்தில் சாதாரண கொட்டிலாகவும் மண் தரையாகவுமிருந்த ஸ்ரீ ஆயர்பாடி ஆழ்வார்கள் ஆச்சிரமம் நாளடைவில் சீமெந்தாலான கோவிலாக மாறியது. எல்லோரும் தங்கள் பிள்ளைகட்கு வீடு வாசல் பொருள் பண்டம் தேடி வைப்பார்கள். எனது பிதா கோவில் கட்டுகின்றாரே என்று அந்த நேரத்தில் நான் யோசித்ததுண்டு. மார்கழி அதிகாலை கடுங்குளிரில் எழுந்து திருப்பள்ளி எழுச்சி, திருப்பாவை படிக்கும்போது மனவருத்தப்பட்டதுண்டு. அந்த நேரங்களில் எனது பிதா இயமம், நியமம், ஆசனம் என்பவற்றை அடிக்கடி கூறுவார்.

**இயமம் :-** நல்லவற்றைத் தெரிவு செய்வது.

**நியமம் :-** நல்லவற்றைச் செய்யும்போது அதனை ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குத் தவறாமல் செய்வது அதாவது ஜெபம் செய்வது என்றால் ஒவ்வொரு நாளும் அதே நேரத்திற்குச் செய்தல். இது சிரத்தை எனப்படும்.

**ஆசனம :-** மேற்கூறிய இரண்டையும் செய்தால் அதற்கு தகுந்த ஆசனம் (பதவி) தவறாமல் கிடைக்கும் என்பார்.

அவர் பாடிய திருப்பாசுரங்கள், திருவாய்மொழிகள், ராம, கிருஷ்ணலீலைகள் எமது விருப்பத்தைக் கேட்காமலே காதுவழியே உட்புகுந்து எமதுள்ளத்தில் உறைந்துகொண்டன.

எமது குடும்பம் வளர்ந்தது. இரண்டறக்கலந்துகொண்ட மருமக்களையும் எங்களைப்போலவே பாவித்து பாசம் நிறைந்த கண்டிப்புடன் வளர்த்துவந்தார். எந்த வயதினறென்றாலும், எந்தக் கெட்டிக்காரனென்றாலும் அவர் சொற்படியே நடக்கவேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் 1970ம் ஆண்டு நடைபெற்ற சம்பவம் ஒன்று எனக்கு ஞாபகம் வருகின்றது. ஒரு லீவு நாள். பிள்ளைகளில் ஒருவர் செய்த தவறுக்காக அம்மா உட்பட எல்லோரையும் நிற்கவைத்து கண்டித்துக்கொண்டிருக்கிறார். அந்நேரம் ஜாதகம் பார்க்க வந்த வெளியார் ஒருவரும் எம்முடன் வந்து சேர்ந்து கூட நிற்கின்றார். ஒன்றரை மணித்தியாலங்கள் 90 நிமிடம். கண்டிப்பு, ஆலோசனை, அறிவுறுத்தல் நடந்து முடிவுற்ற பின்னரே எங்களை உள்ளே போகச் சொல்லிவிட்டு, வெளியாரை நோக்கி என்ன விஷயம் என்று கேட்க, அவர் விஷயத்தைக் கூறினார். இவ்வளவு நேரமும் இங்கு நின்று இவற்றைக் கேட்டதால் உன்னுடைய கஷ்டம் தீர்ந்தது சென்று வா என்று தந்தை உத்தரவு கொடுத்தார். அவர் மறுநாள் வந்து தன் கஷ்டம் அன்றே தீர்ந்துவிட்டதாகக் கூறியபோதும் நான் எனது பிதாவின் பெருமையை உணரவில்லை.

எமது இல்லறவாழ்வில் குழந்தைகள் கருவில் உருவாகியதுமே என்ன திகதியில் என்ன பிள்ளை பிறக்கும் என்ன பெயர் வைக்கவேண்டுமென்று முன்கூட்டியே கூறிவிடுவார். இதில் பிள்ளைகளுக்கோ மருமக்களுக்கோ தலையிட உரிமையில்லை. பேரப்பிள்ளைகளை உயிரினும் மேலாகக் கொஞ்சி மகிழ்ந்து விளையாடுவார். பிள்ளைகளைப் பிரிவது என்பது

அவரால் தாங்கமுடியாத ஒன்று. தவிர்க்கமுடியாத காரணங்களால் மூன்று பிள்ளைகள் அவரை விட்டுப் பிரிந்து வெளிநாடு செல்லவேண்டியதாயிற்று.

நான் சுவிற்சலாந்து சென்று 8 வருடங்களின் பின் திரும்பிவந்து அவரைப் பார்த்தபோது மிகவும் மகிழ்ச்சியுடன் கண்ணீர் விட்டார். ஏனென்று கேட்டபோது உன்னைப் பார்த்ததில் மிகவும் மகிழ்ச்சி. ஆனால் திரும்பச் செல்லப்போகிறாய் என்பதை நினைக்கும்போது அதைவிடப் பலமடங்கு துக்கமாக இருக்கிறது. இதற்கு நீ இங்கு வராமலே இருந்திருக்கலாம் என்றார். அதைக் கேட்டு நானும் அழுதேன். உடனடியாக தனது ஞானம் என்னும் வாளால் துக்கத்தை அறுத்து நான் திரும்பிச்செல்லும் அன்று ஸ்ரீ ஸீதாராம பட்டாபிஷேக படலத்தை எனக்குத் தந்து என்னைப் படிக்கச் சொல்லிக் கேட்டு ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். பூர்த்தியாகி மங்களம் படித்தபோது 14 வருடம் கானகவாசம் செய்து அயோத்தி மாநகர் சென்று அரசோச்சிய ஸ்ரீ சீதாராமச்சந்திரமூர்த்தி போல நானும் வைகுந்தம் திரும்பப் போகிறேன். அடுத்தமுறை என்னை நீ பார்க்கமாட்டாய் என்று சொல்லாமல் சொல்லியது என் சிறுமூளைக்கு எட்டவில்லை.

ஆனால் அவருடைய வைகுந்தப் பிராப்திக்கு வந்து அவருக்குப் பொன்னாடை போர்த்தி பட்டாபிஷேகம் செய்து அவரை ஸ்ரீ சீதாராமச்சந்திரமூர்த்தியின் திருவடியில் சமர்ப்பித்ததில் ஒரு சிறு ஆறுதல் எனக்கு உண்டு.

வேலி இட்டு, வாய்க்கால் கட்டி, விதை நாட்டி, நீர் பாய்ச்சி, களைபிடுங்கி, பயிர்விளைத்த எனது பிதா எமது குடும்பத்தில் தற்போது இல்லை. ஆனால் அவர் வளர்த்த பயிர்கள் நன்கு செழித்து வளர்ந்து பயன்தரும் மரங்களாக கண்ணுக்குச் சாட்சியாக கண்முன்னே நிற்கின்றன. லௌகீக, ஆன்மீக வழிகள் இரண்டிலும் ஆயர்பாடி குடும்பம் தலைநிமிர்ந்து நிற்கின்றது என்றால் அப்பெருமை என் பிதாவையே சாரும். இலங்கையில் மட்டுமின்றி வெளியூர்களிலும் எனது பிதாவின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அடியவர்கள் அன்பு காட்டுவது அவரின் மகிமை. ஏங்களுக்குச் சிறுவயதில் அவர் கூறிய அதே கருத்துக்களை சர்வதேச புகழ்பெற்ற ஸ்தாபனத்தில் உள்ள கலாசாலைப் படிப்பும், கடினமான பரீட்சையின் பின் உயர்பட்டங்களும் பெற்ற அறிஞர்கள் கூறும்போது அவரை நினைந்து நான் வியக்கிறேன்.

நான் இங்கு வந்ததும், வரும் அன்பர்கள் கூறும் வார்த்தைகளிலிருந்து அவருடைய கருணையும், பாசமும், மேதாவிலாசமும், பக்தியும் எவ்வண்ணம் அவர்களை ஆகர்ஷித்தது என்பதை அறிந்து புளகாங்கிதம் அடைகின்றேன். எமது பிதா எமது குடும்பத்திற்கு மட்டும் தந்தை அல்ல. யார் யார் அவரைத் தந்தையாக நினைத்திருக்கிறார்களோ அவர்களுக்கும் தந்தையாக, ஆசானாக, குருநாதனாக இருக்கிறார் என்பதை ஒப்புக்கொள்கிறேன். இத்தகைய அருமையான பிதாவை எனக்குத் தந்ததற்காக இறைவனுக்கு மீண்டும் நன்றி கூறிக்கொள்ளுகின்றேன்.

***ஆயர்பாடி சரோஜினிதேவி தியாகராஜா***

ஓம் ஸ்ரீராமஜெயம்

# என் அன்புத் தாத்தா

*– தி. யசோதா –*

தாத்தா! என் அருமைத் தாத்தா!
எங்கே சென்றீர்கள்?
எட்டு வருடங்களின் பின்னர்
உங்களைக் காண ஓடோடி வந்தபோது
பாசத்துடன் தலைதொட்டு ஆசி தந்தீர்களே!
எங்கே சென்றீர்கள் தாத்தா?

நான் பிறந்தது முதல் கிருஷ்ணலீலைகளை
என் மனதில் பதிய வைத்து
பக்தி ரசம் ஊட்டினீர்களே!
தரணியில் வாழும் வழியிதுவென
இடித்துரைத்தீர்களே தாத்தா!
உலகளந்தானின் அன்னை யசோதை என்று கூறி
எனக்கும் யசோதை என்று நாமம் சூட்டினீர்களே!
எங்கே சென்றீர்கள் தாத்தா?

சொல்லச் சொல்லத் தித்திக்குமே சுந்தரனின் நாமரசம்
எல்லையில்லா இன்பந் தந்து
எங்கும் தானாய் நின்ற ரசம்
அந்த ரசம் ராமநாம ரசம் என்று
நிதர்சனமாய் வாழ்ந்து காட்டினீர்களே
எங்கே சென்றீர்கள் தாத்தா?

'வெள்ளைச் சுரிசங்கோடாழி ஏந்தி
தாமரைக் கண்ணன் என் நெஞ்சினூடே'
என்று நித்தம் பாடுவீர்களே
அத் தாமரைக் கண்ணனின் பாதங்களை
அடைந்து விட்டீர்களா தாத்தா?
என் அன்புத் தாத்தா!

*அன்புப் பேத்தி*
*தி. யசோதா*
சுவிற்ஸலாந்து.

ஓம் ஸ்ரீராமஜெயம்

# ஐயா அடியேன் உன் அடைக்கலமே.

**— ஆயர்பாடி ராதாதேவி அன்னலிங்கம் —**

**ஐயா உங்களுக்கு!**

ஐந்தாவது பெண் குழந்தையாய் பிறந்திருக்கும் பேறு பெற்றேன். ஐந்தாவது குழந்தை பெண்ணாகப் பிறந்தால் குடும்பத்தில் செல்வம் சிறக்கும் என்று பெருமையுடன் என்னை வளர்த்தீர்கள். நீங்கள் வணங்கும் கிருஷ்ணபரமாத்மாவின் ஞாபகம் எந்நேரமும் இருக்க வேண்டும் என்று ராதாதேவி என்று பெயரிட்டு அடிக்கடி ராதை, ராதை என அன்புடன் கூப்பிட்டு மகிழ்வீர்கள். எல்லோரிலும் பார்க்க மகிழ்ச்சியுடன் இருப்பாய் என்று என்னை ஆசீர்வதித்தார்கள். அத்துடன் உங்களுடைய மேலான ஆன்மீகஉணர்வை எனக்கு ஊட்டி தெய்வசிந்தனையும், இயமநியமங்களும் கைக்கொள்ள பயிற்சி அளித்தீர்கள். இளம்பிராயம் தொடக்கம் எனது கையால் உங்களுக்கு உணவு படைக்கும் பெருமையை அளித்தீர்கள். உடல் தளர்ந்த காலத்திலும், உங்களை மருத்துவரிடம் அழைத்துச் செல்லவும், உணவு பாதுகாப்பு விஷயங்களிலும், கடமை செய்யக் கிடைத்ததுடன், ஸ்ரீமத் கம்பராமாயணம் பாராயணம் செய்யும் பேற்றையும் அளித்தீர்கள். சர்வேஸ்வரனான ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் தூதனாக ஸ்ரீமத் ஆஞ்சனேய ஸ்வாமியாகவே உங்களைக் காண்கிறேன்.

**உய்யா உடலுய்ய மருத்துமலைக்**
**கையா அனுமந்தகலா நிதியே**
**மையாற் கழனாகிய வானவனே**
**ஐயா அடியேனுன் அடைக்கலமே.**

என்றும் எந்நேரமும் நானும், எனது குடும்பமும் உங்கள் அடைக்கலம்.

***ஆயர்பாடி ராதாதேவி அன்னலிங்கம்***

*ஆன்மாவிற்கு ஓர் செயலும் இல்லை இவை*
*யாவும் உடல் தான் மருவும் தகைமை தனை*
*ஓதுவதே ஞானம் என உற்று இறைவன் கூறியதை*
*தேறுவதே தீ வினைக்குத் தீ.*

*- கீதை வெண்பா-*

ஓம் ஸ்ரீராமஜெயம்

# தசரத நால்வரும் நாமும்

**– *ஆயர்பாடி கிருஷ்ணதாசன்* –**

எனது பிதாவிற்கு ஆண்மகவுகளில் கடைசிமகனாக 1958ல் பிறந்தேன். எனது சகோதரர்களுக்கு கோபாலகிருஷ்ணண், ராமகிருஷ்ணன், ஸ்ரீகிருஷ்ணன் என்று பெயரிட்ட அவர் எனக்கு கிருஷ்ணதாசன் எனறு பெயர்வைத்தது அவர்களுக்கு என்றும் சேவை செய்யவே என்று அடிக்கடி கூறுவார். நீங்கள் நால்வரும் ராம, லட்சுமண, பரத சத்துருக்-கர்களைப்போல இருக்கவேண்டும் என்று அடிக்கடி கூறுவது அவருக்கு ராமபிரான் மேலிருந்த மாறாத பக்தியைக் காட்டுகின்றது. தொழில் நிமித்தம் நான் சுவிற்சலாந்து வந்தபோதும் என்னுடன் அடிக்கடி தொடர்புகொண்டு எனது தொழில் இல்லறவாழ்வு பற்றி விசாரித்து ஆசிகூறி வந்தார். எனக்கு குழந்தை கிடைத்ததும் ஆசிகூறி அளவற்ற மகிழ்ச்சியடைந்தார். தான் வைகுந்தம் ஏகுவதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் என்னைத் தொலைபேசியில் அழைத்து, ‘இப்பிறப்பில் என்னை நீ காணமாட்டாய், கவலைப்பட வேண்டாம். எங்கிருந்தும் உன்னை ஆசீர்வதித்துக்கொண்டே இருப்பேன்’ என்று கூறிய பாங்கு என்னை மெய்சிலிர்க்க வைத்தது. என் அண்ணன்மார்களுக்கு கூட இருந்து அவருக்குக் கடமை செய்யும் பேறு எனக்குக் கிடைக்கவில்லை என்று நினைக்கும்போது எவ்வளவு மனதிற்குக் கஷ்டமாக இருந்தாலும், அவர் வீடுபேறு பெற்று ஸ்ரீ ஸீதாராமசந்திர மூர்த்தியின் பாதாரவிந்தங்களை அடைந்தது ஆறுதலடையற்பாலது.

***ஆயர்பாடி கிருஷ்ணதாசன் (சுவிஸ்)***

ஓம் ஸ்ரீராமஜெயம்

**சிவயோக சுவாமிகள் - நற்சிந்தனைப் பாடல் - பக் 304**

## ஓம் நமோ நாராயணா

*பல்லவி*

**ஓம் நமோ நாராயணா**
**உத்தமனே ஸ்ரீராமா**

*அநுபல்லவி*

**நாம் வேறோ நீ வேறா**
**நல்ல வாக்குத் தாராயோ** ஓம்

*சரணம்*

**ஏங்குவதே நாமையா எழில்சேரும் ராமையா**
**தாங்குவா யினிராமச் சந்திரனே தருணமிது** ஓம்

**அசோதை குலபாலனே யசுரர் குல காலனே**
**தசாவ தாரனே தமியேனுக் காதரவே** ஓம்

**எந்தவேளை யுமுன்னை ஏத்தி நீதானேயென்று**
**சிந்திக்கவரம் தாராய் சீமானே ஸ்ரீராமா** ஓம்

ஓம் ஸ்ரீராமஜெயம்

# அரங்கன் அடியான்

*– ஆயர்பாடி ருக்குமணிதேவி –*

**மண்ணை இருந்து துழாவி வாமனன் மண்ணிது வென்னும்**
**விண்ணை தொழுது அவன் மேவும் வைகுந்தம் என்று கைகாட்டும்**
**கண்ணையும் நீர் மல்க நின்று கடல்வண்ணன் என்னும் அன்னே - என்**
**பெண்ணை பெருமையல் செய்தார்க்கு என் செய்வேன் பெய்வளையீரே.**

மேற்கண்ட நம்மாழ்வார் பாசுரப் பதிகத்தை ஐயா அவர்கள் நான் கருவில் இருந்த போதும் பிறந்த சமயமும் அடிக்கடி பாராயணம் செய்வார் என அம்மா அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். எனது அம்மா எனது பிரசவத்திற்காக இணுவில் வைத்திய சாலையில் இருந்தசமயம், அம்மாவுக்கும், குழந்தையாகிய எனக்கும், ஐயாவுக்கும் உயிர் ஆபத்தைத் தரக்கூடிய கஷ்டம் வந்ததாகவும் அதனை பகவான் அருளால் நீக்கினார் என்றும் அம்மா கூறக் கேட்டிருக்கிறேன். ஐயாவும் நானும் ஒரே ராசி என்று என்னுடன் மிகவும் அன்பாக இருந்தார்.

'உனக்கு எது வேண்டுமானாலும் அதனை கருணாமூர்த்தியான கடவுளிடம் கேட்டுப் பெறு ஆனால் பிறரிடம் கேட்காதே' என்று அடிக்கடி கூறுவார். நான் 5 வயது குழந்தையாக இருந்தபோது ஒரு தடவை ஐயா தனக்கு தற்சமயம் சிறிது பணம் தேவைப்படுவதாக கூறிக்கொண்டிருக்க அதைக் கேட்ட நான், 'ஐயா நீங்கள் சொல்லித்தந்தபடி கடவுளிடம் கேட்டு வேண்டித் தருகிறேன்' என்று சொல்லிவிட்டு, பூஜை அறைக்கு ஓடிச்சென்று கடவுளிடம் கேட்டுவிட்டு, மீண்டும் ஓடிவரும் வழியில் எனது அண்ணன் அடித்துவிட அழுதுகொண்டு அவரிடம் வந்து ஐயா கடவுளிடம் உங்களுக்குக் காசு கொடுக்கும்படி கேட்டுவிட்டேன் ஆகவே, காசு கிடைக்கும் என்று சொல்லி வாய்மூட முன்னர், யாரோ ஒருவர் எம்முன் வந்து ரூபா இரண்டாயிரம் நாம் எதிர்பாராத வகையில் கொடுத்ததை இன்றும் மறக்கமுடியாது என்று அம்மா கூறுவார். அவரது இறை விசுவாசத்தை இன்றும் எண்ணி வியக்கிறேன்.

சென்றமாதம் நானும் எனது குடும்பமும் தென்னிந்திய திருத்தல யாத்திரை செய்யப் புறப்பட்ட போது பார்க்கவேண்டிய இடங்களை குறித்துத் தந்து என்ன முறையில் வணங்கவேண்டும் என்று கூறி, ஆசீர்வதித்து அனுப்பிவைத்தார். 20.08.98ல் அவர் மாறாத பக்தியுடன் வணங்கும் அரங்கன் திருமுற்றத்தில் நின்று,

**அணியார் பொழில் சூழ் அரங்க நகரப்பா**
**துணையேன் இனி நின் அருளெல்ல தெனக்கு**
**மணியே மணிமாணிக்கமே மதுசூதா**
**பணியா யெனக்கும் வகை பரஞ்சோதீ.**

என்று பாடும்போது எமக்கு முன் உள்ள அரங்கனின் திருமுகமும் ஐயாவின் திருமுகமும் மாறிமாறி வந்துகொண்டேயிருந்தது. அதன் அர்த்தம் அன்று எனக்குப் புரியவில்லை.

அவர் காட்டித்தந்த ஆத்மீக வழியைப் பின்பற்றி ஸ்ரீராமபிரானதும் ஸ்ரீ ஆழ்வார்களினதும் பாசுரங்களைப் பாடி தூய்மையான அறநெறி வாழ்ந்து அன்னாரை மேலும் மகிழ்விப்போமாக!

***ஆயர்பாடி ருக்குமணிதேவி.ந***

ஓம் ஸ்ரீராமஜெயம்

# ஸ்ரீ ஆண்டாள் அடிமை

## – ஆயர்பாடி ஸ்ரீஆண்டாள் –

எனது தந்தையார் 1963ம் ஆண்டு தென் இந்திய யாத்திரை செய்தபோது ஸ்ரீரங்கன் ஆலயத்தில் சந்திரபுஷ்கரணியில் தீர்த்தமாடி எழுந்ததும் முன்னால் உள்ள ஸ்ரீ ஆண்டாள் சந்நிதியைச் சேவித்ததாகவும், அடுத்தவருடம் நான் பிறந்தபோது அதன் நினைவாக எனக்கு ஸ்ரீஆண்டாள் எனப் பெயர் வைத்ததாகவும் அடிக்கடி கூறுவார். 'ஆண்டாள்' 'ஆண்டாள்' என்று என்னை அவர் கூப்பிடும்போதெல்லாம் அந்நிகழ்ச்சியே அவருக்கு ஞாபகம் வரும் போலும். தந்தையார் மாறாத பக்தி செய்துவந்த பன்னிரு ஆழ்வார்களுள்ளும் பெண் ஆழ்வாரான ஸ்ரீ ஆண்டாள் பெயரை ஒரு பிள்ளைக்குச் சூட்டியது ஆழ்வார்கள்மேல் அவருக்கிருந்த பக்தியை எடுத்துக்காட்டுகின்றது.

கடைக்குட்டியானபடியால் மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டேன். ஆனால் இயம, நியமங்களில் எதுவித சலுகையும் கிடையாது. கல்விவாழ்க்கை, சர்வகலாசாலைப் படிப்புடன் பூர்த்தியானது. தாய்நாட்டிலே தொழில் கிடைத்தும், அதைவிட்டு திருமணபந்தம் காரணமாக கனடா செல்லவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதன்பின்னர் நேரடியாக அவருடன் பழகும் சந்தர்ப்பம் கிட்டாவிட்டாலும், கடிதமூலமும், தொலைபேசி மூலமும் தொடர்பு கொள்வோம். என் குழந்தைகள் கருவில் உருவானதும். முன்கூட்டியே என்ன குழந்தை என்றும், எப்போது பிறக்கும் என்றும் என்ன பெயர் வைக்கவேண்டும் எனவும் கூறிவிடுவார். எனது பிள்ளைகள் கருவிலிருக்கும்போதே ஸ்ரீரங்கனி, ஸ்ரீரங்கன் எனபன அவர் இட்ட பெயர்களாகும். இதன்மூலம் என்னை என்றுமே அரங்கனையும், தன்னையும் மறக்கமுடியாதவாறு செய்துவிட்டார். நான் கருவுற்ற காலத்தில் நோயால் அவஸ்தைப்பட்டபோது அதனைக் கேள்விப்பட்டதும் ஜெபம்செய்து அந்நோயை உடனடியாகக் குணப்படுத்தியதும், வைத்தியசாலை டாக்டர்களே இஃதென்ன கடும் வருத்தம் சடுதியில் குணமாகிய அதிசயம் என்று வியந்ததும் நான் என்றென்றும் மறக்கமுடியாதது. என் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அவரை நினைத்து உருகவேண்டியதாகவே இருக்கின்றேன். அவருக்கு செய்யக்கூடிய ஒரே கைமாறு அவர் காட்டிய ஆன்மீக வழி ஒழுகி, நான் இருக்கும் இடத்தில் எனது தந்தையாரின் பணிகளைச் செய்வதே என இந்நூலில் திடசங்கல்ப்பம் செய்கின்றேன்.

**ஆயர்பாடி ஸ்ரீஆண்டாள்.பா**
**கனடா.**

*அருமறை முதல்வனை ஆழிமாயனை*
*கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனை*
*திருமகள் தலைவனை தேவ தேவனை*
*இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.*

– *வில்லிபாரதக் கடவுள் வாழ்த்து*

ஓம் ஸ்ரீ ராமஜெயம்

# மறைந்த மேதை என் பெரியதந்தை

அன்னார்,
ஆயர்பாடியென நாமம் பூண்டார்
அறவழிநின் றெமையெலாம் ஆதரித்தார்
கறையினை அகற்றவே, கலியினைத் துரத்தவே
உலகினைத் துறக்காது உயர்வினை அடையவே
வழி வகுத்தார்.

நூறினை எய்துவார் நூலினைப் பெய்குவார்
நுட்பமெலாம் சொல்லுவார்
என்றெலாம் எண்ணினோம்

ஒன்பது பத்திலே
உயர்வெலாம் பெற்று
மன்பதை வாழ வழியெலாம் வகுத்தெமை
துன்பத்தை அறுக்கவே துணைசெய்தார்.

ஜெபமெலாம் ராம நாமம்
நினைவெலாம் ராம காதை
உளமெலாம் உயர்வுச் சிந்தை
உயிர்மூச்செலாம் அவனே என்றும்.

இத்தனை வாழ்வுக் கோலம்
இணையற வாழ்ந்து காட்டி
இயம்புக இறைவன் நாமம்
என்றெமை வாழ வைத்தார்.

உற்றோரும் மற்றோரும் உளம் வெதும்ப
உயர்பண்பு உலகநீதி அத்தனையும் தான்காத்து
அனைவரையும் அதைப்போல ஒழுகச்சொல்லி
சென்றாரே என்தந்தை சீர்கொண்ட மாமேதை.

அவர் வாழ்ந்த நெடுங்காலம்
எமை வாழ வைத்தார்
உவர் உப்பு இலாத உயர் மண்ணில்
எமையெலாம் ஊற வைத்தார்
கறைகொண்ட நெஞ்சமெலாம் களைந்து
கமலேசன் எண்ணத்தில் கனிந்து நின்றார்
காலனின் வருகைக்கு காத்திருந்த மாமேதை
ஓலம் வேண்டாம் என்று உயிர்பிரிந்தார் அன்றொருநாள்
அன்னாரின் வாழ் ஓர் அணைக்கட்டு
ஆத்மபலம் அறிவுச்சோலை

"நல்லோர் ஒருவர் மடிந்தால் நாம் அவரை
சொல்லாலும் சிந்தையாலும் தொழுதெழுவோம்"

அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லோரும் பிரார்த்திப்போமாக.

– *கனகரத்தினம் தவபாலன்* – (சிற்றமகன்)

# UNDERSTANDING OF A FRIEND

**- S. M. M. Mohideen -**
Rtrd. Station Suptd., CGR

The demise of my respected friend, philosopher and guide Ayarpadi V. T. Mylvaganam has not only taken away from our midst a rare personality but also a mystic who constituted the musical hand of God and contributed his note in such a symphony in such a way that the 'WHOLE' becomes a harmony and a symphony wonderful. The residents of Alponso Avenue, Dehiwela came under his unique influence when he took residence here from 1993. He shifted his Ashramam from Tellipalai to Alponso Avenue, Dehiwela and it was a great opportunity for all of us to understand his and his spirituality.

He made us to understand that a cultured soul is felt when met and in that person is found sweetness and truth. He exposed to all of us his unique experience in life. He showed us the way to be 'IN AND OUT'. One could live in the turmoil of a family life and still be 'OUT' with ALMIGHTY GOD.

I remember very well his of repeated saying that, 'SUGAR WHEN WRITE ON THE PARCHMENT IS NOT SWEET, BUT WHEN TASTED IS IT SWEET.' He used to tell us that his mystical experience consists in the penetration of consciousness of awareness into the region of super consciousness of cosmic awareness and brings with a sense of expansion.

All of us are thankful to Almighty God for having permitted our respected friend to live up to a ripe old age 90 years, thus imparting us the great opportunity to associate with him. He was an institution rarely found these days in our midst. His friends and others who understood him should be in a position to make him live in the hearts of good men and women.

Almighty God in his wisdom has taken away from us a good soul, whose rich experience in this worldly life and in his pursuits in the religious field are absolutely necessary to all us today.

**He took away from us the misery of our minds.**
**He showed us by his practice that God loves a man who smiles always.**
**He expressed in unmistaken terms that enmity develops enmity.**
**His life was a beacon light to all of us to cast away all immoral thoughts from our minds.**
**He showed us how to live a family life in this world and still how to be on the correct path to reach God.**
**Let Almighty grant him MODCHAM.**

S. M. M. Mohideen
Aponso Avenue, Dehiwela.

## திவ்விய பாகவத பக்த திலகம் ஆழ்வார்
## ஸ்ரீ.வே.த.மயில்வாகனம் சுவாமிகளின்
# கதாப்பிரசங்க நிகழ்ச்சி அட்டவணைச் சுருக்கம்

குறிப்பு : ஐயா அவர்களின் கோவையாய்க் காணப்படும் துண்டுப்பிரசுரங்களின் தொகுப்பு மட்டுமே இதுவாகும். இதற்கு மேலும் பல நிகழ்ச்சிகளை செய்ததாகவும் அறிய வருகிறது. அவை பற்றிய விபரங்கள் கிடைக்கவில்லை.

**1961** – 16.04.61 --- 30.04.61 வரை 15 நாட்கள் மாவிட்டபுரம் மடத்தடி, ஸ்ரீகாளியம்பாள் சந்நிதிதானத்தில்

**'ஸ்ரீமத் கம்பராமாயண கதாப்பிரசங்கம்'**

**1962** – 05.02.62 மாவிட்டபுரம் மடத்தடி, ஸ்ரீகாளியம்பாள் சந்நிதிதானத்தில்

**'ஸ்ரீமந் நாராயண அவதார பெருமைகள்'**

– 12.12.62 --- 21.12.62 வரை 10 நாட்கள் இணுவில் சிவகாமியம்மன் ஆலயத்தில்

**'திரு அவதாரம் தொடக்கம் ஸ்ரீ பட்டாபிஷேகம் வரைக்குமான ஸ்ரீராமாயண கதாப்பிரசங்கம்'**

**1964** – 10.05.64 --- 21.05.64 வரை 10 நாட்கள் முரசுமோட்டை ஸ்ரீசுப்பிரமணியசுவாமி கோயிலில்

**'திரு அவதாரம் தொடக்கம் ஸ்ரீ பட்டாபிஷேகம் வரைக்குமான ஸ்ரீராமாயண கதாகாலட்சேபம்**

**1967** – 18.08.67 புதுவிளாங்குளம் அரசடி, சித்திவிநாயகர் சிவன்கோவில்

**'சிறுத்தொண்ட நாயனார் சரித்திரம்'**

**1968** – 09.08.68 வவுனியா பேயாடிகூழாங்குளம் ஸ்ரீ நாகபூசணி அம்மாள் கோயில்

**'திரௌபதை சபதம்'**

– 27.06.68 யாழ் கோட்டை, ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தானம்

**'சிவனும் சீவனும்'**

– 09.09.68 --- 18.09.68 வரை 10 நாட்கள் கொடிகாமம் உசன் கந்தசாமி கோவிலில்

**'திரு அவதாரம் தொடக்கம் ஸ்ரீ பட்டாபிஷேகம் வரைக்குமான ஸ்ரீராமாயண கதாகாலட்சேபம்**

1969 – 24.01.69 --- 26.01.69 வரை 03 நாட்கள் கொடிகாமம் உசன் கந்தசாமி கோவிலில்

* 'ஸ்ரீ பார்வதி தவநிலையும், திருக்கல்யாணமும்'
* 'அடியார் வேண்டுதலும் ஸ்ரீ முருகன் திருஅவதாரமும்'
* 'அரிதிருமுருகன் அருள்தரும் முருகன் கல்யாண வைபவங்களும் மகிமைகளும்'

– 27.04.69 முளாய் சித்திவிநாயகர் ஆலயத்தில்

'அருள்தரும் விநாயகர் திருவருள் மகிமை'

– 25.05.69 உசன் கந்தசாமி கோவிலில்

'திருக்கைலாசமும் இராவணேஸ்வரன் தவவலிமையும்'

– 24.05.69 சுழிபுரம் பறாளாய் முருகமூர்த்தி கோவிலில்

'வள்ளி திருமண திருவிளையாடல்'

– 02.07.69 -- 11.07.69 வரை 10 நாட்கள் வெள்ளவத்தை சைவமங்கையர் கழகத்தில்

'திருவவதாரம் தொடக்கம் ஸ்ரீசீதாராம சர்வயோக பட்டாபிஷேகம் வரை'

– 26.08.69 புது விளாங்குளம் சிவன்கோவில்

'நந்தனார் சரித்திரம்'

– 29.10.69 -- 07.11.69 வரை 10 நாட்கள் இல. *01, 57*வது ஒழுங்கையில்

'பன்னிரு ஆழ்வார் திருப்பூசை செய்து வழிபடல்'

– 24.11.69 -- 05.12.69 வரை 12 நாட்கள் வெள்ளவத்தை சைவமங்கையர் கழக சிவானந்த நிலையத்தில்

'ஸ்ரீமத் பாகவத உபந்நியாசம்'

1973 – 03.07.73 மற்றும் 04.03.1973 யாழ் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தானத்தில்

* 'மார்க்கண்டேயர் தபசுநிலை'
* 'எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்'

– 28.12.73 வண்ணார்பண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்

'கணபதி கடாட்சம்'

1974 – 04.01.74 வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில்

'ஓங்கி உலகளந்த உத்தமன்'

– 25.02.74 -- 06.03.1974, 10 நாட்கள் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயம்

'ஸ்ரீ ராமாயணம்'

– 25.12.74 கீரிமலை ஸ்ரீமந் நாராயண சுவாமி தேவஸ்தானம்

'கிருஷ்ண பரமாத்மாவின் திருஅவதாரம்'

– 25.12.74 வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

'ஸ்ரீ ஆழ்வார்கள் அருளிய திருப்பாசுர ராமாயண மகிமைகள்'

**1975** – 15.05.75 ---24.05.75, 10 நாட்கள் இயக்கச்சி ஸ்ரீ வெங்கடேச வரதராஜபெருமாள் ஆலயம்

'திரு அவதாரம் தொடக்கம் ஸ்ரீ பட்டாபிஷேகம் வரைக்குமான ஸ்ரீராமாயண கதாகாலட்சபம்'

**1978** – 06.04.78 --- 16.04.78 வரை 11 நாட்கள் மாவிட்டபுரம் மடத்தடி, ஸ்ரீகாளியம்பாள் தேவஸ்தானத்தில்

'திரு அவதாரம் தொடக்கம் ஸ்ரீ பட்டாபிஷேகம் வரைக்குமான ஸ்ரீராமாயண கதாகாலேட்சேபம்'

**1980** – 20.02.80 --- 01.03.80 வரை 11 நாட்கள் ஓமந்தை ஸ்ரீ வீரகத்தி பிள்ளையார் ஆலயத்தில்

'திரு அவதாரம் தொடக்கம் ஸ்ரீ பட்டாபிஷேகம் வரைக்குமான ஸ்ரீராமாயண கதாகாலேட்சேபம்'

**1984** – 17.02.84 மாவிட்டபுரம் ஆயர்பாடி ஸ்ரீ ஆழ்வார்கள் ஆச்சிரமத் திறப்புவிழா

**1987** – 23.09.87 --- 02.10.87 வரை 10 நாட்கள் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீவல்லிபுரநாதன் தேவஸ்தானம்

'திரு அவதாரம் தொடக்கம் ஸ்ரீ பட்டாபிஷேகம் வரைக்குமான ஸ்ரீராமாயண கதாகாலட்சேபம்'

**1992** – 21.06.92 --- 01.08.92 வரை 40 நாட்கள் கொட்டாஞ்சேனை ஹரேகிருஷ்ணா ஆலயம்

'திரு அவதாரம் தொடக்கம் ஸ்ரீ பட்டாபிஷேகம் வரைக்குமான ஸ்ரீராமாயண கதாகாலட்சேபம்'

**1993** – 15.06.93 --- 03.07.93 வரை 19 நாட்கள் தெஹிவளை, நெடுமால் ஸ்ரீ மகாவிஷ்ணு தேவஸ்தானம்

'திரு அவதாரம் தொடக்கம் ஸ்ரீ பட்டாபிஷேகம் வரைக்குமான ஸ்ரீராமாயண கதாகாலட்சேபம்'

**1994** – 20.04.94 *நாரகென்பிட்டி, தொடர்மாடி நலன்புரி சங்க மண்டபம்*

**'ஸ்ரீராம திரு அவதாரம்'**

**1995** – 29.03.95 --- 09.04.95 *வரை 10 நாட்கள் வவுனியா உக்கிழாங்குளம் அருள்மிகு சித்திவிநாயகப் பெருமான் ஆலயம்*

**'திரு அவதாரம் தொடக்கம் ஸ்ரீ பட்டாபிஷேகம் வரைக்குமான ஸ்ரீராமாயண கதாகாலட்சேபம்'**

**1996** – 19.03.96 --- 28.03.96 *வரை 10 நாட்கள் மாத்தளை ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானம்*

**'திரு அவதாரம் தொடக்கம் ஸ்ரீ பட்டாபிஷேகம் வரைக்குமான ஸ்ரீராமாயண கதாகாலட்சேபம்'**

**1997** – 13.04.97 --- 16.04.97 *வரை 10 நாட்கள் திருகோணமலை திருவள்ளுவர் மண்டபம்*

**'திரு அவதாரம் தொடக்கம் ஸ்ரீ பட்டாபிஷேகம் வரைக்குமான ஸ்ரீராமாயண கதாகாலட்சேபம்'**

– 17.08.97 --- 25.08.97 *வரை 09 நாட்கள் திருகோணமலை திருவள்ளுவர் மண்டபம்*

- ✳ **'ஸ்ரீமத் பாகவதம்'**
- ✳ **'ஸ்ரீமத் பகவத்கீதை'**
- ✳ **'ஸ்ரீஆழ்வார்களின் திருவாய்மொழி'**
- ✳ **'கிருஷ்ணா அவதாரம்'**

**1998** – 26.04.98 *தெஹிவளை, நெடுமால் ஸ்ரீ மகாவிஷ்ணு தேவஸ்தானம்*

- ✳ **'ஸ்ரீராம அவதாரம் உபந்நியாசம்'**
- ✳ **ஸ்ரீ மஹாவிஷ்ணுவிற்கு திரு அபிஷேகம்**
- ✳ **அடியார்களுக்குத் திருஅன்னம்**

– 20.08.98 --- 24.08.98 *வரை 05 நாட்கள் வெள்ளவத்தை டெல்மன் வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவு*


**'வைகுந்தம் ஏகும்' தவநிஷ்டை அடியார்கள் வெளியிலிருந்து இரவுபகல் ஸ்ரீராமநாம ஜெபம்.**

– 25.08.98 *கல்கிசை ஸ்ரீ உருத்திரன் அகம் விஷ்ணுகணங்கள் அழைத்துவர பஞ்சபூதங்களுடன் இரண்டறக் கலத்தல்.*


– 23.09.98 *அப்போன்சா அவன்யு*

**'31ம் நாள் திருப்பாசுராஞ்சலி**

**மங்களம்**



1984ல் தெல்லிப்பளை ஆயர்பாடி ஆழ்வார்கள் ஆச்சிரமத்தின் முகப்பு தோற்றம்.
அதிகாலை 6.00 மணி அடியார்கள் முன் ஆயத்த வேலைகளில்
ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.



ஆச்சிரமத்தில் ஸ்ரீராம நவமி திருநாளில் ஸ்ரீராம பட்டாபிஷேகம் செய்வித்தல்.
முடி சூட்டுபவர் அன்னாரின் மூன்றாவது புதல்வன் ஸ்ரீ கிருஷ்ணன் அவர்கள்.



மில்க்வைற் அதிபர் திரு. கனகராசா, சட்டத்தரணி திரு. பாலசுப்பிரமணியம் ஆகியோர் கற்பூராஞ்சலி பெறுகிறார்கள்.




திறப்பு விழாவிற்கு வருகைதந்த தெல்லிப்பளை துர்க்கா துரந்தரி அம்மையார் வழிபாடு செய்கிறார்கள்.



முரசுமோட்டை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஸ்ரீ ராமாயண கதாப்பிரசங்க பூர்த்தி நாளின் போது.



ஆச்சிரம திறப்புவிழா முடிவுற்றதும் ஆயர்பாடி ஆழ்வார் ஆசியுரை வழங்குகிறார்கள்.




1997 ல் அம்மாவும் ஐயாவும்.



1992 ல் கொட்டாஞ்சேனை சர்வதேச கிருஷ்ண பக்தி கழகத்தில் ராமாயண கதாப்பிரசங்கம் செய்தபோது.




1974 ல் பொன்னாலை ஸ்ரீ வரதராஜ பெருமாள் ஆலயத்தில் ஸ்ரீராமாயண கதாப்பிரசங்கம் செய்தபோது.



ஆயர்பாடி ஆழ்வார்கள் ஆச்சிரமத்தில் ஸ்ரீராம நவமி திருநாளில் ஸ்ரீராம பட்டாபிஷேகம் செய்தபின் திரு. M. K மயில்வாகனம் முதலாளி பொன்னாலை திரு. நாராயணதாசன் ஆகியோருடன்.



1995 ல் விஜயதசமியினன்று தனது பேத்தி சாருகாசினிக்கு ஏடு தொடக்கி வைத்தல்.




1997 ல் உடல்நலம் குன்றியபோதும் இறுதிமூச்சுவரை ஸ்ரீராமசேவை செய்தே தீருவேன் என்ற பிரயாசத்துடன் திருகோணமலையில் ஸ்ரீராமாயண கதாப்பிரசங்கம் செய்தல்.



1998 ல் ஏப்பிரல் இந்த உடலுடன் பங்குகொள்ளும் இறுதி ஸ்ரீராம நவமி இதுவே என கூறி இயலாத நிலையிலும் ஸ்ரீராம பட்டாபிஷேகம் செய்து அருளுரை நிகழ்த்தல்.



1992 ல் கொழும்பில் முன்னாள் அமைச்சர்கள் திரு. P. P. தேவராஜ். M. S செல்லச்சாமி. திரு. சாம்பசிவ சரவணபவ குருக்கள் ஆகியோருடன்.



1997 ல் உடல் நலம் குன்றிய நிலையில் திருகோணமலை மாவட்ட நீதிபதி அவர்களுடன்.



ஆச்சிரமத்தில் யாக பூஜையின் போது மந்திரம் ஓதுபவர் அன்னாரின் சோதிட வாரிசான திரு. த. ம. ராமகிருஷ்ணன் அவர்கள்.



ஆயர்பாடி ஸ்ரீ ஆழ்வார்கள் ஆச்சிரமம் சிறு கொட்டிலாக இருந்த போது இங்கு ஸ்ரீராம நவமியினையொட்டிய ஸ்ரீராமாயண கதாப் பிரசங்கத்தில் தன்னை மறந்து கைகளைத் தூக்கி ஸ்ரீ ராம ஜெபத்தைச் செபித்தபோது.




வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் 1968ல் ஸ்ரீராமாயண கதாப்பிரசங்கம் செய்யும் போது.



ஆச்சிரமத்தில் வலம்புரி சங்குகளுக்கு பூசை செய்தல்.



1998 ல் தெகிவளை விஷ்ணு ஆலயத்தில் ஞாயிறு தோறும் அன்னதான மடத்துக்கு அப்பால் இருந்து ஸ்ரீராமஜெபம் செய்தல்.



தெகிவளை விஷ்ணு ஆலய ஒதுக்குப்புறத்தில் அடியார்களுடன் சேர்ந்து
ஸ்ரீ ராம தியானம் செய்தல்.



தெகிவளை மகாவிஷ்ணு ஆலயத்தில் கோவில் பாலஸ்தாபனம் செய்திருந்தபோது
ஸ்ரீ ராமாயண கதாப்பிரசங்கம் செய்யும் காட்சி.



1998 ல் ஏப்பிரல் தெகிவளை விஷ்ணு கோவிலில் எனது இறுதி பிரசங்கம் இது என தான் அன்பர்களுக்கு அறிவித்து இயலாத நிலையிலும் ஸ்ரீராம திருஅவதாரம் சொல்லும் போது அருகில் நிற்பவர் மூத்த மகன் திரு. கோபாலகிருஷ்ணன்.



ஆயர்பாடி ஆழ்வார்கள் ஆச்சிரமத்தில் பெற்றோல்மக்ஸ் வெளிச்சத்தில் ஸ்ரீராம நவமி திருநாளில் ஸ்ரீராம பட்டாபிஷேகம் செய்து திருமுடியை எல்லோர் தலையிலும் சூட்ட முன் தன் தலையிலும் சூட்டுதல்.

ஸ்ரீராமஜெயம்

# ஆயர்பாடி குடும்ப விருட்சம்

| | |
|---|---|
| வேலுப்பிள்ளை - தம்பு<br>தம்பு - மாணிக்கம் | மயில்வாகனம்<br>கதிராசிப்பிள்ளை<br>கந்தையா<br>சரஸ்வதி |
| இளையதம்பி<br>இளையதம்பி - மாரிமுத்து | வீரசிங்கம்<br>வைத்தியலிங்கம்<br>இலட்சுமி<br>தெய்வானைப்பிள்ளை<br>வேலாயுதம் |
| தம்பு - மயில்வாகனம்<br>மயில்வாகனம் - இலட்சுமி | சறோஜினிதேவி<br>கோபாலகிருஷ்ணன்<br>ராமகிருஷ்ணன்<br>ஸ்ரீ கிருஷ்ணன்<br>ராதாதேவி<br>கிருஷ்ணதாசன்<br>ருக்குமணிதேவி<br>ஸ்ரீ ஆண்டாள் |
| கந்தையா தியாகராசா<br>தியாகராசா சறோஜினிதேவி | யசோதை |
| மயில்வாகனம் கோபாலகிருஷ்ணன்<br>கோபாலகிருஷ்ணன் நவமணி | மைதிலி<br>தாரணி |
| மயில்வாகனம் ராமகிருஷ்ணன்<br>ராமகிருஷ்ணன் கமலாதேவி | ரகுராம்<br>ஜெயராமன்<br>கிருஷ்ணி |
| மயில்வாகனம் ஸ்ரீ கிருஷ்ணன்<br>ஸ்ரீகிருஷ்ணன் கலாவதி | நந்தகுமாரன்<br>சாருஹாசினி |

மாணிக்கம் அன்னலிங்கம் — வைதேகி
அன்னலிங்கம் ராதாதேவி — ஜானகி

விஜயரட்ணம் நடராசா — வேங்கடரமணன்
நடராசா ருக்குமணிதேவி — ஸ்ரீரங்கரமணன்

மயில்வாகனம் கிருஷ்ணதாசன் — ராமதாசன்
கிருஷ்ணதாசன் சுசீலா

இரத்தினம் பாஸ்கரன் — ஸ்ரீரங்கனி
பாஸ்கரன் ஸ்ரீஆண்டாள் — ஸ்ரீ ரங்கராஜன்

* * * * *

ஸ்ரீராமஜெயம்

## மங்களம்

*பல்லவி*

ஸ்ரீராமச்சந்திரனுக்கு ஜயமங்களம் - நல்ல
திவ்விய முகச்சந்திரனுக்கு சுபமங்களம்

*அநுபல்லவி*

மாரா பிராமனுக்கு மன்னுபரந்தாமனுக்கு
ஈராறு நாமனுக்கு இரவிகுல சோமனுக்கு (ஸ்ரீராம)

*சரணம்*

கொண்டல் மணிவண்ணனுக்குக் கண்ணனுக்கு மங்களம்
கோசலை குமாரனுக்கு வீரனுக்கு மங்களம்
புண்டரீகத் தாளனுக்கு பூச்சக்கிர தாளனுக்குத்
தண்டுளவத் தோளனுக்கு சானகிம ணாளனுக்கு. (ஸ்ரீராம)

கோவை மணிவாயனுக்கு மாயனுக்கு மங்களம்
கோதண்டக்கையனுக்கு மெய்யனுக்கு மங்களம்
தாவுகுண சீலனுக்குச் சத்திய விலாசனுக்குத்
தேவர் அநுகூலனுக்குத் தசரதன் பாலனுக்கு (ஸ்ரீராம)

பகிரண்ட நாதனுக்கு வேதனுக்கு மங்களம்
பரதனாம் அன்பனுக்கு முன்பனுக்கு மங்களம்
சகல உல்லாசனுக்குத் தருமந்தகாசனுக்கு
அகிலவிலாசனுக்கு அயோத்தியா வாசனுக்கு (ஸ்ரீராம)

171

ஓம் ஸ்ரீராமஜெயம்

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத்தலைவர் ஆயர்பாடி ஆழ்வார். *ஸ்ரீ.வே.த.மயில்வாகனம்* அவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்து வானகம் ஏகியபோது பல வழிகளாலும் எமக்குதவிய அயலார், உற்றார், உறவினர், நண்பர்கள், தொலைபேசிமூலமும், தந்திமூலமாகவும் ஆறுதல் கூறியோர் போன்ற சகல அன்பு உள்ளங்களுக்கும்,

ஐயாவின் இறுதிக்காலத்தில் அவருடன் இருந்து சேவை செய்த அன்பர்கள், சிஷ்யர்கள், அடியார்கள், வாகன உதவி அளித்த சீமான்கள், எது தேவையோ அதைச் செய்து தரக் காத்திருக்கிறோம் என்று திரண்டுவந்து உதவிபுரிந்த பெருந்தகைகளுக்கும்,

ஐயாவின் வைகுந்ததிலகம் நூலுக்கு சிறந்த பல கட்டுரைகளை உளமகிழ்வுடன் அளித்தோர்க்கும், அந்நூலை திறம்பட கணனி வடிவமைப்புச் செய்த அன்புள்ளங்களுக்கும், ஐயாவின் நிழற்பிரதியை வர்ணத்தில் அமைத்த திறனாளற்கும், அச்சேற்றி புத்தக உரு ஆக்கிய அச்சாலையினருக்கும்,

மற்றும் இதனுடன் தொடர்புடைய யாவருக்கும்,

எமது உளங்கனிந்த மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஐயா அவர்கள் சொல்வதுபோன்று ஸ்ரீசீதாராம திருப்பாதங்கள் உங்களையும், எங்களையும், யாவரையும் இரட்சித்துக் காப்பாற்றும். எங்கள் எண்ணங்கள் செயல்கள், உடைமைகள் யாவுமே ஸ்ரீ சீதாராம திருப்பாதங்களுக்கு அர்ப்பணமாகட்டும்.

ஓம் ஸ்ரீராமஜெயம்

இங்ஙனம்

28 A, Aponso Avenue,
Dehiwela
Sri Lanka

**திருமதி. லட்சுமி மயில்வாகனம்**
**பிள்ளைகள் - மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்**

*நிரந்தர முகவரி :– "ஆயர்பாடி", மாவிட்டபுரம், தெல்லிப்பளை* P.O

---

**ரகுபதி ராகவ ராஜாராம் - பதீதபாவன சீதாராம்**
**ராம ராம ஜெய ராஜாராம் - ராம ராம ஜெய சீதாராம்**
**ஓம் ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம்.**

---